கல்கி

KALKI 10.1.99 ரூ. 4.50



புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்!

சந்தோஷம்

ஸ்ரீ கந்தசுவாமி பர்மனெண்ட் பண்டு லிமிடெட்

SRI KANDASWAMY PERMANENT FUND LTD.
CHENNAI-2.



சென்னை
மாநகர
சொத்துக்கள் மீதும்
நகைகள் மீதும்
கடன் வழங்கப்
படும்!

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்

Regd & H.O: 28, அக்ரஹாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002, ☎: 8585918, 8548917, 8527573

B.O: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை - 15 ☎: 4359569

அண்ணா நகர் கிளை முகவரி:
B.O: 42. சிந்தூர்ஷாப்பிங் சென்டர், முதல் தளம்,
II அவென்யூ,
(ஐயப்பன் கோவில் அடுத்து)அண்ணாநகர்,
சென்னை – 600 040.
☎: 6263550, 6220649




சேர்மன்
Dr. P. பாலசுப்பிரமணியம்
சீனியர் டிரஸ்ட்டி கந்தகோட்டம்,
சென்னை - 3.



உறுப்பினராகி பயன்பெறுவீர்! விடுமுறை: வெள்ளி

நம்பிக்கை • நாணயம் • பாதுகாப்பு

குழந்தைகள் பெண்கள் ஆண்கள்; பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், சினிமா பிரபலங்கள்...



• சுந்தர ராமசாமி

தமிழ் இலக்கியவாதிகள் நாலு பேர் ஒன்றாகச் சேர்ந்தாலே அங்கொரு உலக யுத்தம் ஆரம்பித்து விடும். (கருத்து மோதல் என்று நாகரிகமாகச் சொல்வார்கள்.) ஆனால், நாலு பேரல்ல; நானூறு பேர் ஒன்றாகச் சேர்ந்து ஓர் உற்சவம் கொண்டாடினார்கள், கடந்த வாரம். தற்காலத் தமிழ் இலக்கியத்தின் மூலவர்கள் என்று சொல்லத்தக்கவர்களுள் முக்கியமானவர் சுந்தரராமசாமி. 'ஒரு புளியமரத்தின் கதை', 'ஜே.ஜே: சில குறிப்புகள்' என்கிற இவரது இரு

• வந்திருந்தோரில் ஒரு பகுதி



நாவல்களும் இலக்கிய ரசிகர்கள் எப்போதும் விரும்பும் விருந்து. சுமார் இருபது வருட இடைவெளிக்குப் பிறகு சுந்தர ராமசாமியின் மூன்றாவது நாவல் (குழந்தைகள், பெண்கள், ஆண்கள்) தற்போது வெளியாகியிருக்கிறது.

இந்த நாவல் தவிர க. ராவின் பேட்டிகள், விமரிசனங்கள், கட்டுரைகள் அடங்கிய ஒரு தொகுப்பு நூல் ('விரிவும் ஆழமும் தேடி'), புதுமைப்பித்தனின் இதுவரை அச்சில் வராத படைப்புகளின் தொகுப்பு (அன்னை இட்ட தீ), மனுஷ்யபுத்திரனின் கவிதைத் தொகுப்பு என நான்கு நூல்களின் வெளியீட்டு விழா சென்னை 'புக் பாயின்ட்' அரங்கில் நடந்தது. சரித்திரம் காணாத விதமாகப் பழைய எழுத்தாளர்கள், புதிய எழுத்தாளர்கள், நவீன எழுத்தாளர்கள், 'பின் நவீன' எழுத்தாளர்கள், நான்-லீனியர் கோஷ்டி, புரட்சி எழுத்தாளர்கள், எழுத்துப் புரட்சியாளர்கள், மரபு - புதுக் கவிஞர்கள், நவீன ஓவியர்கள், பத்திரிகையாளர்கள் - அட, சில சினிமாக்காரர்கள் என்று எல்லா நதிகளும் சங்கமித்தன.

நாற்காலிகள் நிரம்பி, தரையில் அமர்ந்தவர்களுக்கும் சுவர் ஓரங்களிலும் அரங்குக்கு வெளியேயும் நின்று கொண்டிருந்தவர்களுக்கும் புன்னகை முகத்துடன் சுந்தர ராமசாமியின் மகனும் மகளும் காப்பி, டீ, பிஸ்கட், குடிதண்ணீர் என்று சளைக்காமல் தாமே எடுத்து வந்து வழங்கியது கண்கொள்ளாக் காட்சி. ("எழுத்தாளனுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் அது சுந்தர ராமசாமியின் பிள்ளை போல இருக்கணும்" - நம்மிடம் இப்படிச் சொன்னவர் பிரபஞ்சன்)

க.ரா. பேச்சில், அவரது கதையல்லாத எழுத்துகளில் தென்படும் அதே காரம், அதே உக்கிரம், அதே ஆற்றாமை.

புதுமைப்பித்தனின் அச்சில் வராத படைப்புகளைத் தொகுத்திருந்த பதிப்பாசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதியைப் பாராட்டிப் பேசும்போது, "இவரது உழைப்பில் உண்மை, நேர்மை, துணிவு, சத்தியம், தெளிவு, அர்ப்பணிப்பு என எல்லா அம்சங்களும் தெரிகின்றன. ஆனால், இந்தச் சொற்கள் தகுதியற்ற நபர்களை நோக்கியே திரும்பத் திரும்ப வீசப்பட்டு அவற்றின் அர்த்தம் சிதைந்து போய் விட்டது. சலபதியைப் பாராட்டப் புதிய சொற்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

சுந்தரராமசாமியின் நாவலைப் பற்றிப் பேச வந்த ஜெயகாந்தன், ஜெயமோகனின் 'விஷ்ணுபுர'த்தைப் போகிறபோக்கில் ஒரு பிடி பிடித்தார். இப்போதெல்லாம் 'விஷ்ணுபுர'த்தைப் போற்றியோ தூற்றியோ நாலு வரி யாரேனும் பேசாமல் எந்த இலக்கியக் கூட்டமும் முழுமை அடைவதில்லை என்றாகிவிட்டது! இங்கே ஒரு வித்தியாசம் என்னவென்றால், ஜெயமோகனையும் எதிரே உட்கார வைத்துக் கொண்டு, அவர் தம்மிடம் நாவலைப் படிக்கச் சொல்லிக் கொடுத்த கதையையும், படிக்கத் தொடங்கியபோது, நாவல் தன் கதவுகளை 'படார் படார்' என்று மூடிக் கொண்ட விதத்தையும் சவிஸ்தாரமாகச் சொன்னார் ஜேகே. தவிர்த்திருக்கலாம்.

தவிர்த்திருக்க வேண்டிய இன்னொரு விஷயம், மனுஷ்யபுத்திரனின் கவிதை நூல் பற்றிப் பேச வந்த ஜெயமோகன், பிரிட்டிஷ் விமர்சன மரபின் அதி உன்னதங்கள் பற்றி லெக்சர் அடித்து, தன்னை அந்த வம்சாவளியின் அற்புதக் கொழுந்தாகக் குறிப்பிட்டுக் கொண்டது. (வழக்கம் போல, கவிதைத் தொகுப்பு தமக்கு திருப்தி தரவில்லை என்பதையும் கடைசி பேராவில் சொல்லி விட்டார்.)

சப்ஜெக்டை விட்டு நகராமல், சுருக்கமாகவும் சிறப்பாகவும் பேசியவர்கள் சுகுமாரனும் பிரபஞ்சனும்.

கூட்டம் முடிந்ததும், அன்று வெளியான நான்கு நவீன இலக்கிய நூல்களும் 'ஹாட் கேக்'காக விற்றுத் தீர்ந்தன.

ஆச்சர்யங்களுக்குக் குறைவில்லாத அன்னைத் தமிழ்நாடு.

— ஔரங்கசீப்

படங்கள் : ஸ்நேகிதன்



''பொதுமக்களிடமிருந்து வந்த மனுக்கள் நாலு பீரோ நிறைய இருக்கு! என்ன ஸார் செய்ய?''

''போகி அன்னைக்கு ஒரு வழி பண்ணிடலாம்!''

– உ. ராஜாஜி



கல்கி

அடுத்த வாரம்

பொங்கல் இதழ்

திருமணச் சிறப்பிதழாக மலர்கிறது!

2 புத்தகங்கள்!

விறுவிறுப்பான புதிய பகுதிகளுக்குக் காத்திருங்கள்!



• சந்திரபாபு நாயுடு

தனிப்பட்ட முறையில் தேர்தல் வெற்றி ஒரு இழப்பிற்கு வழி செய்து விட்டது. ஆம்! தேர்தலில் வெற்றி பெற்றால் மாமிசம் சாப்பிடுவதை விட்டு விடுவதாய்த் தனக்குத்தானே சபதம் செய்து கொண்டார் அவர். தேர்தலில் ஜெயித்து விட்டதால், மாமிசத்துக்கு குட்பை சொல்ல வேண்டியதாகி விட்டது!

● இந்திய மாநில முதல்வர்களில் 'கம்ப்யூட்டர் முதல்வர்' என அழைக்கப்படும் சந்திரபாபு நாயுடுவைப் பார்த்துவிட்டு, இன்னொருவருக்கும் கம்ப்யூட்டர் காதல் பிறந்து விட்டது. அவர் உ.பி. முதல்வர் கல்யாண் சிங். அவரும் ஒரு பர்சனல் கம்ப்யூட்டர் வாங்கி வைத்துக் கொண்டு விட்டார். மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி அத்தனை விவரங்களும் இப்போது அந்த பி.சி.யில்தான்! இரவு நேரங்களில், மற்ற வேலைகள் முடிந்த பின், கம்ப்யூட்டரில் மூழ்கி விடுகிறார் கல்யாண் சிங். உ.பி. மாநில தலைமைச் செயலாளரும் ஒரு லாப்-டாப் கம்ப்யூட்டர் சகிதம்தான் காணப்படுகிறார்.

● பீகார் மத்திய சிறை, குப்பைக் கூளங்களுடன் அழுதுவடியும் நிலையிலிருந்து மாறி, சுத்தமாய் இப்போது காணப்படுகிறது. காரணம் பீகார் முந்நாள்

• கல்யாண் சிங்



• லாலு



முதல்வர் லாலு இந்தச் சிறையில்தான் இப்போது இருக்கிறார். அவருக்கு ஜாமீன் மறுக்கப்பட்டு, ஜெயிலிலேயே தொடர்ந்தால், ஜெயில் சுத்தமாயிருக்குமே என்று கிசுகிசுக்கிறார்கள் மற்ற கைதிகள்! இன்னொரு சுவாரசியமான சேதி: இந்த ஜெயில் வளாகத்தைத் துவக்கி வைத்தவர்

● மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சர் திக் விஜய் சிங்கிற்கு, தேர்தலில் பெற்ற அமோக வெற்றி, 'திக்கி ராஜா' என்ற பெயரைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. என்றாலும்,

சாட்சாத் லாலுவேதான்!

● த்ரினமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி ரொம்ப ஷார்ப். மே. வங்காளத்தில் உள்ள சில அரசியல் கட்சிகளை இணைத்து ஒரு முன்னணி வைப்பது பற்றிய பேச்சு வந்தது. முன்னணிக்கு என்ன பெயர் வைப்பது என்ற கேள்வி எழுந்தபோது, 'மூன்றாவது அணி, நான்காவது அணி' என்றெல்லாம் ஐடியா சொன்னார்கள். மம்தாவோ, "மக்களை மறந்து விட்டு என்ன அரசியல் வேண்டிக்கிடக்கிறது? 'மக்கள் முன்னணி' என்று பெயர் வைக்கலாம்" என்று சொல்லி விட்டார்.

● "கடந்த தேர்தலின்போது, நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று, அயராமல் தேர்தல் பிரசாரம் செய்து, காங்கிரஸ் கட்சியை வெற்றி பெறச் செய்தவர் சோனியா காந்தி. இதற்காக அவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்" என்று ஐஸ் மழை பொழிந்திருப்பவர் காங்கிரஸ்காரர் ஒருவர் என தவறாக நினைத்து விடாதீர்கள். பா.ஜ.கட்சி எம்.பியான சத்ருகன் சின்ஹா!

● அண்மையில் முந்நாள் இந்தியப் பிரதமர் சந்திரசேகரை ஒரு புத்தக வெளியீட்டு விழாவுக்கு அழைத்திருந்தார்கள். காந்திஜி, அம்பேத்கர் இருவரையும் ஒப்பிட்டுக் கூறும் புத்தகம் அது. விழாவில் சந்திரசேகர், "காந்திஜி, அம்பேத்கர் இருவரது பாதைகளும் வெவ்வேறானவை. அவர்கள் இருவரையும் ஒப்பிடுவது கூடாது. இது போன்ற ஒரு புத்தகம் வேண்டாத வேலை" என்று ஒரு பிடி பிடித்து விட்டார்.

● 'ஸ்டார்' எம்.பியான வினோத் கன்னா, மகளிருக்கான முப்பத்தி மூணு சதவீத இட ஒதுக்கீடு பற்றித் தம் நெருங்கிய சகா எம்.பி. ஒருவருடன் பேசும்போது, "மகளிருக்காக இட ஒதுக்கீடு என்பதில் எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை. ஆனால் தேர்தலில் நிற்கிற பெண்கள், முப்பது வயதுக்குள் இருக்க வேண்டும் என்று கண்டிஷன் போட வேண்டும்" என்று சொன்னாராம்! நல்ல காலம், மம்தா பானர்ஜி பக்கத்தில் இல்லை. இருந்தால் வினோத் கன்னாவை ஒரு மொத்து மொத்தியிருப்பார்!


● வெங்காயத்தைக் காட்டி ஆட்சியைப் பிடித்த ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், பதவி ஏற்றதும் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பிரச்னை எது தெரியுமா? மின்சார சப்ளைதான். தேசிய தெர்மல் பவர் கார்ப்பரேஷன் ராஜஸ்தானுக்கு மின்சாரம் வழங்குவதையே நிறுத்த முடிவெடுக்கும் அளவுக்குப் பிரச்னை விஸ்வரூபம் எடுத்து விட, வெங்காயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது!

— நியூஸ் பையன்

• மம்தா



• வினோத் கன்னா



• சோனியா



சோனியாவைப் பாராட்டிய பா.ஜ.க. எம்.பி!

உத்தரா பரத் என்ற பெண்மணி அப்போதுதான் பட்டப்படிப்பை முடித்திருந்தார். அவருக்கு அமெரிக்காவிலுள்ள 'எகோயிங் க்ரீன் பவுண்டேஷன்' என்ற அமைப்பு உதவித்தொகை அளித்தது – சென்னையில் நோய்த் தடுப்பு ஆலோசனைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த.

மதுரையிலிருந்து சென்னை வந்திருந்த ஜீவானந்தமும் அவரது நண்பர்களும் வீதி நாடகங்கள் மூலம் படிப்பறிவற்ற மக்களுக்கு உடல் நலம் குறித்த ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தனர். இவர்களை உத்தரா சந்திக்க, 'நலந்தானா?' அமைப்பு பிறந்தது.

ஐந்து வருடங்களில் எய்ட்ஸ் விழிப்புணர்வு, தற்கொலைத் தடுப்பு, பஞ்சாயத்துத் தேர்தலில் பெண்கள் பங்கு, குழந்தைகள் உரிமை – இப்படிப் பல ஆக்கபூர்வமான விஷயங்களைத் தங்கள் வீதிநாடகங்கள் மூலம் பிரசாரம் செய்திருக்கிறது 'நலந்தானா'.

'நீ பாடினால் உலகமும் உன்னோடு சேர்ந்து பாடும். நீ உபதேசம் செய்யத் தொடங்கினால் தனியாளாகவே நிற்பாய்' என்பதை உணர்ந்து கணிசமான அளவில் பொழுதுபோக்கு அம்சங்களையும் இணைத்து நாடகங்களை வழங்குகிறது இந்த அமைப்பு. தவிர, 'சமூகமாற்றத்துக்கு வழி வகுக்கும் ஒரு வேலை இலவசமாகத்தான் செய்யப்பட வேண்டுமென்பது கட்டாயமில்லையே' என்ற அடிப்படையில் இதில் பொறுப்பேற்பவர்களுக்குக் கணிசமான மாதச் சம்பளமும் வழங்கப்படுகிறதாம்.

வருமானம்? அரசு மற்றும் யூனிசெப் போன்ற சமூகநல அமைப்புகள் அளிக்கும் தொகைதான்.

"நாடகத்துக்கு முன்னும் பின்னும் அந்தப் பகுதி மக்களிடம் நேர்காணல் மூலம் சில தகவல்களைச் சேகரிப்பது எங்கள் ஸ்பெஷாலிடி. இதன் மூலம் நாடகத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட செய்தி அவர்களை அடைந்திருக்கிறதா என்பதைக் கணிக்க முடிகிறது" என்றார் அமைப்பின் மேனேஜிங் ட்ரஸ்டியான நித்யா பாலாஜி. குழந்தைகள் உரிமை குறித்துத் தங்கள் அமைப்பு ஏற்பாடு செய்த நாடகத்தை ஒரு உதாரணமாக விளக்கினார்.

"குழந்தைகளின் உரிமைகளையும் விளக்க வேண்டும். அதேசமயம் பெற்றோர், ஆசிரியர்கள் போன்றவர்களையும் தாக்குவதாக அவர்கள் நினைக்கக் கூடாது. எனவே கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்மீது வைப்பதுபோல் செயல்பட வேண்டியிருந்தது. குழந்தைகளைக் கவர ஒரு ஜீபூம்பா பாத்திரத்தை உருவாக்கினோம். முதலில் நாடகத்தைக் குழந்தைகளுக்குப் போட்டுக் காண்பித்து, பிறகு அவர்களில் பெரும்பாலானவர்கள் போகும் பள்ளிக்குச் சென்று அந்த நாடகத்தை நடத்தினோம். அதற்குப் பிறகு அவர்கள் பெற்றோருடன் கலந்து உரை

• விழிப்புணர்வு நாடகம்...



• உடனே அப் நடக்கிறது....



வீதி வீதியாகச் சென்று விழிப்புணர்வுப் பிரசாரம்!

யாடினோம். இதன் மூலமாக கல்வி உரிமை, பெற்றோர் மற்றும் ஆசிரியரால் கொடுமைப் படுத்தப்படாமல் இருக்கும் உரிமை, வேலைக்கு அனுப்பப்படாமல் இருக்கும் உரிமை ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு அளிக்க முடிந்தது; அதை அவர்கள் பெற்றோருக்கும் புரிய வைக்க முடிந்தது."

இந்த வீதிநாடகங்களின்போது ஏற்பட்ட சில சுவையான அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார் ஜீவானந்தம்.

"எய்ட்ஸுக்கெதிரான பிரசார நாடகத்தில் ஆணுறை பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துவோம். இலவசமாக ஆணுறைகளையும் அளிப்போம். ஆனால் அதற்கு அடுத்தநாள் எங்கள் வழக்கப்படி அவர்களிடம் பேசிப் பார்த்தபோது, அந்தச் சேரியில் இருந்த மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஆணுறையை எப்படிப் பயன்படுத்துவது என்பதே தெரியாது என்பது. பிறகு அதுபற்றி விளக்கினோம். இது போன்ற விளக்கங்களை நாடகத்தில் கூற முடியாது. ஆனால் ஃபாலோ - அப்பில் இது முடிந்தது. தர்மபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைக்கு எதிரான நாடகம் நடத்தியபோது ஒரு பெண்மணி குமுறிக் குமுறி அழுதார். தமது மகளைச் சில மாதங்களுக்கு முன்தான் அவர் கொன்றாராம்!

மிக வித்தியாசமாக வாதம் செய்பவர்களையும் சந்தித்ததுண்டு. ஒரு ஓய்வு பெற்ற தொலைபேசி ஆசாமி, "எய்ட்ஸ் என்பதே ஒரு மாயை. யாராவது எய்ட்ஸினால் செத்திருக்கிறார்களா? வேறு ஏதோ நோயால் தாக்கப்பட்டு இறக்கும்போது இந்த ஹெச்.ஐ.வி. கிருமியால்தான் அந்த சாவு என்று சொல்லி விடுகிறார்கள். 'மெட்ராஸ் ஐ' தானாக உருவாவது அல்ல. கண் மருந்துக் கம்பெனிக்காரர்கள் குறிப்பிட்ட சமயத்தில் வேண்டுமென்றே காற்றில் சில ரசாயனங்களைக் கலந்து விடுகிறார்கள். இதனால் கண் பாதிக்கப்பட்டவுடன் அவர்களது தயாரிப்புகளை நாம் வாங்கத் தொடங்கி விடுகிறோமே" என்றெல்லாம் பேசி திடுக்கிட வைத்தார்!

இன்னொரு சமயம், நாடகம் முடிந்த மறுநாள் நாடகம் பார்த்திருந்த ஒரு பெண்மணியிடம் எய்ட்ஸ் குறித்து சில விளக்கங்களைக் கூறியபோது அவரது கணவர் வேகமாக வந்து 'என்னய்யா இதையெல்லாம் என் பொண்டாட்டிகிட்டே சொல்றீங்க? அவ என்ன காசுக்குச் சோரம் போறவளா?' என்று கத்தியதுண்டு."

இப்படியெல்லாம் இருந்தாலும் சாதனைகள் அந்த சோதனைகளை மறக்கடித்து விடுகின்றன. சமீபத்தில் சென்னை இந்திரா நகரை அடுத்துள்ள சேரி ஒன்றில் பெண்கள் மார்புப் புற்றுநோய் பற்றி அறிந்து இருக்க வேண்டும் என்பதை வலி யுறுத்தும் வீதி நாடகத்தை நடத்தி விட்டு, அதன் முடிவில், வந்திருந்த பெண்மணிகளுக்கு ஒரு சீட்டைக் கொடுத்து இதை அருகிலுள்ள அடையார் புற்றுநோய் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால் அங்கு இலவசமாகப் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை செய்வார்கள்' என்றிருக்கிறார்கள். (அந்த மருத்துவ மனைதான் இந்த நாடகம் நடத்த ஸ்பான்ஸர் செய்திருந்தது) அடுத்தநாள் ஐம்பது பெண்கள் இந்தச் சீட்டோடு மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள்!



• நித்யா பாலாஜி

'கட்சி மற்றும் மதப் பிரசாரங்களை ஒருபோதும் செய்ய மாட்டோம்' என்ற கொள்கையாலும் இந்த அமைப்பு உறுதியாக இருக்கிறது.

— அருண்சரண்யா




"தெய்வங்களும் மனிதர்களும்" என்று அறிவித்தது கண்காட்சியின் முகப்புவாசல்.

ஓவியங்கள் கண்ணைக் கவர்ந்தன. வித்தியாசமான கேரள பாணி உருவங்கள் என்பதால் மட்டுமல்ல; சிவப்பு, மஞ்சள், கறுப்பு போன்ற பளீர் வண்ணங்கள் அதிகமாக அவற்றில் பயன்படுத்தப் பட்டிருந்ததாலும்கூட!

நீண்ட வெள்ளைத் தாடியை அவ்வப்போது அளைந்துகொண்டு அலாதிப் பெருமையுடன் அவற்றை நமக்கு விளக்கத் தொடங்கினார் ஓவியர் கே.என். நம்பியார்.

"கேரளாவில் மலபார் பகுதியில்தான் நான் வளர்ந்தேன். அங்கெல்லாம் சுமார் ஐந்நூறு தெய்வங்கள் உண்டு. இவற்றை இரண்டாம் வரிசை தெய்வங்கள் என்று சொல்லலாம். ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு கர்ணபரம்பரைக் கதையும், பல நாடோடிப் பாடல்களும் உண்டு. கோயில் விழாக்களின்போது மனிதர்களே

ஆக்ரோஷ தெய்வங்கள்!



• நம்பியார்



தெய்வம் போல் பிரும்மாண்ட உடை தரித்து ஆடுவார்கள். அதைப் பார்த்த பாதிப்பின் விளைவுதான் இந்த ஓவியங்கள். கலைஞனுக்கே உள்ள சில சலுகைகளைக் கொண்டு, கொஞ்சம் கற்பனையையும் கலந்திருக்கிறேன்."

பெரும்பாலான தெய்வங்கள் ஆக்ரோஷமாகக் காணப்பட்டன. இடுப்பில் தீப்பந்தங்கள், உடலில் நாகங்கள் இப்படி. பெண் தெய்வங்கள் எல்லாம் வெற்று மார்போடு இருந்தனர் (கலைஞனுக்கே உள்ள சலுகை?). தெய்வங்களின் கம்பீர மேல்நோக்கிய பார்வையை ஒரு சேவலாகவே

சித்திரித்திருந்த ஓவியம் அதிக உயிர்ப்புடன் இருந்தது!

என்றாலும் 'தெய்வங்களை' விட அவரது படைப்புகளில் 'மனிதர்கள்' அதிகம் சேர்த்தார்கள். அத்தனை மனிதர்களும் ஆதிவாசிகள். இயல்பும், தனித்தன்மையும் துல்லியமாக அவற்றில் வெளிப்பட்டன.

மலபாரில் பிறந்திருந்தாலும் கடந்த நாற்பது வருடங்களாக ஊட்டிப் பகுதியில் வாழ்ந்ததில், அங்குள்ள தோடர்கள், குறும்பர்கள், காட்டுநாயக்கர்கள் ஆகிய ஆதிவாசிகளின் வாழ்க்கை முறையைக் கூர்ந்து கவனித்திருக்கிறார்.



ஓர் ஓவியத்தில் நகரின் கடைத்தெருவில் நுழைந்து பரவி கண்ணில் பட்டதையெல்லாம் வாங்கித் தள்ளுகிறார்கள். வேறு சில ஓவியங்களில் பால் கறக்கிறார்கள். ஐந்து ஜடை அணிந்த பெண்கள் உல்லாச நடனம் ஆடுகிறார்கள். கொஞ்சமாக வம்பு பேசுகிறார்கள். 'தலைமுறை இடைவெளி' என்ற தலைப்பு கொண்ட ஓவியத்தில் வெவ்வேறு வயதிலுள்ள நான்கு பெண்கள். உடை மற்றும் நகைகளுக்கிடையே உள்ள மாற்றம் அழகாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் நால்வருமே வெகு எளிமையாகத் தோற்றமளிக்கிறார்கள்.

"மரியாதையான வந்தனம்" என்ற ஓவியத்தில் இளமங்கை ஒருத்தி மண்டியிட்டு வணங்கி நிற்க, அவளது தலையின்மேல் தன் வலக்காலை வைத்து ஆசி கூறுகிறார் கிழவர்.

"தோடர்கள் எப்போதுமே ஒரு ஷாலைச் சுற்றிக்கொண்டு காட்சி அளிப்பார்கள். மற்ற ஆதிவாசிகளைப் போல் இல்லாமல் அவர்கள் உடலமைப்பு - முக்கியமாக மூக்கு - கிரேக்கர்களைப் போன்று இருக்கும். அவர்களுக்கு எருமை மாடுதான் தெய்வம். எருமை மாட்டு நெய்தான் அவர்கள் தலையில் தடவிக் கொள்வது. பனியர்களில் வயதான பெண்கள் கூட நடனத்தில் பங்கெடுத்துக் கொள்வார்கள். விடிய விடிய நடக்கும் அந்த ஆட்டத்தின்போது அவர்கள் கண்கள் மூடியபடியே இருக்கும்" என்று நம்பியார் தமது ஓவியங்களைக் காட்டியபடி புராணம் படித்தார்.

தங்கள் பூர்வ குடியிருப்புப் பகுதிகளிலிருந்து விலகி வாழ நேர்ந்தாலும் அந்த ஆதிவாசிகளுக்கு ஓவியத்தில் இடம் கிடைத்திருக்கிறது.

— ஜி.எஸ்.எஸ்.

"சொர்க்கத்துக்குப் போனால் 'ரெஸ்ட்'தானே?"

அன்னை தெரசாவுடன் 1967 முதல் நெருக்கமாகப் பழகியவர் சுனிதா குமார். அன்னையின் இளமைக்காலம், அன்னையுடன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இவை பற்றியெல்லாம், விரிவாக ஒரு புத்தகம் எழுதியுள்ளார். தலைப்பு: மதர் தெரசா ஆஃப் கல்கத்தா. சுவையான அந்தப் புத்தகத்திலிருந்து கொஞ்சம் இங்கே :

1967-ம் வருடம், அன்னையின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஒரு வாலண்டியராக, அவருடைய பணிகளில் உதவுகிற வாய்ப்பு எனக்குத் தரப்பட்டது. வாரம் ஒரு தடவை தொழு நோயாளிகள் இல்லத்துக்குப் போய், அவர்களுக்கு பாண்டேஜ் போடுவது, அவர்கள் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை பாக்கெட்களில் போட்டு விநியோகிப்பது போன்ற பணிகளில் நானும் ஈடுபட்டேன். அன்னையின் மலர்ந்த புன்னகையுடன் கூடிய முகத்தைப் பார்த்துக் கொண்டே வேலை செய்வது என்பது மகத்தான அனுபவம்! அவருடன் முதல் முறையாக நான் கைகுலுக்கிய போது மின் அதிர்வு என்னுள்ளே பாய்வது போல நான் உணர்ந்தேன்.

அவர் எப்போதுமே மென்மையாகத்தான் பேசுவார். டென்ஷனாகிக் கத்தியோ, கோபப்பட்டோ அவரை நான் பார்த்ததே கிடையாது. அவசியப்படும் நேரங்களில், தெளிவான, அழுத்தமான குரலில் அவர் பேசியதையும் நான் கவனித்




திருக்கிறேன்.

அவரது வாழ்க்கை எளிமையின் உதாரணம். ஏழை மக்களுக்குக் கிடைக்கிற வசதிகள் என்னென்னவோ, அதுவே தனக்குப் போதுமானது என்பார் அவர். அன்னை தங்கியிருந்த இடம், பன்னிரண்டுக்கு எட்டு அடி கொண்ட ஓர் அறை. அதில் ஒரு சாதாரண மேஜை போடப்பட்டிருக்கும். நாற்காலி கூட இருக்காது. வெறும் ஸ்டூல்தான். மின்சார விசிறி கூடக் கிடையாது. அவரது அறைக்குக் கீழேதான் சமையலறை. அதனால் அன்னையின் அறை எப்போதுமே சற்று வெப்பமாகவே இருக்கும். கொளுத்தும் கோடை நாட்களில், இந்த அறையில், ஒரு ஃபேன் கூட இல்லாமல் எப்படி இவரால் இருக்க முடிகிறது என்று நான் வியந்தது உண்டு.

தம் அறையில் டெலிபோன் அவசியம் என்பார் அவர். யாரும், எந்த நேரத்திலும் தன்னுடன் தொடர்பு கொள்ள வசதியாய் அது தேவை என்பார். டெலிபோனை எடுத்தவுடன், நேயமுடன் 'எஸ்' என்ற அவர் குரலைக் கேட்டவுடனேயே பிரச்னைகள் தீர்ந்து விட்டது போன்ற உணர்வு பலருக்கு ஏற்பட்டுவிடும்.

உணவு விஷயத்தில் கூட, கல்கத்தாவில் வசிக்கிற ஏழைக்கும் தனக்கும் வித்தியாசம் இருக்கக் கூடாது என நினைப்பார். ஒரே ஒரு சப்பாத்தி, பருப்பு அல்லது காய்கறி இதுவே அவரது உணவு. அவருக்கு நெருக்கமான ஒரு டாக்டர், "நீங்கள் நன்றாகச் சாப்பிட்டு, உடம்பு தெம்பாக இருந்தால்தானே மற்றவர்களுக்காக உழைக்க முடியும்?" என்று அடிக்கடி கண்டிப்புடன் கூறி, அன்னையின் உணவுப் பழக்கங்களில் சில மாறுதல்களைக் கொண்டு வந்தார். அதன் பின், காலையில் டீயுடன் கூட வாழைப்பழம் சாப்பிடவும் மதிய உணவாகக் கொஞ்சம் சாதமும், அவ்வப்போது காய்கறிகளுடன் முட்டை அல்லது மாமிசம் கொஞ்சம் போல சேர்த்துக் கொள்ளவும் தொடங்கினார்.



ஒருமுறை அவர் அயல் நாட்டுப் பயணம் மேற்கொண்டபோது, உடன் சென்றிருந்தேன். பல மணி நேரப் பயணத்துக்குப் பின்பும் அவர் சோர்வடையாதது எனக்கு ஆச்சரியம் தந்தது. அவருக்கு ஈடுகொடுத்து என்னால் செயல்பட முடியவில்லை. "உங்களுக்கு மட்டும் இது எப்படி சாத்தியமாகிறது?" என்று நான் அவரைக் கேட்டபோது, "என் மனத்தை நான் பிரார்த்தனையால் நிரப்பி விடுகிறேன். அதிலிருந்து எனக்குத் தொடர்ந்து சக்தி கிடைத்துக் கொண்டே இருக்கிறது" என்று அவர் சொன்ன பதில், என்னை நெகிழ வைத்தது.

ஒரு சமயம், ஒரு நோயாளியின் அருவருக்கத் தக்க ஒரு புண்ணை, அன்னை தம் கைகளால் தொட்டு சுத்தம் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஒருவர், "ஆயிரம் ரூபாய் கொடுத்தால் கூட நான் இப்படி செய்ய மாட்டேன்!" என்றார். அதைக் கேட்ட அன்னை, என்ன பதில் சொன்னார் தெரியுமா? "நான் கூடச் செய்ய மாட்டேன். ஆனால், யேசுவுக்காக செய்வதற்குத் தயங்க மாட்டேன்"

சேவை என்று வந்து விட்டால், சாப்பாட்டைக் கூடத் தவிர்த்து, வெறும் தண்ணீருடன் அதில் ஈடுபட வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்.

குடும்ப உறவுகளைத் துறந்து விட்டு, அவரது அமைப்பில் சேர்ந்து பணியாற்றியவர்களைத் தவிரவும், என்னைப் போன்ற பலர், அவருக்கு வாலண்டியர்களாய் இருந்தோம். எங்களிடம் பேசும்போதெல்லாம், 'உங்களுக்கெல்லாம் குடும்பப் பொறுப்புகள் உள்ளன. சமூக சேவை காரணமாக, உங்களுடைய குடும்பப் பொறுப்புகளை நீங்கள் செய்யத் தவறி விடக் கூடாது. அதற்கு முன்னுரிமை தர வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு' என்பார்.

அன்னை 'விடுமுறை' எடுத்துக் கொண்டதே கிடையாது. உங்களுக்கும் விடுமுறை, ஓய்வு இதெல்லாம் அவசியமாயிற்றே? என்றால், "தேவையில்லை. மரணத்துக்குப் பின் சுவர்க்கத்துக்குப் போனால் ரெஸ்ட் தானே?" என்று புன்னகைப்பார்!

தொகுப்பு : மானஸா

குறையொன்றுமில்லை



லக்ஷ்மியினுடைய குணங்களைச் சொன்னேன். அந்த லக்ஷ்மி கடாக்ஷம் ஒரு க்ஷணம் பட்டால் போதும் – சாமான்யனும் உயர்ந்து விடுவானே!

அந்த லக்ஷ்மி விசிஷ்டனான நாராயணனுடைய வக்ஷஸ்தலத்திலே என்றென்றும் விளங்கக் கூடிய 'என் திருமகள் சேர் மார்பனே!' என்று அவனை அழைக்கிறார் நம்மாழ்வார். லக்ஷ்மியோடு சேர்ந்தே அவன் தேவனாகிறான். அவளில்லை என்றால் அவனுக்குப் பெருமையில்லை. அவள் கடாக்ஷம் அவனுக்கே தெரியாது. அந்த கடாக்ஷப் பெருமையை அவனே உணர மாட்டான். ஏனென்றால் அவளுக்கே கூடத் தெரியாது அது!

குசேலர் கிருஷ்ணன் கிருஹத்துக்கு வந்த போது ருக்மிணி கேட்டாளாம் – "இந்த பிராமணோத்தமர் எந்த திக்கிலேயிருந்து வந்தார்...?" என்று.

சாதாரணமாக யாராவது வந்தால், 'எந்த ஊரிலிருந்து வந்தார்?' என்று கேட்போம். 'கிழக்கிலிருந்து வந்தாரா? மேற்கேயிருந்து வந்தாரா? வடக்கேயிருந்து வந்தாரா?' என்று திக்கைக் கேட்கிறவர் ஒருத்தரும் கிடையாது. ஆனால் இங்கே மஹாலக்ஷ்மியான ருக்மிணி எந்த திக்கு என்று கேட்கிறாள்!

கபட நாடக சூத்ரதாரியான பரமாத்மாவுக்கு மகாலக்ஷ்மியினுடைய திருவுள்ளம் நன்றாகத் தெரிந்து போயிற்று. உடனே என்ன பண்ணினான்... 'அந்தப் பக்கம்'.. என்று இரண்டு கைகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு கட்டிக் காட்டினானாம்!

குசேலர் குடிசை இருந்த திக்கை அவன் காண்பிக்க, இங்கே விசிறிக் கொண்டேயிருந்த மஹாலக்ஷ்மி அந்த திக்கிலே பார்த்தாளாம்... அவள் கடாக்ஷ வீக்ஷணத்தினாலே, எந்தெந்த திக்கெல்லாம் அவள் பார்வை போகிறதோ அந்தந்த திக்கெல்லாம் 'நான் முன்னே, நான் முன்னே' என்று போட்டி போட்டுக் கொண்டு ஐச்வர்யமெல்லாம் போய்விடுமே! குசேலர் வீட்டிலும் அதுதான் ஆயிற்று.

இப்படி அவள் கடாக்ஷ மகிமையைச் சொல்லி மாளாது. ஆகவே அந்த கடாக்ஷத்தை நாமெல்லோரும் பெற வேண்டும் என்பதற்காகவே பரமாத்மா லக்ஷ்மி கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

'ஹே நாராயணா! உன்னிடம் விளங்கக் கூடிய, ஹிதமாகவும் ரம்மியமாகவும் இருக்கும்படியான சுவர்ணம் போன்று பிரகாசிக்கும்படியான ஹரிணீம்...' என்று வர்ணிக்கிறது ஸ்துதி. ஹரிணீம் – ஜொலிக்கக் கூடியவள்! தங்க மயமான – சுவர்ண மயமான திருமேனி அவளுடையது.

திருக்கோவலூருக்கு மூன்று ஆழ்வார்கள் போனார்கள்... பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார். சாயங்கால வேளை. அஸ்தமன வேளை – ரொம்ப இருட்டு. ஏகமாக மழை, இடி, மின்னல்... இவர் என்ன பண்ணினார் – பொய்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


92



அருள்வாக்கு

எதிலும் மிகையாகப் போகாமல் நடுநிலைமையில் இருப்பதுதான் மிதம். ''மிதம்'' என்றால் ''அளக்கப்பட்ட'', ''அளவறிந்த'' என்று அர்த்தம். **Measured behaviour** என்று சொல்லும் போதும் எதிலும் தீவிரமாகப் பறக்காமல், நிதானமாக, கவனமாகச் செய்வதைத் தானே **measured** என்பது குறிக்கிறது? **Measured**- தான் மிதம். ''ஜ்யாமெட்ரி'' என்கிறோமே அது ''ஜ்யா-மிதி'' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தைதான். ''ஜ்யா'' என்றால் பூமி. ''மிதி'' என்பது 'மிதம்'தான் – அதாவது அளக்கிற விதிமுறை. யக்ஞத்தில் வேதிகை நிர்மாணம் முதலானதுகளுக்கு பூமியை அளப்பதிலிருந்தே ''ஜ்யாமெட்ரி'' உண்டாயிற்று. 'க்ஷேத்ரம்' என்றாலும் பூமிதான். அதனால்தான் இதற்கு 'க்ஷேத்ர கணிதம்' என்றும் பெயர் இருக்கிறது.

செய்கிற காரியம், பேசுகிற பேச்சு, ஸம்பாதிப்பது, செலவழிப்பது, புத்தியை ஓடவிட்டு நினைப்பது, அலைவது, சாப்பிடுவது, ட்ரெஸ் பண்ணிக் கொள்வது, பொழுதுபோக்கு எல்லாவற்றிலுமே, ஒவ்வொன்றிலுமே 'ஓவராக'ப் போய்விடாமல், மனஸ் எதற்கும் வசப்பட்டு விடாதபடி, அளவறிந்து **measured** ஆக வைத்துக் கொள்வதுதான் மிதம். எல்லாவற்றிலும் இப்படிப் பண்ணுகிற பழக்கம் வந்துவிட்டால் சித்தம் ஸமநிலையில் பரம சாந்தமாக ஆவதற்கு உதவும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

கையாழ்வார்... ஒரு வீட்டு வாசலில் ஒரு சின்ன இடம் – அது கதவோடு இருந்தது: அதற்குள்ளே நுழைந்து கதவைப் போட்டுக் கொண்டுவிட்டார் அவர்!

அதற்கடுத்து, அதே இடத்தில் அவரைப் பின் தொடர்ந்து பூதத்தாழ்வார் வந்தார். பொய்கையாழ்வார் இருந்த இடத்தில் கதவை இடித்தார். கதவைத் திறந்ததும் இவரும் அதே இடத்துக்குள் நுழைந்து விட்டார். அதற்கடுத்து பேயாழ்வார் வந்தார்... கதவை இடித்தார். இவர் கதவைத் திறந்தார்; அவரும் உள்ளே வந்துவிட்டார்!

வந்துவிட்டால்... அது நெருக்கமான இடம்... மூவர் நிற்கலாம்; இருவர் அமரலாம்; ஒருவர் படுக்கலாம் – இதைச் சொல்கிறபோதே நாலாவது ஆசாமிக்கு அங்கே இடமில்லை என்று ஏற்படுகிறதா இல்லையா?

ஆனால், திருக்கோவலூர் கர்ப்பகிருஹத்துக்குள்ளே இருக்கிறானே எம்பெருமான்... அவனுக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லையாம்! 'அடடா! இந்த பரம பாகவதோத்தமர்கள் மூன்று பேரும் நெருக்குண்டு நிற்கிறார்களே' என்று அந்த நெருக்கத்திலே வந்து தானும் நெருக்குண்டான்!

இந்த மூன்று பேருக்கும் தாளமுடியவில்லை. 'இது யாரிது? இவ்வளவு ஹிம்சையாய் இருக்கிறதே... நிற்க முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கறோம்; இந்த இடத்திலே இந்த நான்காவது ஆசாமி யார்?' என்று ஒருத்தருக்கொருத்தர் விசாரிக்கிறார்கள்!

தெரியவில்லை! ஒரே இருட்டு...! அப்போது முதலாழ்வார் – பொய்கையாழ்வார் – ஒரு பெரிய விளக்கை ஏற்றினார்:

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன்
சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று

– உலகத்தையே பெரிய அகலாக வைத்துவிட்டார். சமுத்திர ஜலத்தையெல்லாம் நெய்யாகக் குத்திவிட்டார். அதிலே சூரியப் பிழம்பை ஜோதியாய் வைத்தார். நந்தா விளக்கு இது... பெரிய விளக்கை ஏற்றினார். ஆனால், அப்போதும் கூட, வந்திருப்பது யார் என்று தெரியவில்லை. இவர் ஏற்றிய விளக்கிலே புற இருள் நீங்கிற்று. ஆனால் அந்தகரணத்திலே இருட்டிருந்தால் அவன் தெரிவானா?!

உலகமெல்லாம் வெளிச்சமாக இருக்கிறது. எல்லாவற்றிலும் பரமாத்மா இருக்கிறான் என்று வேதம் சொல்கிறது. நமக்குத் தெரியவில்லையே! ஏன்?

உள்ளுக்குள்ளே நமக்கு இருட்டு!

அது மாதிரி ஆழ்வார்களுக்கும் அந்தகாரம், இருட்டு என்று நாம் நினைக்கக் கூடாது. நமக்கு விஷயம் தெரிவிப்பதற்காக ஆழ்வார்கள் அப்படி நடந்து கொள்கிறார்கள்...

இரண்டாவது ஆழ்வாரான பூதத்தாழ்வார் என்ன பண்ணுகிறார்? 'நீ ஏற்றிய விளக்கு


மலர் போல மலர்கின்ற மனம் வேண்டும் தாயே!
பலர் போற்றி பாராட்டும் குணம் வேண்டும் தாயே!

பத்திரிகைகளும் படித்தவர்களும் பாராட்டும் சிறந்த ஆன்மீக நூல்கள்

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

விலை ரூ. 30/– மூன்றாம் பதிப்பு

நீ உன்னையறி, உலகவினை தன்னாலே நடக்கும். நடத்துவோன் நடத்துகிறான். நீ சாட்சியாக இரு. 'நான்' என்று எதிலும் கிளம்பாதே.



பகவான் ஸ்ரீ அரவிந்தர்

விலை ரூ. 25/– இரண்டாம் பதிப்பு

ஆன்மீகப் பாதை மிகவும் நீளமானது. ஒவ்வொரு அடியிலும் ஏராளமான தடை களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். பொறுமை, நம்பிக்கை, விடா முயற்சி மூலமே இந்தப் பாதையில் வெற்றியடைய முடியும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.



ஸ்ரீ அன்னை, ஒரு மகாசக்தி

விலை ரூ. 40/– முதல் பதிப்பு

மக்கள் துயரமெல்லாம் அகல வேண்டும். பாதி விலங்காக உள்ள இன்றைய மனிதன் தெய்வ மனிதனாக உயர வேண்டும். சத்தியம் உலகினை ஆளவேண்டும், என்கிறார் ஸ்ரீ அன்னை.





எழுதியவர் : **ஜனகன்**

ரூ 95/–அனுப்பினால் மூன்று நூல்களும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

வி.பி.பி. மூலமும் பெறலாம். தபால் செலவு தனி.

விவரங்களுக்கு:

கங்கை புத்தக நிலையம்,

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,
(அஞ்சலகம் அருகில்) சென்னை – 600 017.

சென்னை, புத்தகக் கண்காட்சியில், வானதி ஸ்டாலில் 8.1.99 முதல் 18.1.99 வரை கிடைக்கும்.

போதாது. இந்த விளக்கிலே, வந்திருப்பது யார் என்று தெரியவில்லை. அதனால் நான் ஒரு விளக்கு ஏற்றுக்கிறேன்' என்று ஏற்றினார்..

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்குருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன்
நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

பக்தியாகிற திரியை இட்டு, ஆர்வம் – ஆர்வம் என்றால் உத்ஸாஹம். உத்ஸாஹமாகிற நெய்யிருந்தால்தான் அன்பு விளக்கெரியும். சுவாத்மானுபவம் – என்கிற இன்புறு சிந்தை இடுதிரியாகிறது... அதை வைத்து, பகவத் ஞானமென்கிற ஒளியை ஏற்றினார்...

இப்போது அந்தகரணத்து இருட்டும் போய்விட்டது.

போனவுடனே... இவர்கள் இரண்டு பேரும் ஏற்றிய விளக்கிலே அவர் மூன்றாமவர் பேயாழ்வார் சேவிக்கிறார்!

அவர் சொல்கிறார் :

'திருக்கண்டேன், பொன்மேனி
கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் –
செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்; புரிசங்கம்
கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

ஆரம்பத்திலே எல்லோரும் கதையை கவனித்துக் கொண்டே வந்தோம். திருக்கோவலூரிலிருந்து அந்த கர்ப்பகிருஹத்திலேயிருந்து எம்பெருமான் இருப்புக் கொள்ளாமல் இங்கே வந்து இடையிலே நெருக்குண்டானாம். ஆனால் ஆழ்வார்கள் அவனைப் பார்க்கவில்லை...

திருக்கண்டேன்! லக்ஷ்மியைப் பார்த்தேன்! என்கின்றனர். இதைக் காட்டிலும் என்ன பிரமாணம் நமக்கு வேண்டும்!

அது மட்டுமில்லை... பொன்மேனி கண்டேன்... நாராயணனுடைய திருமேனியைப் பொன்மேனியாகக் கண்டேனென்கிறார்.

ஏன்?

லக்ஷ்மியினுடைய திருமேனி பொன்மேனியல்லவா? அது அவன் மேலே பட்டுப் பட்டு அவன் நிறமும் பொன் நிறமாகப் போய்விட்டதாம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் ரொம்ப விசேஷமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

பகவானுக்குத் தாமரை புஷ்பம் போன்ற நேத்திரம். திருவடியிலிருந்து திருமுடிவரை எங்கு தொட்டாலும் பொன்போன்று ஜொலிக்கும்படியான திருமேனியாய் இருக்கிறது. அப்படிப் பொன்மேனி எங்கேயிருந்து வந்தது?... லக்ஷ்மியினுடைய திருமேனி சாயை பட்டுப்பட்டு அவன் திருமேனி மொத்தம் பொன்மேனியாகப் போய்விட்டதாம்!

வைரம் இருக்கிறது பாருங்கள்... ரொம்ப தூரத்திலிருந்து பார்த்தோமானால் நீல நிறமாகத் தெரியும். தூரத்தைக் கொஞ்சம் குறைத்து, கிட்டே கொண்டு வந்தோமானால் அதிலிருந்து செந்நிறம் தெரியும். இன்னும் கிட்டே வந்தால், வெண்மையாகக் காட்சியளிக்கும்.

அப்படித்தான் எம்பெருமான், தூரத்திலேயிருந்து பார்க்கிற மகான்களுக்கெல்லாம் நீருண்ட மேகமாய்க் காட்சியளிக்கிறான். அருகிலிருந்து சேர்ந்திருக்கிறவர்களுக்குப் பொன்னிறமாய்க் காட்சியளிக்கிறான்.

சீதை ஆஞ்சநேயனிடம் கேட்கிறாள். 'ஹே ஆஞ்சநேயா! என் ராமனின் பொன் போன்ற திருமேனி வாட்டமுறாமல் இருக்கிறதா?' என்று கேட்கிறாள்.


ஆகையினால், தாயாருடைய – மஹாலக்ஷ்மியுடைய திருமேனி பட்டு, மஹாவிஷ்ணு திருமேனி பொன்மேனியாய் ஜொலிக்கிறது... அதை லக்ஷ்மி நரசிம்ஹனிடத்திலே காணலாம் – லக்ஷ்மியோடு ஆலிங்கனனாய்க் காட்சியளிக்கிற அவன் அழகே அழகு.

சுவாமி தேசிகன் இந்தத் திருக்கோவலூர் சம்பவத்தை அழகாக ஒப்பிடுகிறார்:

கரும்பு ஆலையிலே ஒரு இயந்திரம் இருக்கும். இரண்டு ஆயுத எழுத்துக்கள் போல் முப்புள்ளி வடிவத்தில் அமைந்திருக்கும். இந்த இரண்டு இயந்திரங்களும் சுற்றும் போது, இடையிலே செருகப்பட்ட கரும்பு, மூன்று சக்கரங்களால் நெருக்கப்பட்டு ரஸம் அப்படியே கீழே கொட்டும்... கருப்பஞ்சாறு!

இப்போது பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூன்று பேரும் அந்தக் கரும்பாலையிலே இருக்கிற இயந்திரச் சக்கரம் போன்றவர்கள். இதிலே திருக்கோவலூர் எம்பெருமான் கரும்புக்கடை! அவன் வந்து நுழைந்தான். இந்த மூன்று ஆழ்வார்களாகிறய சக்கரம் போட்டு நசுக்கிவிட்டது. ரஸமான விஷயம்! 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று கரும்புச் சாறாகப் பொழிந்தார்கள்!

(தொடரும்)



1999 ஜனவரி 10
வெகுதான்ய மார்கழி 26
மலர் : 57
இதழ் : 24

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.


இதுவா ஹிந்து தர்மம்?

‘திட்டமிட்டுச் செய்யப்படும் அப்பட்டமான பொய்ப் பிரசாரம்!’ என்று சாடினார் வி.எச்.பி தலைவர் அசோக் சிங்கல். ‘எந்த ஹிந்து அமைப்பும் வன்முறைக் காரியங்களில் ஈடுபடவில்லை... எங்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்தவென்றே ஒரு பிரிவினர் இப்படி வதந்திகள் பரப்புகின்றனர்’ என்றார். சொன்ன மறுநாளே குஜராத் சூரத் மாவட்டத்தில் இரண்டு மாதா கோயில்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கின்றன!

காட்டுமிராண்டித்தனமான சிந்தனைகளும் பேச்சும் காட்டுமிராண்டித்தனமான செயல்களையே தூண்டும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ‘அன்னை தெரஸாவுக்கும் அமார்த்தியா சென்னுக்கும் நோபல் பரிசு கொடுத்தது கிறிஸ்துவர்களின் ரகசியச் சதி’ என்பது போன்ற முட்டாள்தனமான, பொறுப்பற்ற பேச்சுகள் மன்னிக்க முடியாதவை. இந்தப் பிதற்றல்களின் ஊற்றுக்கண்ணான வி.எச்.பி. தலைவர் தூண்டுதலால் சூரத்தில் நடந்த கோர சம்பவம் கண்டனத்துக்குரியது மட்டுமன்று; அதன்பின் இயங்கியவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால், பி.ஜே.பி. கட்சித் தலைமையும் சரி, மத்திய ஆட்சியும் சரி, இந்தக் கேவலங்களை உரிய வன்மையுடன் கண்டிக்கவில்லை. ஏதோ கடனுக்குக் கண்டனம் தெரிவிப்பதுபோல் பிரதமரும் அத்வானியும் பேசியிருக்கின்றனர்.

குஜராத்தில் கேசுபாய் படேல் தலைமையிலான பி.ஜே.பி அரசோ, கடந்த சில வாரங்களாகவே இந்தச் சிக்கல் உருவாகி வளர்ந்து வருவதை வெறுமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறது.



சர்ச்சுகள் எரிகிற நேரத்தில் 'அப்படியொன்றுமே நடக்கவில்லை' என்பதுபோல் மௌனம் காத்திருக்கிறது மாநில அரசு. சம்பவம் முடிந்த பிறகும், 'போதுமான அளவு காவல் துறையினர் அந்த வட்டாரத்தில் இல்லை; நாங்கள் என்ன செய்ய முடியும்...?' என்று கையை விரிப்பது வடிகட்டின அலட்சியம் கலந்த பொறுப்பின்மை!

'கிறிஸ்தவ மிஷனரி அமைப்புகள் ஹிந்து மக்களை மதமாற்றம் செய்கின்றன; அதனால் ஹிந்து மதத்துக்கு அபாயம்... அது பொறுக்காமல்தான் ஹிந்துக்கள் கிளர்ந்தெழுகிறார்கள்' என்று சப்பைகட்டு கட்டுகிறது வி.எச்.பி.


மதமாற்றத்தை ஒரு மனிதன் மீது இலேசில் திணித்து விட முடியாது. அவனது நம்பிக்கையையும் நன்றியுணர்வையும் பெற்றால்தான் அது சாத்தியம். அவ்வாறு பெறுவதற்காக உழைப்பவர்களை முற்றிலுமாகக் குறை சொல்ல முடியுமா...? கல்வித் துறையிலும் பொதுநல சேவையிலும் கிறிஸ்துவர்கள் இந்நாட்டுக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிட இயலாதது. அப்படியிருக்கையில் அந்த ஆதர்ச வழிகாட்டிகளின்பால் மக்கள் ஈர்க்கப்படுவதில் என்ன ஆச்சர்யம்?

இத்தகைய மதமாற்றங்களால் சனாதன தர்மம் ஒன்றும் ஆட்டங்கண்டு போய் விடாது.

மாறாக, ஹிந்து சமயத்தைக் காக்கிறேன் பேர்வழியென்று இதர சமயங்களின் பேரில் வெறுப்பைத் தூண்டுவதும் அச்சமயச் சின்னங்களைத் திட்டமிட்டு அவமதிப்பதும் வழிபாட்டுத்தலங்களை அழிப்பதும் ஹிந்து மதத்துக்கே பேரவமானமாக முடியும்.

'வி.எச்.பியும் ஆர்.எஸ்.எஸ்ஸும் வெளிப்படுத்தும் காட்டுமிராண்டித்தனம்தான் ஹிந்துமத அபிமானம் என்றால், அத்தகைய அபிமானம் எங்களுக்குத் தேவையில்லை...' என்று மக்கள் அவர்களை நிராகரித்து விடுவது உறுதி; இந்த வன்முறையாளர்களை நம்பி தேர்தல் களத்தில் இறங்கும் பி.ஜே.பி.யும் நிச்சயம் மக்களால் நிராகரிக்கப்படும்.

பெரும்பான்மை மக்கள், அடிப்படையில் அமைதி விரும்பிகள். பிற மத சகோதரர்களுடன் இசைந்து வாழவே விழைகிறார்கள். அப்படி வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இந்தப் பல்முனை



கலாசாரம் இந்தியாவின் சிறப்புகளில் ஒன்று. மதத்தின் பெயரால் நடத்தப்படும் காட்டுத் தாக்குதல்கள், இந்த அமைதி விரும்பிகளின் வாழ்க்கையை பாதிக்கும்.

ஹிந்து மதத்துக்கு அபாயம் வந்துள்ளது என்று நிஜமாகவே நம்பினால், சர்ச்சுகளைக் கொளுத்துவதன் மூலமும் மசூதிகளை இடிப்பதன் மூலமுமா அந்த அபாயத்தைப் போக்க முடியும்? மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையிலும் பலப்படுத்தும் வகையிலும் அல்லவா ஹிந்து அமைப்புகள் செயல்பட வேண்டும்! கல்வித் துறையிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டு உள்ளங்களை உயர்த்த வேண்டும்.

அப்படிச் செய்யாமல் பிற மத வழிபாட்டுத் தலங்களுக்கு வேட்டு வைக்கும் மிருகத்தனத்தை வளர்த்து, அதையே கொள்கையாகவும் ஏற்று வருகின்றன பஜ்ரங் தள், வி.எச்.பி, ஆர். எஸ்.எஸ். போன்றவை.

உலகெங்கும் ஹிந்துக்களுக்குத் தலைகுனிவு ஏற்படுத்தியிருக்கிற இந்தக் கேவலத்தை பிரதமரும் அமைச்சர்களும் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொண்டிருப்பது அதிர்ச்சி தருகிறது. எந்தவொரு ஹிந்து மதத் தலைவரும் இந்தக் கொடுமையை விமர்சனம் செய்யவில்லை.

வாஜ்பேயி அரசின் இந்த வி.எச்.பி விசுவாசம் இன்னும் என்னென்ன விபரீதங்களுக்கு வழிவகுக்கப் போகிறதோ என்று நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது.

சில தினங்களுக்கு முன், தமது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மை இல்லாததால்தான் விரைந்து செயல்பட இயலாமற் போகிறது என்று பிரதமர் கூறினார். இந்த அரைகுறை பெரும்பான்மையே வி.எச்.பி.க்கு இத்தனை ஆட்டம் போடத் துணிவு தந்திருக்கிறது என்றால், பி.ஜே.பி.க்குத் தனிப் பெரும்பான்மை மட்டும் கிட்டியிருந்தால் என்னவாகியிருக்கும்...! கற்பனைக்கெட்டாத கொடுமைகள் நடந்திருக்கும்!

பி.ஜே.பி.க்குத் தனிப்பெரும்பான்மை தராத வகையில் வாக்களித்த பொதுமக்களை வாழ்த்தத் தோன்றுகிறது. ○

துராசை

கிருஷ்ணா

"இனிமே என் வீட்டுப் பக்கம் நீ வராதே."

பாலு சொன்னதும் திடுக்கிட்டுப் பார்த்தேன். குடித்து விட்டு உளறுகிறானோ? சந்தேகத்துடன் அவன் முகத்தை உற்று நோக்கினேன். தெளிவாய்த்தானே இருக்கிறான்.

"பாலு..."

"பணம் வேணும்னா பொம்பளை கிட்டே போய் ஏன்டா கேட்கறே? ஆயிரம் ரூபாயை ரெண்டு நாளில் தரேன்னு வாங்கிகிட்டு, அதை மறந்த மாதிரி வேஷம் போட்டு ஏன் அலையறே?"

அடுத்த அம்பை எய்தான். புரியாமல் வலியோடு பார்த்தேன்.

எப்போதும் குடித்துவிட்டு உளறுபவன், இப்போது குடிக்காமலேயே உளற ஆரம்பித்து விட்டானா?

"டேய், பானுவுக்குத் தெரிஞ்சா..."

"என் பெண்டாட்டி பெயரைச் சொல்லாதடா கடங்காரா. அவதான் சொல்லச் சொன்னா. இனிமே என் வீட்டுப் பக்கம் வராதே. பாவம் பானு."

அவனின் அம்பறாத் தூணியில் இன்னும் எத்தனை அம்புகள் இருக்கின்றன?

"ஒன்னு அழுதா! உங்களுக்குத் தெரியாம ஆயிரம் ரூபாய் கொடுத்துட்டேன். ஆஸ்பத்திரி செலவுன்னு சொன்னதாலே கொடுத்தேன். உன் புருஷனுக்குத் தெரியாம என்னிடம் பணம் கொடுத்ததைச் சொல்லவான்னு பயமுறுத்தறியாமே பானுவை? நன்றி கெட்டவனே! இனிமே வீட்டுப் பக்கம் வந்தேன்னா..."

கையை நீட்டி உறுமி விட்டு நகர்ந்தான். அதிர்ச்சியில் உறைந்து போய் அமர்ந்திருந்தேன்.

நன்றி கெட்டவன்! பலே, சபாஷ்! புதிதாய் பட்டம் கொடுத்து விட்டுப் போகிறான்.

ஆபீஸ் முடிந்ததும் ஏதாவது சாராயக் கடையில் விழுந்து கிடப்பவனை பத்திரமாய் வீடு கொண்டு போய் எத்தனை முறை சேர்த்திருக்கிறேன்?

நான் நன்றி கெட்டவனாம்! பேஷ், பேஷ்!

இரத்தமாய் இவன் வாந்தி எடுத்து ஆஸ்பத்திரியில் கிடந்த போது, ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு அருகிலிருந்து கவனித்த எனக்கு இது பொருத்தமான பட்டம்தான்!

ஒவ்வொரு முறை பானு மனம் கலங்கி நொந்து வெந்து போய் சுருண்டு விடும் போதெல்லாம் தைரியம் கொடுத்து அவளை சகஜநிலைக்கு மீட்ட எனக்கு இன்று நன்றி கெட்டவன் என்ற பெயரா?

அண்ணா, அண்ணா என்று வாய் நிறைய அழைப்பவளா 'வராதே' என்று சொன்னாள்?

உள்ளே குபு, குபுவென்று ஏதோ எரிந்தது. மனசுக்குள் கோபப் புழு நெளிந்து, புரண்டு ரணப்படுத்தியது.

வலி பொறுக்க முடியாமல் டெலிபோனை நெருங்கினேன்.


"ஹலோ."

அவளேதான். முகத்துக்கு நேரே சொல்லாமல் புருஷனை ஏவி விட்ட அவளேதான்.

"ஏன் பானு இப்படி?"

இந்த மூன்று வார்த்தைகளில் என் வலி முழுவதும் தெரியும்படி குரல் வந்தது.

சற்று நேரம் அமைதி. திடீரென விசும்பல். மெல்ல மெல்ல அழுகை பெரிதானது.



பதறிப் போனேன். என் கோபமெல்லாம் போன இடம் தெரிய வில்லை.

"பானு, ப்ளீஸ் என்னம்மா? என்னாச்சு? அழாதேம்மா."

கனிந்த குரல் பரிவுடன் வெளிப்பட விசாரித்தேன்.

"வேண்டாம்! என்னோட பேசாதீங்க. என்னாலே முடியலே."

விசும்பலின் நடுவே அவள் பேசியதும் திகைத்தேன்.

"நீங்க காட்டற இந்தப் பரிவு, கனிவு இதெல்லாம்தான்... வேண்டாம். நான் கரைஞ்சு போயிடுவேன். மனசு நழுவிப் போறது."

ரிஸீவரைப் பிடித்திருந்த என் கை இறுகியது.

"மனசுல மல்லிகைப்பூவை வைச்சுண்டு எந்தப் பூவை மோந்து பார்த்தாலும் மல்லிகைப்பூ வாசனைதான் வீசும்! என் மனசுல கள்ளத்தனம் புகுந்துடுச்சு. அண்ணா, அண்ணான்னு வாய் கூப்பிட்டாலும் உங்க முன்னாடி என் பாதி ஜீவன் கரைஞ்சு போயிடுது. பயமாயிருக்கு எனக்கு."

கடைசி வார்த்தைகளில் நிஜமாகவே நடுக்கம் தெரிந்தது.

ஸ்தம்பித்துப் போன உணர்வுடன் போனை வைத்து விட்டேன்.

நழுவுகிறதா? மனசு நழுவுகிறதா? ஏன்? எங்கே இடறியது?

எந்த உறவுகளுமே பலப்பட பரஸ்பர ஈர்ப்பு அவசியம். குடிகாரக் கணவனுடன் அவள் படும் அவஸ்தையைக் கண்டு என்னுள் பொங்கியது பரிவு.

என் பரிவு அவளை ஈர்த்தது தவறில்லை. ஆனால் மனம் நழுவும் அளவுக்கு, ஜீவன் கரையும்படி ஆனது ஏன்?

தனக்குக் கிடைத்த கொழு கொம்பு சரியில்லை என்றவுடன், கொடி வேறு கொழு கொம்பை நாடுகிறதா?

மனசில்தான் குறை! ஆஞ்சநேயருக்கு தன்பலம் தனக்கே தெரியாதது போலத்தான் இதுவும்.

வீடு திரும்பிய பின்னும் அதே யோசனைகள்.

"என்னங்க கொடுத்த காபியைக் கூடக் குடிக்காம சிந்தனை?"



"தப்பு செய்யறது சகஜம் தான். அதைத் திருத்திக்கறது தான் மனுஷத்தனம்!"

"எனக்கும் புரியுது. ஆனா என் மாமனார் பொண்ணைத் திரும்ப கூப்பிட்டுக்க மாட்டேங் கறாரே!"

– பொன்மலை ஆர். பிரகாஷ்

உரசியபடி வந்தாள் மனைவி. ஒரே மூச்சில் காபியை விழுங்கி விட்டு அவளைப் பார்த்தேன்.

அவள் இரு கைகளையும் பிடித்து என் அருகில் அமர்த்தி னேன்.

"என்ன கவனிப்பு பலமா யிருக்கு? எல்லாம் ராத்திரிதான்."

மூக்கைப் பிடித்துத் திருகினாள்.

"என்னிடம் உனக்குப் பிடிக் காத குணம் என்னடா?"

"ம். இந்த மூக்குதான்."

மறுபடியும் திருகினாள்.

"ப்ச், நான் தீவிரமாய் கேட் கறேன். சொல்லு."

"எதுக்கு?"

"சொல்றேன். நீ மூதல்ல சொல்லு."

யோசித்தவள் உதட்டைப் பிதுக்கினாள்.

"உங்களை அப்படியே மனசுல ஏத்துக்கிட்டேனா அதனால நீங்க சொக்கத் தங்கமாய்த்தான் எனக்குத் தெரியறீங்க. எல்லாமே நல்ல குணம்தான்."

"ப்ச், கோபம் இருக்கற இடத்துலதான் குணம் இருக்கும்னு சொல்லுவாங்க. அப்ப, குணம் இருக்கற இடத்துல கோபமும் இருக்கணுமே. யோசனை பண்ணு நல்லா. என் குறைகளைப் பட்டியல் போடு."

"எதுக்கு திடீர்னு இதெல்லாம்?"

அவள் விரல்களை என் விரல்களுடன் பின்னிக் கொண்டேன். இவளை மனைவியாய் அடைந்தது என் பாக்கியம். மனசெங்கும் பெருமை படர்ந்தது.

"பானு இருக்காளே...."

"உங்க நண்பர் பாலு பொண்டாட்டியா?"

தலையசைத்தேன்.

"தன் புருஷன் மட்டும்தான் உலகத்திலேயே கெட்ட வன்னு நினைச்சு குமைஞ்சு போய் தற்கொலை அள வுக்குப் போயிட்டா. நீதான் அவளைத் தேற்றணும்."

"எப்படி?"

"வீட்டுக்கு வீடு வாசப்படிதான்னு அவளுக்குப் புரிய வைக்கணும்."

"ஓ. அதுக்குத்தான் உங்க குறைகளைப் பட்டிய லிடச் சொன்னீங்களா?"

கற்பூரபுத்தி என் மனைவிக்கு. இறுக்கிக் கொண் டேன் சந்தோஷமாய்.

என் மனைவிக்குக் கத்தரிக்காய் பிடிக்கும். கிராமத்துக் காயாக தெற்கு வீதியில் கிடைக்கும் என்ப தால் ஆபீஸ் விட்டதும் நேரே சென்றேன்.

"வெண்ணெய் மாதிரி இருக்கு நறுக்கறப்பவே."

போனமுறை அவள் பாராட்டியது ஞாபகம் வந்தது. பாராட்டு கொடுக்கும் உந்துதல் பெரிய டானிக்தான்.

"அண்ணா."

திடீரென பழகிய குரல் கேட்க, திரும்பிப் பார்த் தேன்.

பானுவா இது? கண்கள் சிரித்தன. முகமெல்லாம் மலர்ச்சி. பார்த்து நாலைந்து மாதத்திற்கும் மேலாகி விட்டது.

"எப்படிம்மா இருக்கே?"

"நல்லாயிருக்கேண்ணா. அண்ணிதான் மனவளக் கலை மன்றத்துக்குக் கூட்டிட்டுப் போனாங்க. மனசு தெளிஞ்சிடுச்சு. இப்ப அவரைக் கூட 'டீ அடிக்ஷன்' (De adiction) சென்டருக்கு கூட்டிட்டுப் போறேன். கொஞ்ச நாளாய்."


என் மனசுக்குள் காவிரி நீர் சலசலத்து ஓடியது.

"வீடுக்கு வாங்கண்ணா. ரொம்ப நாளாச்சே, நீங்க வந்து" என்றவளைப் பார்த்து சந்தோஷமாய்ச் சிரித் தேன். ○

உ

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட் (பதிவு பெற்றது).

ஸ்ரீ சங்கர மடம், 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம் - 631 502.
நிர்வாக அலுவலகம் : 10, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
போன் : 4411936/4917340 E.Mail: prb@giasmd01.vsnl.net.in



வேண்டுகோள்

நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்றியமையாத தெய்வ அருளை நாடி மன அமைதி பெற விழைவதால், கோவில்கள் சரிவர பராமரிக்கப்பட்டு பூஜைகள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்வதே தலை சிறந்த சமூகத்தொண்டு என்று **காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கூறுவார்கள்.**

இந்த உன்னத நோக்குடன், பல்வேறு காரணங்களால் தற்சமயம் தமிழ் நாட்டில் நலிவுற்றிருக்கும் கிராமியக் கோவில்களில் வறுமை நிலையிலும் பூஜை செய்து கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த அர்ச்சகர்களை, ஆண்டுதோறும் வாய்மொழித் தேர்வுகளை நடத்தி, தேர்ந்து எடுத்து அவர்களுக்கு உதவி புரிவதற்காகவே, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் மேற்படி டிரஸ்டை 1986-ம் ஆண்டு நிறுவினார். இதற்கான மூலதனத்தை பக்தர்களும், ஈடுபாடுடைய ஸ்தாபனங்களும், மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளால் மட்டுமே சேகரிக்க வேண்டும் என்பது பொறுப்புக் குழுவிற்கு மஹாஸ்வாமிகள் இட்ட கட்டளை. மாதம் 4000 ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் பெறும் ஒவ்வொரு அன்பரும் தமது ஒருமாத வருமானத்தை தம் **வாழ்நாளில் ஒருமுறையாவது நன்கொடையாக** அளிக்க முன் வர வேண்டும் என்பது பேரருளாளரின் ஆக்ஞை. மற்றவர்கள் தங்களால் இயன்ற அளவு கொடுக்கலாம்.

1987-ம் ஆண்டில் 5 அர்ச்சகர்களுக்கு தலா மாதம் 100 ரூபாய் வீதம் உதவத் தொடங்கிய இந்த டிரஸ்ட், தற்சமயம் ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாசியுடன் சேர்ந்துள்ள முதலீட்டுத் தொகையான ரூ. 95 லட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தைக் கொண்டு மொத்தம் 261 அர்ச்சகர்களுக்கு (58 பட்டாச்சாரியார்கள், 105 சிவாச்சாரியார்கள், 98 பரம்பரை பூஜாரிகள்) நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 300/- வீதம் உதவி வழங்கி வருகிறது. உதவித் தொகை பெறுவதற்கான தகுதியுடையவர்கள் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மாதாந்திர உதவித் தொகையையும் உயர்த்த வேண்டியிருக்கிறது. எனவே மூலதனத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் நன்கொடைகளை வரவேற்று, அவ்வப்போது வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.

நன்கொடைகளை **"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"** என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட செக்/டிராஃப்ட் அல்லது மணியார்டர் மூலமாக மேற்படி நிர்வாக அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்திலும் இதற்கான நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்படும். நன்கொடையாளர்களுக்கு வருமானவரி சட்டத்தின் 80ஜி பிரிவின் கீழ், 31.3.2001 முடிய, வரிச்சலுகை உண்டு. வெளிநாடுகளிலிருந்தும் அன்பர்கள் நன்கொடை அனுப்புவதற்கு வசதியாக இந்த அறக்கட்டளை FCRA வின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

N. Krishnaswamy Reddy

ஜனவரி 8, 1999

ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி (Retd.)
பொறுப்புக் குழுவின் சேர்மன்.

மும்பை மசாலா :

'பக்கி' அல்ல; 'பக்ஷி'

"தீண்டாமையே நம்மை விட்டுப் போய் விட்டபோது, 'ஸ்வாமி நாராயண்' இயக்கத்தைச் சேர்ந்த 'ஸ்வாமிஜி'கள், பெண்களைப் பார்க்காமலிருப்பது சரியா?" என்று, பெண்கள் பற்றிய ஒரு செமினாரில், மும்பையின் புது ஷெரீஃப்பான சந்திரகாந்த் பக்ஷி கேட்டிருக்கிறார். உடனே அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களெல்லாம் கொதித்தெழுந்து, 'பக்ஷி மன்னிப்பு கேட்டால்தானாயிற்று! இல்லாவிட்டால் பதவியிறங்க வேண்டும்' என்கிறார்கள். தாக்கரே வேறு, 'ஷெரீஃப் பதவியே வெறும் அலங்காரத்துக்குத்தான்; அதை ஒழித்து விட வேண்டும்' என்றிருக்கிறார். இத்தனூண்டு விஷயத்துக்கா தாக்கரே இத்தனை வெறுப்பேற்றுகிறார்? விஷயம் வேறு!

குஜராத்தி நாவலாசிரியரும், பி.ஜே.பி.காரருமான பக்ஷி பதவி ஏற்ற உடனேயே, அவரை 'மாதோஸ்ரீ' சென்று, தாக்கரேயின் 'ஆசிர்வாதத்'தை பெறச் சொல்லியிருக்கிறார், குஜராத்திய சிவசேனைத் தலைவர். முண்டேவுக்கும், இதர பி.ஜே.பி. சகாக்களுக்கும் இது சங்கடத்தைத் தருமே என்று இவர் சும்மா இருந்திருக்கிறார். அந்தச் சமயம் பார்த்து இந்தச் சர்ச்சை...

ஆனால் பக்ஷி எதற்கும் மசிபவராகத் தெரியவில்லை! இந்தப் பதவி இல்லை என்றால் நான் நிம்மதியாக என் 147வது புத்தகத்தை எழுதுவேன் என்கிறார். ஆமாம். போய் விடப் போகிறதே என்று கவலைப்பட இது என்ன அமைச்சர் பதவியா? உப்புச் சப்பில்லாத ஷெரீஃப் பதவிதானே?

மிஸ் மானேஜ்மெண்ட்

எம்.பி.ஏ படித்துவிட்டு வேலையில்லாமலிருப்பது கொடுமைதான். ஆனால் மானேஜ்மெண்ட் படித்துவிட்டு, ஒரு சின்ன 'எக்ஸ்டார்ஷனை'க்கூட மானேஜ் பண்ணத் தெரியாதது அதைவிடக் கொடுமை இல்லையா? அபிஜித் தத்தாவும், நமன் மிஷ்ராவும் தங்கள் மானேஜ்மெண்ட் டிகிரி சோறு போடாததால் விரக்தி அடைந்து, தங்களை துபாய் டானின் அடியாட்கள் 'ஸலீம் - ஜாவேத்'தாக மாற்றிக் கொண்டார்கள். தத்தாவின் பணக்கார ஆசிரியரை, ஃபோனில் பத்து லட்சம் கேட்டு மிரட்டி, பேரத்தை ஏழு லட்சத்தில் முடித்தனர். ஆனால் பாவம், பணத்தைப் பெற்றுக் கொள்ள இரு கரத்தையும் ஆவலாய் நீட்டியபோது, பதுங்கியிருந்த போலீசார், விலங்கை மாட்டி 'லாக்-அப்' புக்கு அழைத்துச் சென்று விட்டனர். எக்ஸ்டார்ஷன் செய்திகள் மூலம் பணம் பறிப்பது எப்படி என்று பத்தி பத்தியாக வெளியிடும் மீடியாக்காரர்கள், அதை பத்திரமாக அடைவது எப்படி என்பதை வெளியிட்டால்தானே?



• ஷாருக்கான் ஆடிப்பாடி...

மிஸ்டர் & மிஸஸ்

பெண்களுக்கு ரிஸர்வேஷன் அது இது வென்று வாய் கிழியப் பேசினால் போதுமா? மும்பைவாசிகளைப் பாருங்கள்; செயலிலே காட்டியிருக்கிறார்கள். இத்தனை காலமாக, male - dominated bastion ஆக இருந்த 'சாண்டாக்ளாஸி'ல் இம்முறை திருமதி ஸாண்டா க்ளாஸும் பிரவேசித்து, தன் முத்திரையை ஆழமாகப் பதித்து விட்டார்! கிறிஸ்துமஸ் அலங்காரங்களில், வழக்கமான ஐட்டங்களுடன் இந்தக் கணவன் மனைவி ஜோடி படு க்யூட்! (கிறிஸ்துவர்கள் அல்லாதவர்கூட வாங்கிச் சென்றனர்). இந்த ஐடியாவை விஸ்தரித்து, ருஸ்தம் - கத்ரக் ஜோடி, கொலாபா, ஹாஜி அலி பகுதியில் வசிப்பவர்களுக்கு, 'டயல் - எ-ஸாண்டா' திட்டத்தை அறிமுகப்படுத்தினர். கிறிஸ்துமஸ் துவங்கி புது வருடம் வரை, இவர்களுக்கு ஒரு ஃபோன் செய்தால் போதும். அழைப்பவர் வீட்டுக்கு இந்த ஸாண்டா ஜோடி, 'ஸர்ப்ரைஸ் விஸிட்' அடித்து, ஆடிப் பாடி, குழந்தைகளுக்கு ஸ்வீட் கொடுத்து, பரிசும் கொடுத்து மகிழ்விப்பர். ஃபீஸ் (அது இல்லாமலா?) 250 ரூபாய்! 'திரு'மதி தயவால், ஸாண்டா க்ளாஸுக்கு இம்முறை நல்ல வசூல்!

BEST இல்லை.... WORST!

ஏழு மாசம்கூட ஆகவில்லை! பஸ் கண்டக்டரிணிகளாக வேலை ஏற்ற ஏழு பெண்



• குடைமிளகாய் பிள்ளையார்

குடைமிளகாய்ப் பிள்ளையார்!

களும் விடும் கண்ணீர், ஏழு கடலை நிரப்பி விடும் போலிருக்கிறதே! பாவம், இந்தக் கண்ணீர்க் கதைகளைக் கேட்க, 'BEST' நிர்வாகத்தில் ஆளில்லாமல் ... ஸாரி... பெண்ணில்லாமல் அல்லவா தவிக்கிறார்கள்? அடிப்படைத் தேவைகளான பெண்கள் டாய்லட், க்ளோக் ரூம் போன்றவை கூடத் தனியாக இல்லாமல் அவர்கள் படும் அவஸ்தையை யார் புரிந்து கொள்வார்கள்? நீண்ட தூரப் பயணத்தில் நின்று நின்று கால் ஒடியும் கஷ்டத்தையும், 'இடி' மன்னர்களால் ஏற்படும் சங்கடத்தையும் விட்டு விடுங்கள்; பெண் பயணிகளே இவர்களை ஏளனமாகப் பார்ப்பதும், சரியான சில்லறை கேட்டால் திட்டுவதும், இலேசில் டிக்கெட் வாங்காமல் அலைக்கழிப்பதுமாக ஆட்டி வைக்கிறார்களாமே! இவர்கள் ராஜினாமா செய்துவிட்டதாக வேறு வதந்தி கிளப்பி விடுகிறார்களாம்!


'எய்ட்ஸு'க்கு எய்ட்

'எய்ட்ஸ்'ஐ எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்கும் (ஃபைனான்ஷியல்) எய்ட் தேவைப்படுகிறதில்லையா? ஸ்மிதா தாக்கரேயின் 'முக்தி ஃபவுண்டேஷன்', சினிமா நடிகர்களைத் துணைக்க வைத்தது. அமிதாப்பச்சன் தம்பதியரும், பால் தாக்கரேவும் விளக்கேற்ற, ஊர்மிளா, கரிஷ்மா, ஸ்வேதா, ஜாக்கி ஷ்ராஃப், அக்ஷய் குமார், சல்மான்கான் என்று ஒரு நட்சத்திரக் கூட்டமே அந்தேரி ஸ்போர்ட்ஸ் காம்ப்ளெக்ஸில் திரண்டு, ஆடிப்பாடி மகிழ்வித்தது. ஐஸ்வர்யா நேரடிப் பிரசாரத்தில் இறங்குவதாக அறிவித்தார். ஆனால் எல்லார் மனத்தையும் கொள்ளை கொண்டவர் ஷாருக்கான்தான்! அவர் நாட்டியமாடியது, எய்ட்ஸ் நோய் கண்டிருந்த குழந்தைகளுடன்! இவர்களில் பலர் அடுத்த கிறிஸ்துமஸுக்கு இருக்க மாட்டார்கள் என்று அவர் துயர் ததும்ப அறிவித்தவுடன், பலர் கண்களில் நீர் தளும்பி விட்டது. சில 'கான்'களுக்குக் காருண்யமும் இருக்கிறது!

மிர்ச்சி மசாலா

“மார்க்கெட்டிலிருந்து ஸிம்லா மிர்ச்சி (குடை மிளகாய்) வாங்கி வந்தேன்; அதில் ஒன்றைப் பார்த்தால்... அப்படியே பிள்ளையார் சொரூபம்.” செம்பூரிலிருந்து திருமதி மீனாட்சி விஸ்வநாதன் ஆனந்தப் பரவசத்துடன் அறிவித்த போது, 'பிள்ளையார் பால் சாப்பிட்டாரா? ஏதாவது மிரகிள்ஸ் உண்டா' என்று நாம் பரபரப்பானோம்! அவர் 'தெரியவில்லையே' என்றார் அப்பாவித்தனமாய்! அவருக்குத் தெரியாவிட்டால் என்ன? நமக்குத்தான் தெரிந்திருக்கிறதே... இராக் போர் நின்றது யாரால்? க்ளிண்டன் இம்பீச்மெண்ட் நடந்தது எவரால்?... எல்லாம் பிள்ளையார் நிகழ்த்திய அற்புதங்கள்தான்! (நம்ப முடியவில்லையா? சரி... சரி... உள்ளூர் மசாலாவே போதும்...) வெங்காய விலை குறைந்தது எதனால்? புதுசாக முழு இந்தி இசை சேனல் வரப் போவது யாரால்... ஃப்ளாட் விலை சரிந்தது யாரால்? (என்ன? ஊஹூம்? ஓ.கே!) ஜஸ்ட் “ஹாப்பி நியூ இயர்” சொல்லத்தான் வந்திருக்கிறார் என்றால் ஏற்றுக் கொள்வீர்களா?

— ஜெயஸ்ரீ ராஜ்



தொலைந்து போனவர்!

"உண்மையாக எழுதவேண்டும். எழுத்தில் உண்மை இருந்தால், அது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இதுதான் நான் புரிந்து கொண்டது" என்னும் சா. கந்தசாமி, இந்த ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி பரிசைத் தம் 'விசாரணைக் கமிஷன்' நாவலுக்காகப் பெற்றுள்ளார்.

"இது எனக்குக் கிடைத்த பரிசாக நான் நினைக்கவில்லை. இது நான் சார்ந்த இயக்கத்துக்குக் கிடைத்த அங்கீகாரம்! நாங்க இலக்கியம்னு நம்பினதற்குக் கிடைத்த பரிசு" என்று தெளிவாகக் கூறும் கந்தசாமி, முதலில் அறிமுகமானது 'சாயாவனம்' நாவலின் மூலம். 'அவன் ஆனது', 'தொலைந்து போனவர்கள்', 'சூரிய வம்சம்' ஆகிய மறக்க முடியாத நாவல்கள் எழுதி, நம் நினைவில் தொலையாமல் வீற்றிருப்பவர்.

"அப்போது எங்களுக்குப் பத்திரிகைகளின் மேல் கோபமோ, குறையோ இல்லை. அவர்கள் ஒன்றைச் செய்து கொண்டிருந்தார்கள். அது வாழ்க்கையிலிருந்து ரொம்ப விலகியிருந்தா மாதிரி இருந்தது. நான் வாழ்க்கையோடு நெருக்கமான விஷயங்களை எழுதணும்னு நெனைச்சேன். அதுக்காக முதல்ல ஐந்து வருடம் 'இலக்கியச் சங்கம்'னு கூட்டம் நடத்தினோம். அப்புறம் நண்பர்கள் ஒன்று கூடி, காக போட்டுப் புத்தகம் கொண்டு வந்தோம். இது எங்கள் வழி, பாதை" என்ற கந்தசாமி, முதலில் ஓவியராகத்தான் ஆசைப்பட்டாராம். ஓவியத்தை விட எழுத்து சௌகரியமாய்த் தோன்றவே, எழுதத் தொடங்கியதாகக் கூறுகிறார்.

"எழுத ஆரம்பித்த பின் சில விஷயங்களைக் கடைபிடித்தேன். வாழ்க்கை சிக்கலாயிருக்கிறது. ஆனால் அது வெளிப்படும் மொழி எளிமையாகவே இருக்கிறது. இதை அப்படியே எழுத்தில் கொண்டு வரவேண்டும் என்று எண்ணினேன். அதேபோல் வாழ்க்கையில் உள்ள அடிப்படையான தொனி, நுட்பமான அம்சங்கள் ஆகியவற்றை எழுத நினைத்தேன். இவையெல்லாம் பாப்புலர் ரைட்டிங்குகளில் விடுபட்டுப் போய்விட்டவை."

கந்தசாமி, சிறுகதைக்கும் நாவலுக்கும் தாம் பெரிய வித்தியாசம் காணவில்லை என்றார்.

"நாவலில் நிறைய செய்திகள் சொல்ல முடியும். அவ்வளவுதான். மற்றபடி நாவலைத் தனியாக நான் பார்க்கவில்லை. ஆனால், இன்னொரு விஷயம். 200-300 பக்கங்களில் சொல்ல முடியாத ஒன்றை 2000 பக்கங்களில் சொல்லிவிட முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. நாவலிலும் அலங்காரம் அதிகம் கூடாது. அது இயல்பாக இருக்க வேண்டும் என்றே விரும்பினேன்."

சா. கந்தசாமிக்கு வேறு முகங்களும் உண்டு. அதில் ஒன்று திரைப்படத் தணிக்கை அதிகாரியாகப் பணியாற்றியது. "அது எடுக்கப்பட்ட படத்தைப் பார்த்துத் தணிக்கை செய்வதுதானே? அதில் ஒன்றும் அவ்வளவு விசேஷமில்லை. உலகம் முழுவதும், வெற்றி பெற்ற படங்களெல்லாம், எழுதப்பட்ட புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உருவாக்கப்படுகின்றன. ஆனால், இங்கேதான் டைரக்டரும், தயாரிப்பாளருமே கதையை உருவாக்குகிறார்கள். அது வெற்றி பெற்றவுடனேயே அதையே பின்பற்றவும் செய்கிறார்கள்."

'ஷிண்ட்லர்ஸ் லிஸ்டை'த் தமக்குப் பிடித்த படமாகக் கூறும் சா. கந்தசாமி, "கேமராவுக்குத் தனிமொழி உண்டென்றெல்லாம் சொல்கிறார்கள். அதை நான் ஏற்பதில்லை. எதுவென்றாலும் அடிப்படை, ஸ்கிரிப்ட். அது இல்லாமல், காமிரா ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார்.



"நான் டீ.வி.க்கு வந்ததும், எழுத்தின் ஒரு நீட்சிதான். நான் வாழும் காலத்தில் உள்ள விஷயங்கள் அனைத்திலும் நான் தீவிரமாகக் கவனம் செலுத்த விரும்புபவன். அப்படித்தான் தொலைக்காட்சித் தொடர்கள், டாக்குமெண்டரி ஆகியவற்றில் ஈடுபட்டேன்'' என்கிறார்.

'தொலைந்து போனவர்கள்' கதையை அப்போது முன்னணியில் இருந்த நடிகர்களிடம் போய் அவரது மகன் சொல்ல, 'உனக்கு ஃபீல்டே தெரியலை! இதெல்லாம் வேலைக்கு ஆகாது!' என்று ஒதுக்கினார்களாம்.

"ஆனால், நான் கவலைப்படவில்லை. நான் ஜனங்களுக்கு நேர்மையாக இருந்தால் போதும்னு நெனைச்சேன். இன்னிக்கு அந்தத் தொடரை எல்லோரும் பேசறாங்க. பாராட்டறாங்க'' என்றார்.

இவர் தரங்கம்பாடி, சென்னை கலைத் தொழில் கல்லூரி, அசோகமித்திரன், ஆதிமூலம், தனபால் ஆகியோர் குறித்து டாக்குமெண்டரி படங்களைத் தயாரித்துள்ளார். இவரது சாயாவனம், சென்னைத் தொலைக்காட்சிக்காக டெலிபிலிமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

'இது எங்கள் வழி' என்று தனிப் பாதை தேர்ந்தெடுத்துப் போனாலும் தாம் வாழும் காலத்தோடு, அனைத்துத் துறைகளிலேயும் சம்பந்தப்பட்டிருப்பவர் சா. கந்தசாமி. இன்றைய எழுத்தின் போக்கு பற்றி அவரிடம் கேட்டபோது,

''ரொம்ப விவரணையா எழுதறாங்களோன்னு தோணுது. விஷயத்த விட்டுட்டு டீடெய்ல்ஸ் அதிகம் தராங்க. இன்னொரு விஷயம் என்னென்னா, ஆங்கிலக் கல்வி மூலமா, பலபேர் இங்க ஐரோப்பா, தென்னாப்பிரிக்காவில் உள்ள நான்காம், ஐந்தாம் தரத்துப் புத்தகங்களைப் படித்துவிட்டு, தமிழில் ஒன்றுமே இல்லை என்று பேசுகிறார்கள். இதெல்லாம் வெறும் பம்மாத்து. நம்மகிட்ட என்ன பாரம்பரியம், பலம் இருக்குன்னு பாத்துட்டு, அப்புறம் இவங்க பேசணும். சொல்லப்போனா, இவங்க எல்லாம், அந்த வெளிநாட்டுப் புத்தகங்களின் மூலத்தைப் படித்திருக்க மாட்டாங்க. அதைப் பற்றி எழுதப்பட்ட விமர்சனம், தீசிஸை வைத்து ஆகா ஓகோன்னு பேசுகிறார்கள்."

தம் கருத்துகளைத் தீவிரமாக முன் வைக்கும் சா. கந்தசாமி, "என் முதல் நாவலையே இன்னும் எழுதவில்லை. அது அப்படியே இருக்க, வேறு நாவல்கள் எழுதிவிட்டேன்'' என்கிறார். அடுத்து இவர், க. நா. சுப்பிரமணியத்தின் நளினி, அசோகமித்திரனின் பதினெட்டாவது அட்சக்கோட்டில் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதி ஆகியவற்றைத் தொடராக்க இருக்கிறார்.

டெவில்பீஸ்: சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நாவலான 'விசாரணைக் கமிஷன்', தமிழக அரசு நூலகக் குழுவினரால் நிராகரிக்கப்பட்டு, புத்தகங்கள் வாங்கப்படவில்லை. வாழ்க, அரசின் இலக்கியத் தொண்டு!

— துளசி

படம்: **'க்ளிக்' ரவி**

எப்போது அடிக்கும் லக்?

போன வருஷம், சுமார் எத்தனை சினிமா பார்த்திருப்பீங்க? பத்து? இருபது? முப்பது? ஆனா, ரிலீஸான தமிழ்ப் படங்கள் மொத்தம் 119!

இளமனசு கிள்ளாதே, ஒரே குறி, தங்கமகள், பொன் மானைத் தேடி, வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு, அவள் ஒரு சிதை, ஐ லவ் யூ டீச்சர், டைம் பாம், போக்கிரிக் காதலன் – இதெல்லாம் உங்க ஊர் தியேட்டர்ல வந்ததா? அத்தனையும் ரிலீஸான படங்கள்!

"1998 ஜனவரிக்கு முன்னாடியே சென்ஸார் ஆகி, இதுவரைக்கும் ரிலீஸ் ஆகாத படங்கள் மொத்தம் 146 இருக்கு சுமி"ன்னு கணக்கு சொன்னார் சினிமா கம்ப்யூட்டர் பிலிம் நியூஸ் ஆனந்தன்.

ஒரு படத்துக்குத் தயாரிப்புச் செலவு தோராயமா அம்பது லட்சம்னு வெச்சுக்கிட்டோம்னா, 146 படங்களுக்குச் செலவு என்ன ஆறது? இது தவிர ரிலீஸாகி, ஒரு வாரத்துல டப்பாவுக்குள்ள போன படங்கள் மட்டும் அம்பதோ என்னவோ. ஏழை நாடு இந்தியால எத்தனை கோடி இப்படி முடங்கிப் போறது பார்த்தீங்களா?

ஒரே ஒரு வருஷம் மட்டும் இங்க யாரும் படம் எடுக்காம, அந்தப் பணத்தைச் சேர்த்தால், நம்ம மாநில பட்ஜெட்ல துண்டு விழுற தொகையன்வுக்கு இருக்குமோ என்னவோ?

உத்தரவாதமில்லாத ஒரே தொழில் சினிமாதான்னு சினி ஃபீல்டுல இருக்கற என் ஃப்ரெண்ட்ஸ் பலர் அடிக்கடி சொல்லுவாங்க. ஆனா, விட்டுட்டு வாங்கன்னா வரமாட்டாங்க! 'ஒரு லக் அடிச்சதுன்னா எங்கியோ போயிடலாம்!'னு கண்ணுல கனவோட அவங்க பேசறதைப் பார்க்கப் பாவமா இருக்கும்.

தினசரி ராத்திரி ஒம்போதே காலுக்கு லோக்கல் கேபிள் நெட் வொர்க்ல ஒரு புதுப் படம் பார்க்கும் போது அதை விட ரொம்பப் பரிதாபமா இருக்கும். என்ன லக் அடிச்சாலும் இப்படி ரிலீஸான மறுநாளே கேபிள்ள விட்டுட்டா எந்தப் படம் தியேட்டர்ல ஓடும்?

* * *

விஜயராகவன் கவிதைக்கு அப்புறம் நிறையப் பேர் ஆர்வமா கவிதைகள் அனுப்பறாங்க. பஸ் ஸ்டாண்ட்ல நிக்கற நேரத்துல, நாலணா போஸ்ட் கார்ட் கையில் இருந்துட்டா, 'அவளே, இவளே, நேசிப்பு, சுவாசிப்பு, நிலாமுகம், பலா இதழ்'னு நாலு வரி கிறுக்கி அனுப்பிடறதை வன்மையா கண்டிக்கிறேன். இந்த செக்‌ஷன்ல காதல் கவிதைகளுக்கு 144 போட்டுடலாமான்னு கூட யோசிக்கத் தோணுது. இந்த வாரம் சித்தூர் முருகேசன் கவிதை ஒண்ணு தரேன்.

வீட்டின் உள்ளே
உறங்கினால் கொசு
வெளியே சைக்கோ கொலைகாரன்
பேக்டரியில் சூப்பர்வைசர்
நகரப் பேருந்தில்
ஜில்லென்று காற்று வர,
"யோவ்! தூங்கி விழாதய்யா!"

'மனக் குரங்கு'ன்னு ம.ந. ராமசாமி ஒண்ணு அனுப்பியிருக்கார். ஆந்திர சைக்கோ கொலைகாரன், சித்தூர் முருகேசனை பாதிச்சிருக்கறதை விட அதிக பாதிப்பை இந்தக் 'குரங்கு' தரும். (But, இதை நகைச்சுவைன்னு எடுத்துக்க நான் தயாரில்லை)

மனக்குரங்கு

செய்தித்தாளின்
'காலமானார்' பகுதியில்
தெரிந்தவர் பெயர்
காணாத போது,
சற்று...
ஏமாற்றமாகத்தான்
இருக்கிறது!

* * *

மெரீனா பக்கம் போயிருந்தேன், ஃப்ரெண்ட்ஸோட. பளபளன்னு லைட் போட்டுட்டா சிங்காரச் சென்னை ஆயிடுமான்னு மேயர்கிட்ட கேட்கணும்னு நினைச்சுக்கிட்டேன். பயங்கரக் குப்பை! மாநகராட்சி குத்தகை விட்ட ஒரே ஒரு ரெஸ்டாரண்ட்தான் பீச்சுக்கு வரவங்க உட்கார்ந்து சாப்பிட இருக்கு. அந்த ஒண்ணாவது ஒழுங்கா இருக்க வேணாமா?

கூல்ட்ரிங்க் சாப்பிட்டு (யார் தூக்கி சாப்பிடறாங்க?) தூக்கிப் போட்ட பேப்பர் தம்ளரைக் கழுவி, மறுபடியும் அதே தம்ளர்ல அடுத்தவருக்குத் தர்ற அநியாயத்தைக் கண்ணால பார்த்தேன்; ஹாரிபிள்! சுத்தம்ங்கறதைத் தொட்ட கையால தொடலை! சென்னா கொண்டு வராங்க, ப்ளேட்ல. பிளேட் விளிம்புல ஏற்கெனவே சாப்பிட்ட மிச்சம், சரியா அலம்பப்படாம காய்ந்து போய் அப்படியே இருக்கு! (But, விலை மட்டும் ஏரோப்ளேன் விலை!)

வர்றவங்க பெரும்பாலும் கனவு காண வர்ற இளம் ஜோடிகள்ங்கறதால யார் கண்ணுலயும் இதெல்லாம் படறதில்லை. என்னை மாதிரி சமூகப் பிரக்ஞை (கரெக்டா?) உள்ள யாராவது தட்டிக் கேட்டா, ''இஷ்டமிருந்தா சாப்டு. இல்லாட்டி எழுந்து போ!''ன்னு தெனாவட்டா பதில் வருது.

அடிக்கடி குடும்பத்தோட பீச்சுக்குப் போறதுண்டுன்னு ஸ்டாலின் ஒருதரம் ஏதோ ஒரு பத்திரிகைல சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வருது. அடுத்த தரம் போகும்போது அவசியம் இந்த ரெஸ்டாரண்டுக்கு வருகை தரணும்னு அன்போட கேட்டுக்கறேன்.

* * *

டிஸ்கவரி சேனல், நேஷனல் ஜ்யாகரஃபிக் சேனல் – இதுல எல்லாம் ஒர்க் பண்ற ஒளிப்பதிவாளர்களுக்குக் கல்யாணம் ஆகியிருக்குமா? அவங்க பொண்டாட்டி, பிள்ளைங்களை கவனிக்க அப்ப டைம் இருக்குமா? – அடிக்கடி எனக்குத் தோணற விஷயம் இது. சிங்கம், புலி, கரடியானாலும் சரி; மண் புழு, வெட்டுக்கிளியானாலும் சரி. அதோட லைஃபை அப்படியே காட்டறதுன்னா, நேரம், காலம், சோறு, தண்ணி இல்லாம வேலை பார்த்தாகணும்னு நினைக்கறேன்.



லாஸ்ட் வீக் நேஷனல் ஜ்யாகரபிக் சானல்ல மீன்களோட வாழ்க்கை பற்றி ஒரு ப்ரோக்ராம் பார்த்தேன். கேமராமேன் தண்ணிக்கடியில கமார் ஒரு மாத காலமாவது தனிக்குடித்தனம் போயிருக்கணும். மீன்களோட பலவகை, அதுங்களோட குடும்ப – சமூக(!) வாழ்க்கை, காதல், ஊடல், கர்ப்பமாறது, டெலிவரி டைம், விளையாட்டு, சாப்பாடு, தூக்கம் (ஆம்!) – எது ஒண்ணையும் விடாம துரத்தித் துரத்திப் படம் பிடிச்சிருக்காங்க.

நம்ம டீவிக்கள் ஆயிரம் வாரம், நாலாயிரம் எபிஸோட் குடும்ப சென்டிமென்ட் கரைசல்களை வழங்கறதோட ஜென்ம சாபல்யம் அடைஞ்சுடுது. இதுக்கே ஆயிரம் வியூவர்ஷிப் ரேட்டிங், ஸ்பான்ஸர்ஷிப் போட்டி etc., etc., நான் 'தனித் தமிழ்' சேனல்கள் பார்க்கறதை அடியோட நிறுத்திட்டேன். என் வோட்டு, முன் சொன்ன ரெண்டு சானல்களுக்கே.

* * *

By the way, இந்த டிஸ்கவரி சானல் கேமராமேன் பத்தி ஒரு ஜோக்.

ஒரு ஒளிப்பதிவாளரோட மனைவிக்கு ரொம்ப வருத்தம். புருஷன் தன்னை கவனிக்காம எப்பப் பார்த்தாலும் பூச்சி, புழுக்களைத் துரத்திட்டே போயிட்டிருக்காரேன்னு. அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் பிரமாதமா ட்ரெஸ் பண்ணிப்பா. நல்ல சமையல் பண்ணி வைப்பாள். சிரிச்சி சிரிச்சிப் பேசுவாள். ம்ஹூம்! நம்ம டிஸ்கவரி கேமராமேன் கண்டுக்கவே மாட்டார்! அவர் சிந்தனையெல்லாம் வேற எங்கியோ இருக்கும்.

என்னடா பண்ணலாம், இந்த ஆளை... ஒரு தரமாவது கிட்ட வந்து அன்பா பேசி, ஆசையா கொஞ்ச மாட்டேங்கறாரேன்னு அந்தம்மாவுக்கு வருத்தம்.


ஒரு ஐடியா பண்ணா. உலகத்திலேயே அபூர்வமான பளபளப்பு – ஜொலிப்பு உள்ள ஒரு பூச்சியை (அதெல்லாம் அவங்களுக்குக் கிடைக்கறதுதான் கஷ்டமில்லையே!) பிடிச்சித் தன் தலைல ஹேர்பின் குத்தி – அதை ஒரு அலங்காரப் பொருளா வெச்சுக்கிட்டா. இப்ப கட்டாயம் புருஷன் தன்னை கவனிப்பான் – அட்லீஸ்ட் ஏறெடுத்தாவது பார்ப்பான்னு ஒரு நம்பிக்கை.

நைட் புருஷன் வீட்டுக்கு வந்தப்ப, நைஸா படுத்து, தூங்கறாப்பல பாவ்லா பண்ணிட்டிருந்தா. தலைல அந்தப் பூச்சி பளபளன்னு துடிச்சிட்டிருக்கு.

பத்து நிமிஷம் ஆச்சு. அரைமணி ஆச்சு. ஒரு மணி ஆச்சு. ஆள் கிட்ட வரவேயில்லை. ஒரு சின்ன சப்தம் கூட இல்லை!

திரும்பிப் போயிட்டாரான்னு இவ கண்ணைத் திறந்து பார்த்தா... அவ புருஷன் பரண் மேல உட்கார்ந்துட்டிருந்தான். கையில zoom லென்ஸ் கேமரா!

— சுமி


• பரியாரும் அருகு

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? இமயத்துக்கு (ஜெ) கூழாங்கல் (வாழப்பாடி) சவால் விடக்கூடாது என்கிறாரே செங்கோட்டையன்..?

! டேவிட் – கொலாயத் (David and Goliath) கதை செங்கோட்டையனுக்குத் தெரியாது போலும்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? பாங்காக் ஆசியப் போட்டியில் பங்கேற்று தாயகம் திரும்பிய இந்திய அணியினருக்கு மும்பை விமான நிலையத்தில் தங்க வசதி அளிக்காமல் அலட்சியம் செய்யப்பட்டது பற்றி...?

! நாட்டுப்பற்று மிக்கவர்கள் ஆட்சியல்லவா... அதான் நடுவீதியில் நிறுத்திவிட்டார்கள். பாவம், பிரதமர்! அவர்களைத் தமது பிறந்த நாளன்று அழைத்துப் பேசி சமாதானமடையச் செய்திருக்கிறார். மற்றவர்கள் செய்யும் குளறுபடிகளுக்கு ஈடுகட்டவே அவருக்கு நேரம் சரியாக இருக்கிறது.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.


? 'அருணாசலம் படத்துக்கு விருதா...? ரசக் குறைவு' என்கிறாரே நடிகர் நாசர்?

! ரசமாவது சாம்பாராவது.... எல்லாம் பால்கோவா ஊட்டும் சமாசாரம்தான்!

● எஸ். பாரதிசூர்யா, சிதம்பரம்.

? 'ழ'வை 'ன' என்று உச்சரிக்கும் சின்னத்திரைக்காரர்களைத் தமிழ்க் குடிமகனிடம் பிடித்துக் கொடுத்தால் என்ன செய்வார்...?

! தமிழ் பயிற்சித் துறை வேறு, தமிழ் வளர்ச்சித் துறை வேறு என்பதால் அன்பழகனிடம் அனுப்பி வைப்பார்!


• தெரியாத கதை...

● வி. பரமசிவம், மதுரை – 16.

? எம்.பிக்களுக்கான தொகுதி வளர்ச்சி நிதி ஒரு கோடியிலிருந்து இரண்டு கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது பற்றி...?

! தொகுதி மேல் அக்கறையுள்ள எம்.பியைப் பெற்ற தொகுதிகள் கொடுத்து வைத்தவை. தொகுதிப் பணிகளில் கமிஷன் அடிக்கும் எம்.பிக்களுக்கோ அது இரட்டிப்பாகும்... ஆக, இரு வகையினருக்குமே லாபம்! அதான் திட்டம் நன்றாகச் செயல்படுவதாகப் பிரதமர் சான்றிதழ் கொடுத்துவிட்டார்!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'விடுமுறை நாட்களில் சிறைக் கைதிகளை பிக்னிக் அழைத்துச் செல்ல வேண்டும்' என்று லாலுபிரசாத் யாதவ் கூறுகிறாரே...?

! அவருக்கென்ன.... Life is one long picnic!


● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.


? ரூபாயின் மதிப்பு 8.9 பைசா தானாமே...?

! ஆமாம். கவலைக்குரிய நிலைமைதான்.

ரூபாயின் மதிப்பு 8.9 பைசாதானாமே..?

போதாக்குறைக்கு, நிதியமைச்சர் எதிர்பார்த்ததைக் காட்டிலும் நிதிப் பற்றாக்குறை


• 'ழ'...


• ...'ன'வானால்...

அதிகமாயிருக்கும் என்று வேறு ஒப்புக் கொண்டிருக்கிறார். 1999 நம்மைப் பார்த்து பயங்கரமாய் விழிக்கிறது.

● கே. எம். சுப்ரமணியன், பூனாம்பாளையம்.

? 'ஜெ'யால் பா.ஜ.கவுக்கு ஆதாயமா? பா.ஜ.க.வால் 'ஜெ'வுக்கு ஆதாயமா...?

! 'நெய்க்கு தொன்னை ஆதாரமா...'



• 'பாஸ்கோவா' பாலிடிக்ஸ்...

! ஆமாம். 'ஜெ' மிரட்டல்களையும் மமதா உருட்டல்களையும் பத்திரிகை படித்துத்தானே அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

● என். சுப்பிரமணியன்,

சென்னை - 33.

? கோடிக்கணக்கில் வருமான வரி பாக்கி வைத்திருக்கும் சினிமா துறை நபர்களிடம் வரி வசூலிப்பது பற்றி அமைச்சர் **'the time spent and effort made on recovery of tax arrears is not commensurate with the result sought to be achieved'** என்று சொல்கிறாரே...?

! Shame! Shame! The Minister's reply is not commensurate with the duties expected of him.

● மு. இராமசாமி, வயலூர்.

? உங்களுக்கு யாருடைய எழுத்து நடை பிடிக்கும்?

! பிரபஞ்சன். எண்ணங்களை நடையினால் போர்த்தி மறைக்காமல் நேரடியாகவும் மென்மையாகவும் பரிமாறும் அழகு.




• பத்திரிகைகளுக்கு நன்றி!

• படம் : சௌந்தர்ராஜன்

● கு. அருணாசலம், தென்காசி.

? சட்டசபை, பார்லிமெண்ட் அன்றாட நடவடிக்கைகளில் 'கேள்வி நேரம்' என்று ஒதுக்கப்பட்டிருப்பது போல் அமளி நேரம் என்று நேரம் ஒதுக்கினால் பிற பணிகள் தடையின்றி நடக்கும் அல்லவா...?

! இதற்கும் அதற்கும் அமளிக்கும் துமளிக்கும் நேர ஒதுக்கீடு செய்து கொண்டே போனால் உருப்படியான காரியங்களுக்கு ஒன்றும் மிஞ்சாது.



• எடுகட்டல் நிபுணர்



• பிக்னிக் பிரியர்

கதைதான்!

● ச. ஆ. கேசவன், இனாம்மணியாச்சி.

? விளம்பரம் சிறிதுமின்றி வெளுத்துக் கட்டும் தொழில் எது...?

! விளம்பரத் துறை தொழில்தான்!

● எம். குணசேகரன், வேலாயுதம் பாளையம்.

? பத்திரிகைகளைத் தவிர வேறு எவரிடமிருந்தும் வாஜ்பேயி அரசுக்கு அச்சுறுத்தல் இல்லை என மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்கிறாரே...?


● ஆர். பி. ஜெயசந்திரன்,

பூனாம்பாளையம்.

? பதவியால் சாதிக்கக்கூடியது அதிகமா? பணத்தால் சாதிக்கக்கூடியது அதிகமா...?

! பதவியில் சாதிக்க அறிவு வேண்டும். பணத்தால் சாதிக்க மனம் வேண்டும். இருக்கிறதா பாருங்கள்... அவர்களிடம் எதிர்பாருங்கள்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆர். ராஜதுரை,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி - 609 110.



நிலா வட்டம்

ஒரு வாரம் ஓடி விட்டது.

சிவராம் தன் வேலை உண்டு, தான் உண்டு என்று வருவதும் போவதும்.

அன்றைய தின அமளிக்குப் பிறகு. என்னவெல்லாம் நிகழ்ந்து விட்டது.

ஸ்வேதாவின் ஆவேசமான முகம். இனி எங்கே காதல் துளிர்க்கப் போகிறது. வேலுவைக் கொண்டு வந்து வைத்ததின் மூலம் தானே சமாதி கட்டியாகி விட்டது.

ராஜப்பாவின் நிலைதான் திண்டாட்டம்.

சிவராமிற்கு ஆதரவாய்க் குரல் தர இயலாமல்... அதே நேரம் அவன் படும் துயர் உறுத்த... திக்குமுக்காடிப் போனார்.

சிவராம் எதுவுமே மறுக்கவில்லை.

தப்புத்தான். என் மீதுதான். கைகளை உயர்த்திக் கூப்பினான்.

"ஸாரி... இதுவே கடைசி முறை. இனி வேலு இங்கே இருக்க மாட்டான். ஐ ப்ராமிஸ்"

கூட்டத்தில் ஏதோ முனகல் கேட்டது.

ராஜப்பா அந்த வினாடியைத் தனக்கும் சாதகமாக்கிக் கொண்டார்.

ரிஷபன்

"அப்புறம் என்ன... மன்னிப்புக் கேட்டாச்சு. வேலுவும் இருக்க மாட்டான். வாங்க போகலாம்."

கலைந்து போனார்கள். மூவரைத் தவிர. வாட்ச்மேன், ராஜப்பா, சிவராம்.

ராஜப்பா அருகில் வந்து அவன் கையைப் பற்றி அழுத்தினார். 'கவலைப்படாதே. நான் இருக்கிறேன்.' போய்விட்டார்.

"ஸார்..." வாட்ச்மேன் இழுத்தான்.

"என்ன..." சிவராம் திரும்பிப் பார்த்தான்.

"வேலு..."

வாட்ச்மேன் கை நீட்டிய திசையில் காம்பவுண்டை ஒட்டி தரையில் சரிந்திருந்த உருவம்... வேலுவா?

"மயக்கமா கிடக்காரு. என்ன செய்யிறதுன்னு..."

சிவராம் மெல்ல நடந்து அருகில் போனான். நாற்றம் குடலைப் புரட்டியது.

"வேலு..."

ஊஹூம். அசைவில்லை.

"வேலு."

பொறுமையின்றி அவனைத் தொட்டு உலுக்கினான்.

"வேலு."

"யாரு."

அரைக் கண்ணால் சிவராமைப் பார்த்தான். முகத்தின் லேசாய் மலர்ச்சி.

"யா...ழு... தம்பியா."

"எழுந்திரு."

"தம்பி. நாழ்... இங்கே... வழ்ழு...."

"எழுந்திருடா."

சிவராமின் கோபம் அவனைப் பாதிக்கவே இல்லை. கரிசனம் காட்டக் கூடிய நபர் மிக அருகில் இருக்கிற ஸ்வாதீனத்தில் வேலு சிவராமின் மேல் உரிமையாய்ச் சாய்ந்து கொள்ள முயற்சித்தான்.

"போடா... வெளியே..."

"தம்பி. நாழ்... சொல்றதைக் கேழு..."

"வாட்ச்மேன்.... இவனை வெளியே தூக்கிப் போடு..."

சிவராமின் இனிய முகம் அந்த வினாடியில் விகாரப்பட்டு சுருங்கியது.

வாட்ச்மேன் ஓடி வந்தான். வேலுவைப் பற்றித் தரதரவென இழுத்துப் போனான். எந்த எதிர்ப்புமின்றி வேலு அவன் இழுப்பிற்குக் கட்டுப்பட்டு நகர்ந்தான்.

வேதாசலம் அவனைக் கூப்பிட்டார்.

"ஃபைனல் டச்சஸ் பண்ணனும். நீ பார்த்துக்கிறியா. உங்க ஃப்ளாட்ல..."



"இன்னுமா முடியலே?"

"அப்படியில்லே சிவராம். குடி வந்த பிறகு ஏதாவது சரியில்லேன்னு அவங்க ஃபீல் பண்ணலாம். சாரம் பிரிச்சதுல... டிஸ்டெம்பர் அடிச்சதுல... ஏதாவது கிராக். ஸ்மட்ஜஸ்... சரி பண்ணிரலாமே."

வேதாசலத்திற்கு எதையும் 'நீட்'டாகச் செய்யும் குணம். கட்டிக் கொடுத்ததோடு தன் வேலை முடிந்தது என்று போக மாட்டார். அதன் பிறகு குடி வருபவர்களின் சங்கடங்கள் விசாரித்து, தேவையான அளவில் உதவுவதும் அவர் வழக்கம்.

"சொல்கிறேன். நானும் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் அரை மனதாய்.

பெருமூச்சு வெளிப்பட்டது. வேறு வழியில்லை. சிறிது காலம் தள்ளிப் போடலாம் என்று நினைத்தது வீண். மீண்டும் எல்லோரையும் சந்தித்தே ஆக வேண்டும்.

கோகுல் அபார்ட்மெண்ட்ஸுக்காக வாங்கிய இடத்தில் பழைய வீடுகளை இடிக்கும் பணி துவங்கியிருந்தது.

மேஸ்திரி அவனிடம் தனிமையில் ஏதோ பேச விரும்பியதாகத் தோன்றியது. இரண்டு மூன்று முறை அருகில் வந்து வேறு நபர்கள் வந்ததால் எதுவும் பேசாமல் விலகிப் போனார்.

சிவராம் அத்தனை வேலைப்பளுவிலும் கவனித்து விட்டான்.

அவரைத் தனியாக அழைத்துப் போனான்.

"என்ன."

"ஒண்ணுமில்லீங்க. அய்யா. அதான்... பெரியவரு இனிமேல நீங்கதான் பொறுப்புன்னு சொல்லிட்டாரு."

"பணம் எதுவும் வேணுமா?"

முன் பணம் வாங்குகிற பழக்கம் உண்டு என்பதால் விசாரித்தான்.

"பொண்ணை வீட்டுக்கு அழைக்கணும். கொஞ்சம் செலவாவும். அய்யா உங்ககிட்டே

"என்ன?! இந்த வருடத்துக்கான 'சிறந்த கட்டடக்கலை நிபுணர்' பட்டத்தைக் கவிஞர் பூவேந்தனுக்குக் கொடுத்திருக்கிறீங்களா? ஏன்?"

"சேலையிலே வீடுகட்டவா? ஜன்னல் வச்ச ஜாக்கெட் போடவா'ன்னு பாட்டு எழுதியிருக்கிறாரே!"

— காவிரிமணாளன்

வாங்கிக்கச் சொல்லி..."

"எவ்வளவு வேணும்."

மேஸ்திரியைப் பொறுத்தவரை மிக நம்பிக்கையான மனிதர் என்று முன்பே வேதாசலம் சொல்லியிருந்தார்.

சிவராமுக்கும் சில நாட்கள் பழக்கத்தில் புரிந்து விட்டது. பணத்தைக் கொடுத்தான்.

"அப்புறம் இன்னொரு விஷயம். பெரிய அய்யாகிட்டே கேட்டுக்கவா.."

"சொல்லுங்க."

"எப்பவுமே வேலை ஆரம்பிக்க கொள்ள... அய்யா சிரிக்கக் கூடாது. வழக்கமா செய்யிறதுதான். வேலை செய்யிற ஆளுங்க... மத்தில... ஒரு நம்பிக்கை. படிக்காத ஜனமுங்க." பாதி வரிகளைமென்று விழுங்கினார் மேஸ்திரி.

"என்ன செய்யணும்."

"முனீஸ்வரன் கோவிலுக்கு... கோழி விடணுங்க."

கோழி... பலியா. ஏதோ உறைந்து கொண்டது சிவராமுக்குள்.

"சேச்சே. அதெல்லாம் வேணாம்."

"அப்புறம் சரியா வேலைக்கு வர மாட்டாங்க. சண்டித்தனம் பண்ணுவானுங்க."

சிவராமுக்கு உடன்படத் தோன்றவில்லை.

"வழக்கமா செய்யிறதுதாங்க. அய்யா குடியிருக்கிற ஃப்ளாட்ல கூட."

மேஸ்திரி சட்டென்று நிறுத்திவிட்டார். யாரோ சமீபித்ததுதான் காரணம்.

"என்ன வேணும்?"

"புக்கிங் ஓவராயிருச்சா..."

வந்தவர் கோகுலில் ஒரு ஃப்ளாட் தேவைப்படுபவர்.

"ப்ளீஸ்.. கம்..."

சிவராம் அவரை ஷெட்டிற்குள் அழைத்துப் போனான். மேஸ்திரி தயக்கத்துடன் நகர்ந்தார்.

இருட்டில் மசமசவென்று நின்ற உருவம் முதலில் புலப்படவில்லை சிவராமுக்கு.

தடாலெனக் காலில் விழுந்ததும் மிரண்டு பின் வாங்கினான்.

"யாரு.... யாரு..." என்றான் பதற்றமாய்.

"தம்பி... என்னை மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லு."

வேலுதான். சிவராமுக்கு முகம் இறுகியது. "குடிகாரனுக்கு ரோஷம்.. மானம்... ஏதாவது இருக்கிறதா..."

வேலு ஸ்தம்பித்தான் சில வினாடிகள்.

"மன்னிச்சுக்குங்க."

உடலில் துளி அசைவில்லை. வழி விட்டு விலகி நின்றான்.

நடிக்கிறான். மீண்டும் அனுதாபம் காட்ட... இன்னொரு அவமானம் தேடித் தருவான்.

சிவராம் அவனை அலட்சியம் செய்து நடந்தான். தற்செயலாய் நூறடி போனதும் திரும்பிப் பார்க்க, வேலு அசையாமல் நின்றது தெரிந்தது.

தொலைபேசி அழைத்தது.

"நான்தான்" என்ற குரல் அடையாளம் புரிய சிவராம் வணக்கம் சொன்னான்.

"என்ன புரபசர் ஸார்."

"எண்களும் நம் வாழ்வும். இந்தத் தலைப்புல இன்னிக்கு என்னோட பேச்சு மக்கள் மன்றத்துல இருக்கு. வர முடியுமா?"

"ஸாரி. எனக்கு இதற்கெல்லாம்..."

"ஒன்று சொல்லட்டுமா. நீ வருகிறாய். எழுதி வைத்துக் கொள். மணி இப்போது சரியாகப் பத்து முப்பத்தைந்து. கூட்டினால் ஒன்பது. நீ வருகிறாய். சரியா ஏழு மணிக்கு என் பேச்சு..."

போதும் இந்த அபத்தம் என்று தோன்றியது சிவராமுக்கு. அவரை 'நோஸ்-கட்' செய்ய வேண்டும் போல் ஒரு வெறி கிளர்ந்தது.

"புரபசர். நீங்களும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். நான் வரப் போவதில்லை."

புரபசரின் கேலிச் சிரிப்புதான் பதிலாகக் கேட்டது.

"வைத்து விடுகிறேன்." என்றார்.

ராஜப்பா வந்திருந்தார்.

"ஸாரிப்பா. மறுபடியும் ஒரு சிக்கல்..."

"என்ன?"

"நேத்து மதியம். வேலை செய்ய வந்த ஆட்களில் ஒருத்தன் ஏ பிளாக்ல ஒருத்தர் ஃப்ளாட் கதவைத் தட்டியிருக்கான். இவனைக் கேட்டா... ஆள் இல்லேன்னு நினைச்சு திறந்துட்டேங்கிறான். அந்த ஃப்ளாட்காரருக்கு பயங்கர கோபம்."

"என்னதான் நடந்தது. கொஞ்சம் புரியும்படி சொல்லுங்க."

"அந்த நேரத்துல அந்த ஃப்ளாட்ல ஒரு பொண்ணு மட்டும் தனியா இருந்திருக்கு. பயந்து சத்தம் போட்டிருக்கு. நைட் அவர் வந்ததும் தகவல் தெரிஞ்சு ஒரே கலாட்டா... பிரசிடெண்ட்ங்கிற முறையில என்கிட்டே தகவல்..."

"ஓ!"

"நான் அந்த ஆளை விசாரிச்சாச்சு. பரிதாபமா புலம்பறான். ஃபைனல் டச்சுக்காக ஒவ்வொரு ஃப்ளாட்டா பார்த்துகிட்டு வரப்ப... இந்த ஃப்ளாட்ல ஆள் யாரும் இல்லேன்னு நினைச்சு கதவைத் திறந்துட்டேங்கிறான். போய் மன்னிப்பும் கேட்டுட்டான். ப்ச்... அந்த ஃப்ளாட்காரர் கொஞ்சங்கூட அசையலே."

"நான் என்ன செய்யணும்."

"செகரட்டரியை வரச் சொல்லுன்னு கத்தல்... நேஸ்ட்டியா சீன் கிரியேட் பண்ணவும், வேற வழி தோணலே எனக்கு."

ராஜப்பா கையைப் பிசைந்தார்.

"நான் போறேன்."

"நானும் வரட்டுமா" என்றார் உடனே.

"வேணாம். ஐ கேன் மேனேஜ்."

படியேறினான். இதே ஃப்ளாட்டில் இன்னும் என்னென்ன சிக்கல்கள் வரப் போகிறதோ...

"ஸார்."

கதவை நாசூக்காய்த் தட்ட திறந்து கொண்டது. இறுக்கமான முகத்துடன் கதவைத் திறந்தார்.

"ஸார். கேள்விப்பட்டேன்."

"இஃப் ஆல் யுவர் ஸாரீஸ் வித் யூ... வாட் டு யூ திங் ஆஃப் அஸ்?"

சிவராம் சமாதானமாய்ப் பேச முயன்றான்.

"நீங்க ஒரு நிமிஷம் நான் சொல்றதைக் கேட்கறீங்களா?"

"வொய் ஷுட் ஐ? நான் சொல்றதை நீங்க கேளுங்க. இஃப் ஆல் யுவர் டர்ட்டி ஃபெலோஸ் அவே ஃப்ரம் மை ஏரியா."

"வந்து...."

கதவைப் படீரென மூடிக் கொண்டு விட்டார். சிவராம் முகத்தில் அறைபட்ட மாதிரி உணர்ந்தான்.

தளர்ந்த நடையுடன் கீழிறங்கினான்.

வேலை செய்த ஆள் இவனைப் பார்த்ததும் ஓடி வந்தான்.

"அய்யா. என்மேல அபாண்டமா..."

"சூபர்வைசர் எங்கே?"

"இருக்காருங்க. இதோ கூப்பிடறேன்."

ஓடி சூபர்வைசருடன் திரும்பினான்.

"ஏ ஸெவனுக்குப் பக்கத்துலயே இனிமேல யாரும் போகக் கூடாது. புரியுதா?"

"அய்யா. வந்து. உள்ளார.. வேலை பாக்கி..."

"இருக்கட்டும். யாரும் போக வேணாம்."

"சரிங்க."

அலுத்தது. மனிதனுக்கு சோதனைகளே சுயபலம் உணர்த்தும். ஆனால் அவையே வாழ்க்கையானால்...

ஏன் ரிஸிக்னேஷன் கடிதத்தை அனுப்பினேன்?

சிவராம் உள்ளுக்குள் வருத்தப்பட்டான்.

ராஜப்பா அவனுக்காகக் காத்திருந்தார்.

"என்ன, முருங்கை மரம் ஏறினது... இறங்கிச்சா."

உதட்டைப் பிதுக்கினான், இல்லையென்று.

"போகிறது விடு."

கைவிரல்களைப் பிரித்துக் காட்டினார்.

"அஞ்சும் ஒன்று போலில்லை."

"ஒவ்வொரு நேரம் எனக்கே என் மீது நம்பிக்கை பறிபோகிறது."

"புது ஷெட்டைப் பார்த்தியா. லைப்ரரி ரெடி."

கையைப் பிடித்து உரிமையாய் இழுத்துப் போனார். ஷெட் வாசலில் முப்பத்தாறு என்ற எண் கருப்பு வட்டத்தில் வெள்ளை நிறத்தில் எழுதப்பட்டிருந்தது.

"என்னது?"

"சில பேர் அபிப்பிராயம். முப்பத்தஞ்சு நல்ல நம்பர் இல்லேன்னு. சரி. புது ஷெட்டுக்கு அலாட் பண்ணிரலாம்னு."

புரபசர் கேலியாகச் சிரிக்கிற பிரமை தட்டியது. அவர் வேலையாகத்தான் இருக்கும். தன்னிடம் சொன்னது போலவே பிறரிடமும் பேசியிருக்கக் கூடும்.

சிவராம் திரும்புவதற்குள் அவர்கள் முன் ஒரு சோற்றுக்கட்டி வந்து விழுந்தது. மேலே காக்கை பறந்தது. குனிந்தால்... ரத்த நிற சோற்றுப் பருக்கைகள்.

(தொடரும்)



தாகம்

ஒரு சொம்புத் தண்ணீரில் வாய் கொப்பளித்த பின்னும் நெஞ்சிலோ வயிற்றிலோ நீளமான முடி இருப்பதாகவே குமட்டியது மாதவனுக்கு. இப்படி ஒரு பிறவியா என அநேக சமயங்களில் தோன்றும். இவள் பெண்தானா? எப்படி இவளால் அகாலமாகத் தூங்க முடிகிறது? பனிப் புகையில் வாசலில் புதுக் கோலங்கள் பூத்துக் கிடக்க, தேங்காய் பழக் கூடையும் ஈரக் கூந்தலுமாக கோவிலுக்குச் செல்லும் பெண்களைக் கண்டு என்ன எண்ணங்கள் ஓடும் இவள் மனத்தில்?

இப்போதும் கூட இட்லியில் நீளமான முடி வந்து சாப்பிடாமல் எழுந்து கொண்டானே தன் கணவன், அவன் காலைப் பொழுது கத்தலோடு துவங்கியதே என்ற வருத்தமோ துக்கமோ இருக்கப் போவதில்லை அவளுக்கு.

மணமான பின் வந்த ஆரம்ப நாட்களில்

பலராம் செந்தில்நாதன்

சிக்கனம், சுத்தம், சுகாதாரம், வீடு மற்றும் குழந்தைப் பராமரிப்பு, மேனர்ஸ், உடை என சொல்லிக் கொடுத்த அனைத்துப் பாடங்களும் கருங்கல்லில் அடித்த ஆணியாய் வளைந்து கொண்டது. பொறுமையின் எல்லை தாண்டி மூன்றாவது டிகிரியைப் பிரயோகித்ததில் அக்கம் பக்கம் கூடி விலக்கினார்களே அன்றி யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. தினம் பாரத யுத்தம். அவளுடன் பேசுவதையும் நிறுத்திக் கொண்டான்.

“அப்பா ஸ்கூலுக்கு டைம் ஆச்சு” என்ற சுமதியின் உலுக்கலில் வாட்சைப் பார்த்தான். 8:35. பத்து நிமிடத் தாமதம்.

சமையலறை போய்த் தண்ணீர் குடித்து சாப்பாட்டுக் கேரியரை புறக்கணித்து புறப்பட்டான். சுமதியை பள்ளியில் விட்டு ஆபீஸ் போக வேண்டும். இன்றைக்கு ஒரே உதையில் வண்டி ஸ்டார்ட் ஆனது.

குழந்தைக்காகத்தான். இல்லாவிடில் தலை முழுகி விடலாம் அவளை. பாதத்தில் சமையலறையின் பிசுபிசுப்பு செருப்பில் ஒட்டி அவஸ்தையாய் இருந்தது. பக்கவாட்டில் மாவு காய்ந்து கொசு மொய்க்கும் பாத்திரம், பாதி சிரவிய தேங்காய் மூடி, டீ தம்ளர் சாய்ந்து தேசப்பட இலங்கையாய் உறைந்திருப்பதை சுற்றிலும் கறுப்பு எறும்புகள் என சமையலறை கலவரமூட்டும் விதமாக இருந்தது.

படியிறங்கி, நான்காவது வீதி வந்ததும் நீலமேகம் போய்விட்டதற்கடையாளமாக நெல்லி மரத்தினடியில் டீவி.எஸ்.-50 இல்லை. நல்ல வீடும் மனைவியும் வாய்க்கப் பெற்ற நீலமேகம் உடன் பணிபுரியும் நண்பன். நெல்லி மர நிழல் குளுமையில் எப்போதுமே சிவப்புக் கரையிட்ட கச்சிதமான கோலத்துடன், சாய் சதுர மூங்கில் பட்டைகளால் மறைக்கப்பட்ட திண்ணை வீடு. ஆலயம் போன்றே தோன்றும். சிவப்பு வழுவழுப்பான சிமெண்ட் தரையில் கால் வைத்தவுடன் ஏற்படுகிற குளுமையும், வீட்டின் தூய்மையும் களைப்பை மறைக்கச் செய்யும்.

அவளைத் தவிர்க்கிற அநேக ஓய்வு நேரங்களில் நீலமேகம் வீடே அடைக்கலம் என அவனுடனும் அவனது மனைவியுடனும் பேசிக் கொண்டிருப்பான். அந்தப் பொழுதுகள் சுகமானவை, இதமானவை, நம்பிக்கையூட்டுபவை. இன்னும் தனிமை தேவைப்படுகிற நேரங்களில் இருட்டின வ.உ.சி. பூங்கா மைதானத்தில் கால் நீட்டி பின்னால் இரு கைகளும் தாங்கியாக வானத்து நட்சத்திரங்களையும் தூரத்தில் பெட்ரோமாக்ஸ் ஒளியில் இயங்கும் பானிபூரி வண்டிகளையும் பார்க் ரோடில் விரையும் வாகனங்களையும் பார்க்க மனது சுத்தமாகத் துடைக்கப்பட்டிருக்கும்.

பிரச்னையை நீலமேகத்திடம் சொன்ன போது தொணதொணத்து உபதேசிக்காமல் இரண்டொரு விஷயத்தைச் சொல்லி சில புத்தகங்களைக் கொடுத்தான். அதுவும் கவைக்கு உதவாமல் போனது.

பழங்குடி நடனமாடும் லட்சாதிபதிகள்!

பாரம்பரிய உடைகளுடன் காணப்படுகிற இந்த சுவிட்சர்லாந்து சீமாட்டிகள் ஆடி சம்பாதிக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை. ஆனால் சந்தோஷத்துடன் ஆடிப் பாடுகிறார்கள். வயது 40க்கும் மேல். இந்தத் தலை



பகல் உணவுக்கான நேரமானது என் பதையே கலியபெருமாள்தான் சொன்னார். எழுந்து ஃபேனை நிறுத்தி விட்டுப் புறப் படுகையில் சாப்பிட அழைத்த நீலமேகத் தைப் புறக்கணித்து ஆர்ய பவன் புறப் பட்டான்.

ஜில்லென தயிர் சேமியா சாப்பிடுகிற ஒவ்வொரு முறையும் பார்வதியின் நினைவை அழிக்கவே முடிவதில்லை. அதைப் போலவே செண்பகப் பூ வாசமும். இதே டேபிளில் தயிர் சேமியா சாப்பிட்டுக் கொண்டே சத்தமாக விலைப்பட்டியலைப் படித்திருக்கிறாள். பேரர் வந்து நிற்கிற வேளைகளில் 'நீங்க சொல்லுங்க' என டேபிளின் துளி நீரை விரலால் இழுப்ப வளை 'இல்ல பாரு, நீயே சொல்லு, எனக்கு எதுவானாலும் ஓகே' என்பாள். 'இங்க தயிர் சேமியா ரொம்ப நல்லாயிருக்கும்' என வர வழைப்பாள்.

ராஜண்ணன் திருமணத்தில் அவளைச் சந்தித்த காட்சி இன்னும் மனதுக்குள் பசு மையாய், பத்திரமாய் உள்ளது.

சமையல் சாமான்களுக்கான பொறுப்பும் ஸ்டோர் ரூமின் சாவியும் மாதவனிடம் ஒப் படைக்கப்பட்டிருந்தது. கதவு ஒருக்களித்து சாத்தியிருக்க, உலர் திராட்சையைத் தேடி மற்ற மளிகை சாமான்களை அடுக்கிக் கொண்டிருந்தான். குழந்தைகளின் தொட்டு விளையாட்டு, பந்திக்கு முந்துவோர், யாரையோ தேடும் பரபரப்பு என வழக்கமான திருமணப் பரபரப்பு.

'ஏங்க சந்தனம் இருக்கா?' குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். காது ஜிமிக்கி ஆட, மெல்லிய செண்பகப் பூ வாசப் பின் னணியில் ஒரு பட்டுச் சேலை தேவதை.

ஒரு பெரிய கடல் அலை பாறையில் அடித்து அந்தரத்தில் ஒரு வினாடி நின்று விழுந்தது. 'டிங்' என மணியோசை கேட்ட கோவில் கோபுரப் புறாக்கள் சடசடவெனப் பறந்தன. பெரிய ரோஜா மலரில் பட்டாம் பூச்சி ஒன்று இறக்கை விரித்து, மூடி, விரித்து அமர்ந்திருந்தது. பசுமையான நீர் நிலையில் தண்ணீருக்குச் சில அடிகள் மேலே அரை வட்டமாக வெண் பறவைகள் பறந்தன. மீண் டும், 'ஏங்க சந்தனம் இருக்கா?' தொடர்ந்து மெலிதான செண்பகப் பூ வாசம். தனக்கு அபத்தமாகப்பட்ட, தான் எப்போதும் நண் பர்களுடன் ஏளனம் செய்யும் தமிழ் சினிமாக் காட்சிகளே மனத்தில் விரிந்தது.

ஏழு வருடமிருக்குமா? ஸ்பூனை வைத்து விட்டு, விரல் விட்டதை பேரர் பார்த்துக் கொண்டிருந்தார்.

பின் தினங்களில் டவுன் ஹாலில் அடிக்கடி சந்தித்துப் பேசியதும் ஆர்யபவன் சென்றதும் மறக்க முடியா தினங்கள்.

அம்மாவிடம் விசாரித்ததில் முறைப் பெண் என்றும் ஆனால் அவளைப் பற்றிய பேச்சை அம்மா தவிர்ப்பதும் தெரிய வந்தது. தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்ன போது, சினிமா அம்மா போல் சந்தோஷப் படவில்லை. ரொம்பவும் வற்புறுத்திக் கேட்ட போது, அப்பா இறந்த போது அவன் வீட் டால் ஏற்பட்ட அவமானங்களைச் சொன் னாள்.

மாதவனுக்கு மனம் ஒப்பவில்லை.

அடம்பிடித்து, ஒற்றைக் காலில் நிற்காமல், இரண்டு காலிலும் நின்று பார்வதியைத் திருமணம் செய்து கொண்டான். ●

முறையோடு அவர்களின் நாட்டுப்புற நடனம் மண்ணோடு மடிந்து போகாமலிருக்கவே ஆடு கிறார்கள். ஒவ்வொருவருக்கும் விலையுயர்ந்த பசுக்களும், பரந்து விரிந்த பசும்புல்வெளித் தோட்டங்களும் உண்டு. பால்பண்ணைப் பெருமாட்டிகள் பழகுவதற்கு இனியவர்கள். ''வெகு இயல்பாக பழகுகிற ஸ்விட்சர்லாந்து மக்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் எப்போதும் கவலைப்படுவதேயில்லை. துளிக் கூட கோபப்படுவதில்லை. வீட்டின் கதவு தட்டி 'ஷூட்' பண்ணிக்கலாமா? என்று கேட் டால்கூட ஒருவரும் 'நோ' சொல்வதில்லை. சாலையின் ஓரத்தில் ஷூட் பண்ணிக் கொண் டிருந்தால் நமக்காக கார்களில் மெதுவாகச் செல்கிற மனோபாவம் அவர்களுக்கு. வசந்தம் கொழிக்கிற வாழ்க்கையும், சூழலும் அவர் களை மென்மையான மனிதர்களாய்ச் செதுக்க வைத்திருக்கிறது'' என்கிறார் ஸ்விட்சர்லாந்தில் படப்பிடிப்புக்குச் சென்று இவர்களின் நடனத் தையும் படம்பிடித்து வந்த இயக்குநர்கள் ஜேடி-ஜெர்ரி.

''எந்த அளவுக்கு ஸ்விட்சர்லாந்தில் சந்தோஷம் இருக்கிறதோ அந்த அளவில் சோகமும் உண்டு. ஆறு மாதம் கடுங்குளிர். குளிரைத் தாங்க முடியாமல் தனிமையின் சோகத்தில் தற்கொலை செய்து கொள்கிறவர் கள் அதிகம். பையன்களையும், பெண் களையும் ஐரோப்பிய நாடுகளுக்குப் படிக்க அனுப்பி வைத்து விட்டு, பெரிய பண்ணை வீடுகளில் தனிமையில் வாழ்கின்றனர் தந்தையும் தாயும்'' என்றார் ஜேடி.

- காவ்யா

பொன்னியின் செல்வன்

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

"நான் குற்றவாளி!"

"சமுத்திர குமாரி! உனக்கு என்னை நினைவிருக்கிறதா?"

"பொன்னியின் செல்வ! இது என்ன கேள்வி! யாரைப் பார்த்து 'நினைவிருக்கிறதா?' என்று கேட்கிறீர்கள்? ஆயிரமாயிரமாயிரம் ஆண்டுகள் கலந்து பழகிய பின்னர் 'நினைவிருக்கிறதா?' என்று கேட்பது தகுமா? அல்லது தங்களுக்குத்தான் நினைவில்லாமல் போய்விட்டதா? எத்தனை நாள், எத்தனை யுகம் என்னுடைய சின்னஞ்சிறு படகில் தாங்கள் ஏறி வந்திருக்கிறீர்கள்? கடலில், முடிவில்லாத கடலில், எல்லையில்லாத வெள்ளை அலைகளுக்கிடையில், நாம் இருவரும் என் சிறு படகில் ஏறிக்கொண்டு உல்லாச யாத்திரை செய்ததையெல்லாம் மறந்து விட்டீர்களா? திடீரென்று நாலாபுறமும் கரிய இருள் சூழ்ந்து வர, நாம் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக, ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக்கொண்டு நெடுங்காலம் நின்றதை மறந்து விட்டீர்களா? பயங்கரமான புயற்காற்று அடித்தபோது, மலை மலையாக எழுந்த பேரலைகள் நம்முடைய படகைத் தாக்கி, ஒருகணம் நம்மை வான மண்டலத்துக்கு உயர்த்தி, மறுகணம் பாதாளத்தில் அழுத்தி, இப்படியெல்லாம் அல்லோலகல்லோலம் செய்த நாட்களில்,



அமரர் கல்கி

கல்கி கலெக்ஷன்

நாம் இருவரும் ஒருவருக்கொருவர் ஆதாரமாக நின்று அக் கொடும் புயலை எதிர்த்து வென்றதை மறந்து விட்டீர்களா? ஒருசமயம் நாம் வான வெளியில் பறந்து பறந்து பறந்து சென்று கொண்டிருந்தோமே, அதை மறந்து விட்டீர்களா? விண்மீன்களைத் தாங்கள் தாவிப் பிடித்து என் தலையில் ஆபரணங்களாகச் சூட்டினீர்களே, அதுவும் மறந்து விட்டதா? பூரண சந்திரனை என் முகத்தருகிலே கொண்டு வந்து, 'இதோ இந்த வெள்ளித் தகட்டில் உன் பொன் முகத்தைப் பார்' என்று சொல்லிக் காட்டினீர்களே, அதையும் மறந்து விட்டீர்களா? மற்றொரு சமயம் ஆழ்கடலிலே தாங்கள் மூழ்கினீர்கள்; நான் உள்ளம் பதை பதைத்து நின்றேன்; சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு கைகளிலும் முத்துக்களையும் பவழங்களையும் எடுத்துக் கொண்டு வெளிவந்து அவற்றை மாலையாகக் கோத்து என் கழுத்தில் சூட்டினீர்கள்! அதைத் தாங்கள் மறந்து விட்டாலும் நான் மறக்க முடியுமா? அரசே! உச்சி வேளைகளில், நீல நிற நீர் ததும்பிய ஏரிக் கரைகளில், பூங்கொத்துகளின் பாரம் தாங்காமல் மரக் கிளைகள் வளைந்து வந்து அலங்காரப் பந்தல் போட்ட இடங்களில், பசும்புல் பாய்களில், நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணம் எத்தனை எத்தனை எத்தனையோ நாட்கள் கழித்தோமே, அதையெல்லாம் மறந்துவிட முடியுமா? அந்த நேரங்களில் மரக்கிளைகளில் நூறு ஜோடிக் குயில்கள் உட்கார்ந்து கீத மிசைத்ததையும், ஆயிரம் பதினாயிரம் வண்டுகள் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரம் செய்ததையும், கோடி கோடி பட்டுப் பூச்சிகள் பல வர்ணச் சிறகுகளை அடித்துக் கொண்டு ஆனந்த நடனம் ஆடியதையும் நான் என்றேனும் மறக்க முடியுமா? என்னைப் பார்த்து 'நினைவிருக்கிறதா?' என்று கேட்டீர்களே, அப்படிக் கேட்கலாமா? நினைவிருக்கிறது, ஐயா, நன்றாக நினைவிருக்கிறது...!"

இவ்வாறெல்லாம் சொல்ல வேண்டும் என்று அந்தப் பேதைப் பெண்ணின் உள்ளம் துள்ளித் துடித்தது.

ஆனால் அவளுடைய பவள இதழ்களோ "நினைவிருக்கிறது!" என்ற இரு சொற்களை மட்டுமே முணுமுணுத்தன.

"ஆகா! சமுத்திர குமாரி! நீ வாய் திறந்து பேசுகிறாயே! இந்த அதிசயமான இலங்கைத் தீவிலே உள்ள எத்தனையோ மணிமாட மண்டபங்களின் தூண்களில் அழகிய தேவ கன்னிகைகளின் சிலைகளை அமைத்திருக்கிறார்கள்! ஒருவேளை அத்தகைய சிலை வடிவமோ நீ என்று நினைத்தேன். நல்லவேளையாக நீ வாய் திறந்து பேசுகிறாய். இன்னும் சில வார்த்தைகள் சொல்! உன் இனிய குரலைக் கேட்க எனக்கு எவ்வளவோ ஆசையாயிருக்கிறது. நம் சேநாதிபதியிடம் நீ சில விஷயங்களைச் சொன்னாயாம். தொண்டைமான் நதியில் இரண்டு பெரிய மரக்கலங்கள் வந்து மறைவான இடத்தில் ஒதுங்கியிருப்பதாயும் அவை நிறையப் போர் வீரர்கள் வந்திருப்பதாயும் சொன்னாயாம். அது உண்மை தானே, சமுத்திரகுமாரி? அந்தக் கப்பல்களை உன் கண்களினால் நீயே பார்த்தாயா?" என்று இளவரசர் கேட்டார்.

"ஆம், ஐயா, என் கண்களினால் பார்த்தேன்!" என்றாள் பூங்குழலி.

"ஆகா! இப்போது கொஞ்சம் உன் குரலைக் கேட்க முடிகிறது. என் செவிகள் இன்பமடைகின்றன. நல்லது; மரக்கலங்களைப் பார்த்ததும் நீ உன் படகை ஒரு குறுகிய கால்வாயில் விட்டுக் கொண்டு போனாய். கப்பல்கள் போகும் வரையிலும் காத்திருப்பதற்காக அடர்ந்த காட்டினுள் புகுந்து மறைவான இடத்தில் படுத்துக் கொண்டிருந்தாய். அச்சமயம் கப்பல்களிலிருந்து இறங்கிய வீரர்கள் சிலர் அங்கே வந்தார்கள். நீ படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் அவர்கள்

நின்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்க வேண்டும் என்று நீ விரும்பவில்லை. உன் விருப்பமில்லாமலே அவர்கள் பேச்சு உன் காதில் விழுந்தது. நீ கேட்கும்படி நேர்ந்தது. இவையெல்லாம் நம் சேநாதிபதியிடம் நீ கூறியவை தானே?''

''நடந்ததை நடந்தபடியே கூறினேன்.''

''அவர்களுடைய பேச்சைக் கேட்டதும் அதைப் பற்றி உடனே சேநாதிபதியிடம் எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று உனக்குத் தோன்றியது. வீரர்கள் அப்பால் போன உடனே நீ புறப்பட்டாய்; சேநாதிபதி இருக்குமிடத்தைத் தேடிக் கொண்டு விரைந்து வந்தாய்! எப்படி வந்தாய், சமுத்திரகுமாரி?''

''பாதி வழி படகில் வந்தேன்; பிறகு காட்டு வழியில் நடந்து வந்தேன்.''

''எங்கே போகும் உத்தேசத்துடன் கிளம்பினாய், அம்மா?''

''சேநாதிபதி மாதோட்ட நகரில் இருப்பார் என்று எண்ணி அங்கே போகும் உத்தேசத்துடன் வந்தேன். வழியில் மகிந்தலையில் இருப்பதாக அறிந்தேன். சேநாதிபதியைப் பார்த்துச் சொல்வதற்குள் போதும் போதும் என்று ஆகி விட்டது. எத்தனை பேர் குறுக்கே நின்று தடுப்பது?'' என்று சொல்லிப் பூங்குழலி சேநாதிபதி நின்ற பக்கம் நோக்கினாள். அவளுடைய பார்வையில் கோடை காலத்து இடி முழக்கத்துக்கு முன்னால் தோன்றும் மின்வெட்டு ஜொலித்தது.

''சேநாதிபதியைப் பார்ப்பது என்றால் இலேசான காரியமா? இதோ நிற்கும் என் சிநேகிதர் உன்னைப் போலவே சேநாதிபதியைப் பார்க்க முயன்று அடைந்த கஷ்டத்தைக் கேட்டால் நீ ஆச்சரியப்பட்டுப் போவாய். தடைகளைப் பொருட்படுத்தாமல் நீ பிடிவாதம் பிடித்துச் சேநாதிபதியைப் பார்த்துச் சொன்னதே நல்லதாய்ப் போயிற்று. பூங்குழலி! சேநாதிபதியிடம் கூறியதை என்னிடமும் ஒருதடவை கூறுவாயா? மரத்தின் மறைவிலிருந்து நீ கேட்டாயே, அப்போது அந்த வீரர்கள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள்?''

''அரசே! அதைச் சொல்வதற்கு என் நா கூசுகிறது.''

''பெரிய மனசு பண்ணி எனக்காக இன்னொரு தடவை சொல்!''

''தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போவதற்காக அவர்கள் வந்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.''

''யாருடைய கட்டளையின் பேரில் அவ்விதம் வந்தார்கள் என்பது பற்றி ஏதாவது பேசிக் கொண்டார்களா?''

''அதை நான் நம்பவில்லை. ஐயா! பழுவேட்டரையர்களின் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.''

''உன்னுடைய கருத்தைப் பிறகு தெரிவிக்கலாம். அவர்கள் பேசிக் கொண்டதை மட்டும் சொல், சமுத்திரகுமாரி!''

''சக்கரவர்த்தியின் கட்டளை என்று பேசிக் கொண்டார்கள்.''

''ரொம்ப நல்லது; அதற்குக் காரணம் ஏதாவது சொல்லிக் கொண்டார்களா?''

''சொல்லிக் கொண்டார்கள். தாங்கள் இந்த நாட்டிலுள்ள புத்த குருக்களுடன் சேர்ந்து கொண்டு ராஜ்யத்துக்கு மன்னராக மூடி சூட்டிக் கொள்ளச் சூழ்ச்சி செய்கிறீர்களாம்... இவ்விதம் சொன்ன அந்தப் பாவிகளை அங்கேயே கொன்று விட வேண்டும் என்று எனக்குக் கோபமாக வந்தது...''

''நல்ல காரியம் செய்ய எத்தனித்தாய்! சக்கரவர்த்தியின் தூதர்களை எந்தவிதத்திலும் தடை செய்யக் கூடாது என்று உனக்குத் தெரியாதா... ? நல்லது; இன்னும் அவர்கள் முக்கியமான விஷயம் ஏதேனும் சொன்னதாக உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''



"சேநாதிபதிக்கு அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்கிற விஷயம் தெரியக் கூடாது என்றும், தெரிந்தால் தங்களைத் தப்புவிக்க அவர் பிரயத்தனம் செய்யலாம் என்றும் சொன்னார்கள். ஆகையால் தாங்கள் இருக்குமிடம் தெரிந்து கொண்டு நேரில் தங்களிடம் கட்டளையைக் கொடுத்துக் கையோடு அழைத்துப் போக வேண்டும் என்றும் சொன்னார்கள்..."

"ஆகையால் நீ, உடனே சேநாதிபதியைத் தேடிக்கொண்டு புறப்பட்டாயாக்கும். எனக்குப் பெரிய உதவி செய்தாய், சமுத்திரகுமாரி! சற்று அப்பால் இரு. இவர்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி நான் கலந்து ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் முன்மாதிரி ரொம்ப தூரம் ஓடிப் போய் விடாதே. மறுபடியும் உன்னைப் பிடித்துக் கொண்டு வருவதற்கு வந்தியத்தேவரை அனுப்பும்படி செய்து விடாதே!"

சமுத்திரகுமாரி சற்று நகர்ந்து ஒரு தூணின் அருகில் நின்று கொண்டாள். இளவரசரின் முகத்தைப் பார்க்கக் கூடிய இடத்திலேதான் நின்றாள்.

தேன் குடத்தில் முழுகிய இரு வண்டுகள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தன. மெதுவாகச் சமாளித்துக் கரைக்கு வந்து பிறகு தேனைச் சுவை பார்த்துக் களிக்கத் தொடங்கின. பூங்குழலியின் கண்களும் இப்போது



அத்தகைய சௌகரியமான நிலையில் இருந்தன. இளவரசரின் முக சௌந்தரியமான தேனை அவை பருகித் திளைத்தன. அவனுடைய உள்ளமோ நெஞ்சுக்குள் கட்டுப்பட்டு நிற்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது. நெஞ்சை வெடித்துக் கொண்டு வெளியேறி வானவெளியெங்கும் பொங்கி நிறைந்து விட வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தது.

இளவரசர் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியைப் பார்த்து, "ஐயா! பரம்பரையாக எங்கள் குடும்பத்துக்குச் சிநேகிதமான குலத்தின் தலைவர் தாங்கள்; என் தந்தையின் உற்ற நண்பர்; தங்களை நான் என் தந்தைக்கு இணையாகவே மதித்து வந்திருக்கிறேன். தாங்களும் என்னைத் தங்கள் சொந்தப் புதல்வனாகவே கருதிப் பாராட்டி வந்திருக்கிறீர்கள். ஆகையால் இச்சமயம் என்னுடைய கடமையைச் செய்வதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும். அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது!" என்றார்.

சேநாதிபதி மறுமொழி சொல்வதற்குள் பார்த்திபேந்திரனைத் திரும்பப் பார்த்து "ஐயா! தங்களையும் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் என் அருமைத் தமையனாரின் உற்ற நண்பர். என் தமையனாரின் வாக்கைத் தெய்வத்தின் வாக்காக மதித்து நான் போற்றுகிறவன். ஆகையால் தங்களுடைய வார்த்தையையும் மதித்துப் போற்றக் கடமைப்பட்டவன். தங்களைப் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன். என் கடமையை நான் நிறைவேற்றுவதற்குத் தடை எதுவும் சொல்லக் கூடாது!" என்றார்.

சேநாதிபதியும் பார்த்திபேந்திரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்தப் பார்வையின் மூலம் ஒருவருடைய பயத்தை இன்னொருவருக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சேநாதிபதி இளவரசரைப் பார்த்து "இளவரசே! தாங்கள் கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. வாழ்நாளெல்லாம் நான் போர்க்களத்திலே கழித்தவன். மூடு மந்திரமாகப் பேசினால் தெரிந்து கொள்ள இயலாதவன். தங்களுடைய கடமையைச் செய்யப் போவதாகச் சொல்லுகிறீர்கள். அப்படியென்றால் என்ன? எந்தக் கடமையை என்ன மாதிரி செய்யப் போவதாக உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இச்சமயம் என்னுடைய கடமை ஒன்றே ஒன்றுதான். என் தந்தையின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டியதுதான். என்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படியான கட்டளையுடன் என் தந்தை ஆட்களை அனுப்பி வைத்திருக்கிறார். என்னை அவர்கள் தேடி அலையும்படியாக ஏன் வைத்துக் கொள்ள வேண்டும்? நானே அவர்கள் இருக்குமிடம் சென்று என்னை ஒப்புக் கொடுத்து விடுவேன். அதுவே இப்போது நான் செய்ய வேண்டிய கடமை..."

"முடியவே முடியாத காரியம். என் உடம்பில் உயிருள்ள வரையில் அதை நான் அனுமதிக்க மாட்டேன். தடுத்தே தீருவேன்!" என்றான் பார்த்திபேந்திரன்.

சேநாதிபதி அவனைப் பார்த்து "பதற வேண்டாம்; பொறுங்கள்!" என்றார். பின்னர் இளவரசரை நோக்கிக் கூறினார்:-

"ஐயா! தங்களுடைய கடமையைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. அருள் புரிந்து அதைக் கேட்க வேண்டும். கொடும்பாளூர் வேளிர் பெருங்குடியில் இன்று உயிரோடிருக்கும் ஆண்மகன் நான் ஒருவன்தான். மற்றவர்கள் அனைவரும்

சோழ சாம்ராஜ்யத்தின் சேவையில் இறந்து போனார்கள். அநேகமாக எல்லாரும் போர்க்களத்தில் மடிந்தார்கள். நானும் ஒருநாள் அவ்விதம் இறந்து போவேன். யார் கண்டது? ஆகையால் என் வார்த்தையைக் கொஞ்சம் பொறுமையுடன் கேட்க வேண்டும். அரண்மனை மாடங்களில் அருமையாக வளர்க்கப்பட்டு வந்த தங்களைச் சென்ற ஆண்டில் தென் திசைப் படைகளின் மாதண்ட நாயகராகச் சக்கரவர்த்தி நியமித்தார். அப்போது என்னைத் தனியாக அழைத்துச் சொன்னார்: 'இளவரசன் என்னை விட்டுப் பிரிவது என் உயிரே உடலிலிருந்து பிரிவது போலிருக்கிறது. ஆயினும் என்னுடைய ஆசைக்காக அவனை நான் அரண்மனைக்குள்ளேயே வைத்து வளர்க்கக் கூடாது. அவன் வெளியேறிப் போக வேண்டியதுதான். அண்ணனைப் போல் வீரன் என்று பெயர் எடுக்க வேண்டியதுதான். ஆனால் அவன் உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அதே கணத்தில் என் உயிரும் போய் விடும். அவனுக்கு எவ்வித அபாயமும் நேராமல் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு...!'' இவ்வாறு சக்கரவர்த்தி எனக்குக் கட்டளையிட்டார். சென்ற ஆண்டில் அவ்வாறு கூறிய சக்கரவர்த்தி இப்போது தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிடுவாரா? அவ்வாறு கட்டளையிடும்படியாகத் தாங்கள் என்ன செய்து விட்டீர்கள்? இலங்கைச் சிம்மாதனத்தைக் கைப்பற்றுவதற்குத் தாங்கள் சூழ்ச்சி செய்ததாகச் சொல்வது எவ்வளவு அபத்தம்? அந்த அபவாதத்தை யாராவது நம்ப முடியுமா...?''

கொடும்பாளூர்ப் பெரிய வேளார் கூறி வந்ததை இதுவரை பொறுமையுடன் கேட்டு வந்த இளவரசர் இப்போது குறுக்கிட்டார்.

"வேறு யாராவது நம்ப முடியாதோ, என்னமோ? ஆனால் என்னால் நம்ப முடியும்!'' என்றார்.

"என்ன சொல்கிறீர்கள். இளவரசே!''

"இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்ற நான் சூழ்ச்சி செய்தது உண்மைதான் என்று சொல்கிறேன்.''

வந்தியத்தேவன் இப்போது முன்னால் வந்து "இது என்ன ஐயா! சற்று முன்பு வரையில் சத்தியம் - தர்மம் என்று சொல்லி வந்தீர்கள். இப்போது இப்படிப் பெரும் பொய் சொல்கிறீர்களே...! சேநாதிபதி! இவர் வார்த்தையை நீங்கள் நம்ப வேண்டாம். நேற்றிரவு புத்த குருக்களின் மகா சபையார் இவருக்கு இலங்கைச் சிம்மாதனத்தையும் கிரீடத்தையும் அளித்தார்கள். இவர் வேண்டாம் என்று மறுதளித்தார். இதற்கு நானும் இதோ நிற்கும் இந்த வைஷ்ணவனும் சாட்சி!'' என்றான்.

பொன்னியின் செல்வர் புன்னகை புரிந்து, "வந்தியத்தேவரே! ஒரு கேள்வி! சூழ்ச்சி செய்கிறவர்கள் சாட்சி வைத்துக் கொண்டு சூழ்ச்சி செய்வார்களா? நீங்கள் இருவரும் பக்கத்தில் இருந்ததினாலேயே நான் இலங்கைச் சிம்மாசனத்தையும் கிரீடத்தையும் மறுதளித்திருக்கலாம் அல்லவா!'' என்றார்.

வந்தியத்தேவன் அசந்து போனான்! இதற்கு எதிராக அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இளவரசர் மேலும் கூறினார்: "வாணர்குல வீரரே! உமக்குச் சந்தேகம் இருந்தால் அதோ நிற்கும் வைஷ்ணவரைக் கேட்கலாம். முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் அவரிடம் என்ன சொல்லி அனுப்பினார் என்று கேட்டு அறிந்து கொள்ளலாம். 'புத்த குருமார்கள் தங்களுக்கு இலங்கைச் சிம்மாதனம் அளிக்க முன் வருவார்கள். சாட்சியம் வைத்துக் கொண்டு அதை மறுதளிக்கவும்' என்று சொல்லி அனுப்பினாரா, இல்லையா என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்!''

இதைக் கேட்டு அங்கிருந்த எல்

லாருமே திகைத்துப் போய் நின்றார்கள்.

இளவரசர் சேநாதிபதியைப் பார்த்துச் சொன்னார்: – "ஐயா! இதைக் கேளுங்கள். இந்த இலங்கையைக் கவர்ந்து ஆள வேண்டும் என்ற பேராசை என் மனத்தில் இருந்தது உண்மை. இந்தப் பேராசையை எனக்கு உண்டு பண்ணியவர் என் தமக்கையார். 'தம்பி! நீ நாடு ஆளப் பிறந்தவன். உன் கையில் சங்கு சக்கர ரேகை இருக்கிறது. இங்கே உனக்கு இடம் இல்லை. ஆகையால் இலங்கைக்குப் போ! இலங்கைச் சிம்மாதனத்தைக் கைப்பற்றிக் கொள்!' என்று இப்படியெல்லாம் இளைய பிராட்டி அடிக்கடி சொல்லி என் மனத்தில் ஆசையை வளர்த்து விட்டார். ஆகையால் நான் குற்றவாளிதான். சக்கரவர்த்தி என்னைச் சிறைப்படுத்திக்கொண்டு வரும்படி கட்டளையிட்டதற்குக் காரணம் இருக்கிறது..."

"கொஞ்சம் பொறுங்கள். இளவரசே! அப்படித் தங்கள் மனத்தில் எண்ணம் உதித்திருந்தால் அது இந்த இலங்கைத் தீவின் பாக்கியம். அதற்குப் பொறுப்பாளியும் தாங்கள் அல்ல; தங்கள் தமக்கையார் இளையபிராட்டியும் அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்திதான் அதற்குப் பொறுப்பாளி. அவரே



என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார். தங்களை இலங்கைச் சிம்மாதனத்தில் ஏற்றி வைத்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். குந்தவைதேவியிடம் இதைப் பற்றி முதன்முதலில் கூறியவரும் சக்கரவர்த்திதான். தங்கள் தந்தையின் விருப்பத்தையே தமக்கையார் தங்களிடம் தெரியப்படுத்தியிருக்கிறார். ஆகையால் தாங்கள் குற்றவாளி அல்ல..."

"சேநாதிபதி! அப்படியானால் என் தந்தையிடம் போவதற்கு நான் ஏன் தயங்க வேண்டும்? அவரிடம் நடந்தது நடந்தபடி சொல்கிறேன். இதோ இருக்கும் இந்த இரண்டு பேரும் எனக்காகச் சாட்சி சொல்லட்டும். பிறகு சக்கரவர்த்தி என்ன கட்டளை இடுகிறாரோ, அதன்படி நடந்து கொள்வது என்



கடமை...''

பார்த்திபேந்திரன் இப்போது அனல் கக்கும் குரலில் கூறினான்:- "சேநாதிபதி! ஏதேதோ வெறும் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கிறோம். இனியும் மூடி மறைப்பதில் பயன் ஒன்றுமில்லை. இளவரசரிடம் உண்மையைச் சொல்லியே தீர வேண்டும். தாங்கள் சொல்கிறீர்களா அல்லது நான் சொல்லட்டுமா!"

"நானே சொல்கிறேன்; பொறுங்கள்!" என்றார் சேநாதிபதி. அக்கம் பக்கம் பார்த்து விட்டுக் கூறினார்: - "இளவரசே! தங்களுடைய களங்கமற்ற உள்ளத்தை மாசு படுத்த வேண்டாம் என்று நான் எண்ணியது பயன்படவில்லை. ஒரு விரஸமான விஷயத்தைப் பற்றித் தங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையர் இந்த முதிய பிராயத்தில் நந்தினி என்னும் பெண்ணை மணம் புரிந்து கொண்டிருப்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. அவள் ஒரு சூனியக்காரி. பயங்கரமான மாய மந்திர வித்தைகள் அவளுக்குத் தெரிந்திருக்கின்றன. அவற்றின் உதவியால் பெரிய பழுவேட்டரையரை அவள் தன் காலடியில் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் காலால் இட்ட பணியை இவர் தலையில் ஏந்தி நிறைவேற்றி வைக்கிறார். பழங்குடியில் பிறந்து பல வீரச் செயல்கள் புரிந்த அந்தப் பெரியவருக்கு விதி வசத்தால் இந்த மாதிரி துர்க்கதி சம்பவித்து விட்டது..."

"சேநாதிபதி! இது நான் கேள்விப்படாதது அல்லவே? சோழ தேசத்தில் நாடு நகரமெல்லாம் பேசிக் கொள்ளும் விஷயந்தானே?'' என்றார் இளவரசர்.

''அந்த மந்திரக்காரி நந்தினியின் சக்தி இதுவரையில் பழுவேட்டரையர்களை மட்டும் ஆட்டி வைத்துக்கொண்டிருந்தது. இளவரசே! மன்னிக்க வேண்டும்! இப்போது அவள் சக்கரவர்த்தியின் பேரிலும் தன்னுடைய மந்திரத்தைப் போட ஆரம்பித்து விட்டாள். அதனால்தான் இத்தகைய கட்டளையை - தங்களைச் சிறைப்படுத்தி வரும்படியான கட்டளையை, - சக்கரவர்த்தி பிறப்பித்திருக்கிறார்...!''

''சேநாதிபதி! எச்சரிக்கை! சக்கரவர்த்தியைப் பற்றிக் கௌரவக் குறைவாக எதுவும் சொல்ல வேண்டாம். என் தந்தையின் உடம்பில் உயிர் உள்ள வரையில் அவர் இடும் கட்டளை எதுவானாலும், எந்த சந்தர்ப்பத்தில் இடப்பட்டாலும், அதுவே தெய்வத்தின் கட்டளையாகும்...''

''அதை நாங்கள் மறுக்கவில்லை. இளவரசே! சக்கரவர்த்தியின் சுதந்தரத்துக்கு மட்டுமின்றி அவருடைய உயிருக்கே அபாயம் வந்து விடுமோ என்றுதான் அஞ்சுகிறோம். நந்தினியைப் பற்றிய முழு உண்மையை நேற்றுவரை நானே அறிந்து கொள்ளவில்லை. நேற்றிரவு தான் பார்த்திபேந்திரன் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அந்தப் பயங்கரமான விஷயத்தைத் தாங்களும் தெரிந்து கொள்வது அவசியம்.

''மூன்று வருஷத்துக்கு முன்னால் மதுரைக்கு அருகில் வீரபாண்டியனோடு இறுதி யுத்தம் நடந்தது அல்லவா? அப்போது தங்கள் தமையனார் கரிகாலரும் இதோ உள்ள பார்த்திபேந்திரரும் நானும் கலந்தாலோசித்து ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தோம். பாண்டியனுடைய சைனியங்கள் அடியோடு நிர்மூலமாயின. வீரபாண்டியன் முன்னொரு தடவை பாலைவனத்தில் ஓடி ஒளிந்ததுபோல் இப்போதும் ஓடித் தப்பிக்க முயன்றான். அதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று நாங்கள் மூவரும் அவனை எப்படியாவது கைப்பற்றத் தீர்மானித்துப் பெரு முயற்சி செய்தோம். இந்தத் தடவை வீரபாண்டியனுடைய தலையைக் கொண்டு போகாமல் தஞ்சாவூருக்குத் திரும்புவதில்லை என்று நாங்கள்

மூவரும் சபதம் செய்திருந்தோம். ஆகையால் வேறு யாரையும் நம்புவதில்லையென்று நாங்களே அவனைத் தொடர்ந்து சென்றோம். கடைசியாக ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த குடிசையில் அவன் ஒளிந்திருப்பதைக் கண்டுபிடித்தோம். குடிசைக்கு வெளியில் எங்களைக் காவலுக்கு நிறுத்தி வைத்துவிட்டுத் தங்கள் அண்ணன் கரிகாலர்தான் உள்ளே நுழைந்தார். வீரபாண்டியனைக் கொன்று அவன் தலையை எடுத்து வந்தார். நாங்களும் எங்கள் காரியம் முடிந்து விட்டதென்று குதூகலமாகத் திரும்பிச் சென்றோம். ஆனால் அந்தக் குடிசைக்குள்ளே ஒரு சிறிய நாடகம் நடந்ததென்பது எங்களுக்குத் தெரியாது. வீரபாண்டியனுக்கு அடைக்கலம் கொடுத்திருந்த பெண் ஒருத்தி குறுக்கே நின்று தடுத்துத் தன் காதலனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டாள். கரிகாலர் அவளை உதைத்துத் தள்ளிவிட்டு வீரபாண்டியனுடைய தலையைக் கொய்து வெளியே எடுத்து வந்தார். இளவரசே! அவ்விதம் சோழ குலத்தின் ஜன்ம சத்துருவான வீரபாண்டியனைக் காப்பாற்ற முயன்றவள்தான் நந்தினி! அவள்தான் பிற்பாடு எழுபது பிராயத்துக் கிழவரை மணந்து தஞ்சாவூருக்கு வந்து 'பழுவூர் இளையராணி'யாக விளங்குகிறாள்! அவள் எதற்காக, என்ன நோக்கத்துடன், வந்திருப்பாள் என்



பதை நாம் ஊகிக்கலாம் அல்லவா? வீரபாண்டியனுக்காகப் பழி வாங்கத்தான் வந்திருக்கிறாள். சோழ குலத்தை அடியோடு நிர்மூலமாக்கி விடுவதற்காக வந்திருக்கிறாள். அவள் அருகில் சென்றவர் யாரும் அவளுடைய மோக வலையில் விழாமல் திரும்புவது கடினம். அதோ நிற்கும் வந்தியத்தேவன் அதற்குச் சாட்சி சொல்லுவான். சோழ குலத்தைப் பூண்டோடு அழித்து விடப் பயங்கர சபதம் எடுத்திருக்கும் கூட்டத்தைப் பற்றி அதோ நிற்கும் வைஷ்ணவன் சாட்சி சொல்வான். அவர்களுக்கு அவசியமான பணத்தையெல்லாம் நந்தினிதான் கொடுக்கிறாள். இளவரசே! துரதிர்ஷ்டவசமாக நம் சக்கரவர்த்திப் பெருமானும் அந்தப் பாதகியின் வலையில் விழுந்து விட்டதாகக் காண்கிறது. மதுராந்தகத் தேவனுக்குப் பட்டம் கட்டுவது பற்றிச் சக்கரவர்த்தியே யோசித்த வருவதாகத் தெரிகிறது. ஆகையால், சக்கரவர்த்தியின் கட்டளையென்று கருதித் தாங்கள் தஞ்சைக்குப் போவதற்கு இது தருணமல்ல..."

''சேநாதிபதி! தாங்கள் கூறிய செய்திகள் எனக்கு மிக்க வியப்பை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆயினும் அச் செய்திகளில் நான் செய்த முடிவுதான் உறுதிப்படுகிறது. என் தந்தையை அவ்வளவு பயங்கரமான அபாயங்கள் சூழ்ந்திருக்கும்போது நான் இருக்க வேண்டிய இடம் அவர் அருகிலேதான். இலங்கை அரசு எனக்கு என்னத்திற்கு? அல்லது இந்த உயிர்தான் என்னத்திற்கு? இனி யோசனை ஒன்றுமே தேவையில்லை. என்னைத் தடை செய்வதற்கு யாரும் முயல வேண்டாம்!'' என்று இளவரசர் கம்பீரமாகக் கூறினார். பிறகு, சற்றுத் தூரத்தில் தூணில் சாய்ந்து கொண்டு தம்மைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலியின் மீது அவர் கண்கள் சென்றன.

''சமுத்திரகுமாரி! சற்று இப்படி அருகில் வா!'' என்றார்.

பூங்குழலி நெருங்கி வந்தாள்.

''பெண்ணே! நீ கொண்டு வந்த செய்தியின் மூலம் எனக்குப் பெரிய உதவி செய்தாய். இன்னும் ஓர் உபகாரம் எனக்கு நீ செய்ய வேண்டும். செய்வாயா?'' என்று கேட்டார்.

அடடா! இது என்ன? இந்த ஏழைப் படகுக்காரியிடமா இவர் உதவி கோருகிறார்? இவருக்குக் குற்றேவல் செய்யும் பாக்கியத்தை நாடி வந்தேன்; இவர் என்னிடம் உதவி வேண்டும் என்று யாசிக்கிறரே! கடவுளிடம் வரம் கேட்க வந்தேன்; கடவுள் தம் திருக்கரங்களை நீட்டி என்னிடம் 'பிச்சை போடு' என்று கேட்கிறாரே? - இவ்வாறு மனத்தில் எண்ணி, ''இளவரசே! தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்!'' என்றாள் பூங்குழலி.

''சமுத்திர குமாரி! என்னைத் தேடிக் கொண்டு இரண்டு மரக்கலங்கள் தொண்டைமான் ஆற்று முகத் துவாரத்தின் அருகில் காத்திருக்கின்றன என்று சொன்னாய் அல்லவா? அந்த இடத்துக்கு நான் அதி சீக்கிரமாகப் போய்ச் சேர வேண்டும். எனக்கு வழிகாட்டி அழைத்துக் கொண்டு போவாயா?''

''பெண்ணே! 'முடியாது' என்று சொல்!'' என்பதாக ஒரு குரல் கர்ஜித்தது. அது சேநாதிபதியின் குரல் தான் என்பதைப் பூங்குழலி உணர்ந்தாள்.

இத்தனை நேரம் ஏதோ ஒரு சொப்பன லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவளுக்கு இப்போதுதான் தன் நெருக்கடியான நிலைமை தெரிந்தது. எந்த அபாயத்திலிருந்து இளவரசரைத் தப்புவிக்கலாம் என்ற ஆசையுடன் இவள் அவசர அவசரமாக ஓடி வந்தாளோ, அந்த அபாயத்தின் வாயிலிலேயே கொண்டு சேர்க்கும்படி

இளவரசர் இப்போது தன்னைக் கேட்டுக் கொள்கிறார்!

"பெண்ணே! 'முடியாது' என்று சொல்!" - சேநாதிபதியின் இந்தக் கட்டளையின் பொருள் அவளுக்கு இப்போது புலனாயிற்று. நாலாபுறத்திலிருந்தும் ஆயிரம் குரல்கள் அதே கட்டளையை அவளுக்கு இட்டன. மரங்கள் அவ்வாறு முழங்கின; மண்டபத்தின் தூண்கள் அவ்விதம் அலறின; மரக்கிளைகளின் மேலிருந்து பறவைகள் கதறின.

ஆனால் அந்தப் பேதைப் பெண்ணின் இதயத்தின் உள்ளே ஒரு மெல்லிய குரல் கேட்டது. 'பூங்குழலி! இதோ உன் அதிர்ஷ்டம்! இளவரசருக்கு வழிகாட்டி அழைத்துப் போவாயானால் அவருடன் இரண்டு தினங்கள் கழிக்கலாம். அவர் அருகில் நீ இருக்கலாம். அவர் உன்னைப் பாராதபோது அவரை நீ பார்க்கலாம். அவர் மீது பட்டு வரும் காற்று உன் மீதும் படும். அவருடைய குரல் உன் காதில் அடிக்கடி கேட்கும். அடி பெண்ணே! நீ கண்டு வந்த எட்டாத கனவில் ஒரு சிறிது நிறைவேறும். பிறகு எது எப்படியானால் என்ன? பூங்குழலி! ஒத்துக் கொள்!' என்று அந்த மெல்லிய குரல் அவள் மனக் காதில் கூறியது.

"சமுத்திர குமாரி! ஏன் தயங்குகிறாய்? எனக்கு இந்த உதவி நீ செய்ய மாட்டாயா? நானே வழி கண்டு பிடித்துக் கொண்டு போக வேண்டியது தானா?" என்று இளவரசர் கூறியது அவளுடைய மனம் திடமடையக் காரணமாயிற்று.

"இளவரசே! வழி காட்ட நான் வருகிறேன்!" என்றாள்.

சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி அப்போது தம் தொண்டையைக் கனைத்துக் கொண்ட சப்தம் பூகம்பம் ஏற்படுவதற்கு முன்னால் பூமியின் கர்ப்பத்திலிருந்து எழுகின்ற பயங்கரத் தொனியை நிகர்த்திருந்தது.

அவர் ஓர் அடி முன்னால் வந்து கூறினார்:- "இளவரசே! தங்கள் விருப்பத்துக்குக் குறுக்கே நான் நிற்க மாட்டேன். ஆனாலும் என் வேண்டுகோள் ஒன்றுக்குச் செவி சாய்க்க வேணும். தங்களைச் சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களை ஒப்படைக்கும் வரையில் தங்களைப் பாதுகாப்பது என் பொறுப்பு. நேற்றிரவு தங்களைக் கொல்ல நடந்த முயற்சிகளைப் பற்றிச் சற்று முன்னால் தங்கள் தோழர்கள் சொன்னார்கள். அவர்கள் யார் என்று தெரியவில்லை. என் மனத்தில் உள்ளதைச் சொல்வதற்காக மன்னியுங்கள். இந்தப் பெண்ணின் பேரிலேயே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டு. அந்தக் கொலைகாரர்களுக்கு இவளும் ஒரு வேளை உடந்தையாயிருக்கலாம் அல்லவா? மரக்கலங்களில் தங்களைச் சிறைப்படுத்தி அழைத்துப் போக வந்திருக்கிறார்கள் என்பதே இவளுடைய கற்பனையாயிருக்கலாம் அல்லவா? ஏன் இருக்கக் கூடாது? சற்று முன்னால் இவளுடைய கத்தியைத் தங்கள் தோழர் வந்தியத்தேவர் பிடுங்கி எறிந்தபோது, அது யார் பேரிலோ விழுந்து ஓலக் குரல் ஒன்று கேட்டதே? அது யாருடைய குரல்? - இந்தப் பெண் தாராளமாக வழி காட்டிக் கொண்டு வரட்டும். நம்முடைய யானை மேல் ஏறிக் கொண்டு முன்னால் செல்லட்டும். ஆனால் தங்களுடன் நானும் தொண்டைமான் ஆற்றில் உள்ள கப்பல்களைக் காணும் வரையில் வந்தே தீருவேன்! அது என்னுடைய கடமை!"

சேநாதிபதியின் இந்தப் பேச்சைப் புன்னகை பூத்த முகத்துடன் கேட்டுக்கொண்டு நின்ற இளவரசர் "அப்படியேயாகட்டும்! தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்கு நானும் குறுக்கே நிற்கவில்லை!" என்றார்.

(தொடரும்

திருவையாறு உற்சவம்

புது ஆங்கில வருஷ ஆரம்பத்தில் உலகத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் சங்கடங்களும் தகராறுகளும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் உற்சாகம் ததும்பிக் கொண்டிருக்கிறது. அந்த இடந்தான் திருவையாறு க்ஷேத்திரம்.

தமிழ்நாட்டில் சென்ற ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு மேலாகத் திருவையாறு சங்கீதக் கலையை வளர்க்கும் கேந்திர ஸ்தலமாக இருந்து வந்திருக்கிறது. திருவையாறு தெருக்களில் எழுந்த இன்னிசையைக் கேட்டு அப்பர், சம்பந்தர் முதலியோர் பிரமித்துப் போனார்கள். அத்தகைய புராதன கலைப் பெருமை வாய்ந்த திருவையாற்றுக்கே ஸ்ரீ தியாகராஜரும் வந்து சேர்ந்தார். அதையே தமது வாசஸ்தலமாகக் கொண்டார். அங்கிருந்தே அற்புதமான ஜீவசக்தி வாய்ந்த நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றினார். இஷ்ட தெய்வமான இராமபிரானையும் நாத பிரம்மமாகிய சங்கீத தெய்வத்தையும் ஒருங்கே வழிபட்டு திருவையாற்றில் முக்தியடைந்தார்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் சீடர்கள் அந்த மகானுக்குத் திருவையாற்றிலேயே சமாதியும் கட்டினார்கள். வெகு காலம் சமாதி, சமாதியாகவே இருந்து வந்தது.

சங்கீத சாஹித்ய மேதை ஒருவரை ஞாபகப்படுத்திக் கொண்ட பிறகு, ரஸிக சிகாமணி ஒருவரைப் பற்றிக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்வோமாக. ஒரு காலத்தில் டில்லியில் அரசு புரிந்த அவுரங்கசீப்புக்குச் சங்கீதக் கலையிடத்தில் அபார பிரேமை. நாட்டில் பலர் சங்கீத வித்வான்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு சங்கீதக் கலையைக் கொலை செய்து கொண்டிருப்பதை அறிந்தார். இதைத் தடைசெய்ய எண்ணினார். முதலில் சங்கீத வித்வான்களுக்குத் தர்பாரிலிருந்து அளிக்கப்பட்டு வந்த சன்மானங்கள், மானியங்கள், மாதச் சம்பளங்கள் ஆகியவற்றை நிறுத்தினார். பிறகு, "என்னுடைய இராஜ்யத்தில் யாரும் பாடக் கூடாது; வாத்தியம் வாசிக்கக் கூடாது; கச்சேரி செய்யவும் கூடாது!" என்று உத்தரவு போட்டார்.

அவுரங்கசீப்பின் ஆக்ஞை என்றால், அந்த நாளில் பிரமாதம். ஆகவே யாரும் மீறத் துணியவில்லை; குயில்களும் வானம்பாடிகளும்கூட மோன விரதத்தை மேற்கொண்டன.

தலைமுறை தலைமுறையாகச் சங்கீத வித்தையை அப்பியசித்து வந்த வித்வான்கள் பார்த்தார்கள். சங்கீதக் கலைக்கு இப்படி ஆபத்து வந்து விட்டதே என்று தவித்தார்கள். அவுரங்கசீப்பிடம் நேரிலே போய்ச் சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை. ஆகையால் ஒரு யுக்தியைக் கையாண்டார்கள்.

பிரதிமை ஒன்றைச் செய்து ஒரு விமானத்தில் படுக்க வைத்து ஊர்வலமாகக் கொண்டு போனார்கள். முன்னும் பின்னும் சென்ற சங்கீத வித்வத் சிரோமணிகள், ஒப்பாரி வைத்து அழுதுகொண்டு சென்றார்கள். "பாடக் கூடாது" என்று பாதுஷா உத்தரவு போட்டாரே தவிர, "அழக்கூடாது" என்று உத்தரவு போடவில்லையல்லவா? அவுரங்கசீப் அரண்மனை வாசல் வழியாகவே ஊர்வலம் சென்றது.

அரண்மனை மேல் மாடியிலிருந்து பாதுஷா பார்த்துக்கொண்டிருந்தார். என்ன விஷயம் என்று கேட்டு வரச் சொன்னார்.

"சங்கீத தேவதை செத்துவிட்டாள்; மயானத்துக்குக் கொண்டு போகிறோம்" என்று வித்வான்கள் சொல்லி அனுப்பினார்கள். இதனால் அவுரங்கசீப்பின் மனம் இளகும் என்று நினைத்துச் சொன்னார்கள். ஆனால், பாதுஷா என்ன பதில் சொன்னார், தெரியுமா?

"சந்தோஷம், மயானத்தில் ஆழக் குழி தோண்டிப் புதைக்கச் சொல்லுங்கள். மேலே சமாதியும் கட்டி விடச் சொல்லுங்கள்!" என்றார்.

வந்தது. சங்கித வித்வத் கோஷ்டியினர் சமாதிக்குரிய ஆராதனைகளை நடத்தி வந்தார்கள். ஒரு சமயம் பெங்களூர் நாகரத்தினம் என்னும் பக்த ரத்தினம் திருவையாற்றுக்கு வந்தார். சமாதியைத் தரிசித்தார். அவுரங்கசீப் சங்கித தேவதைக்குக் கட்ட விரும்பிய சமாதியைப் போல் இதுவும் ஆகக் கூடாதே என்று கவலை கொண்டார். எனவே, சமாதி இருந்த இடத்தில் கோயில் ஒன்றை



நிலை நாட்டினார்.

எனவே, ஸ்ரீ தியாகராஜரின் சமாதி இன்று ஸ்ரீ தியாகராஜரின் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. இராம பக்தர்களும் தியாகராஜ பக்தர்களும் சங்கித தேவியின் உபாஸகர்களும் அந்தத் திருக்கோயிலைத் தேடி வருகிறார்கள். வருஷந்தோறும் தை மாதம் பஹுளா பஞ்சமியில் பக்தி சிரத்தையுடன் ஆராதனை நடத்துகிறார்கள். சங்கித வித்வான்களும் சில காலமாக ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து ஸ்ரீ தியாகராஜ கைங்கரியம் செய்து வருகிறார்கள்.

வித்வான்கள் சங்கித தேவதையைப் புதைப்பதுடன் திருப்தி அடைந்தார்களா, அல்லது சமாதியும் கட்டினார்களா என்று கதையின் மூலம் தெரியவில்லை. யார் கண்டது? பழைய டில்லியிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான சமாதிகளில் சங்கிதக் கலையின் சமாதியும் ஒன்றாக இருக்கலாம்!


டில்லியிலிருந்து திரும்பவும் நாம் திருவையாற்றுக்கு வந்து சேரலாம்.

திருவையாற்றில் வெகு காலமாக ஸ்ரீ தியாகராஜரின் சமாதி, சமாதியாக இருந்து

(கல்கி, ஜனவரி 7, 1951)

தபால் இலாகாவின் பெரும் தவறு





சுதந்திர இந்தியாவில் இதற்கு முன் எத்தனையோ விதமான தபால் முத்திரைகள் (அதாவது ஸ்டாம்புகள்) வெளியாகியிருக்கின்றன. இப்போது கவிகளின் உருவம் தாங்கிய தபால் முத்திரைகளை வெளியிடப் போவதாக இந்திய சர்க்கார் தபால் தந்தி இலாகா அறிவித்திருக்கிறது.

கவிகளைக் கௌரவிப்பதைக் காட்டிலும் ஒரு நாட்டுக்குப் பெருமையைக் கொடுக்கக் கூடிய விஷயம் வேறு எதுவும் இல்லை. எனவே, பாரதநாட்டில் அவதரித்த கவிச் சிரேஷ்டர்களின் படங்களுடன் தபால் முத்திரைகளை வெளியிடுவது என்ற யோசனை மிகவும் பாராட்டுதற்கு உரியது.

முதலில் துளசிதாஸ், மீரா, சூர்தாஸ், கபீர், கலீப், தாகூர் முதலிய ஆறு கவிகளின் படங்களுடன் தபால் முத்திரைகளை வெளியிடப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த ஜாபிதாவில் தென்னிந்தியக் கவிகளின் பெயர்கள் சேர்க்கப்படாதது மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. விந்திய மலைக்குத் தெற்கேயும் மாபெரும் கவிச் சிரேஷ்டர்கள் இருந்திருக்கிறார்கள் என்ற விஷயம் தபால் இலாகா தலைமை அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. திருவள்ளுவர், கம்பர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற மகாகவிகளின் உருவங்கள் முதல் ஜாபிதாவிலேயே சேர்க்கப்படாதது பெரும் தவறு.

மற்றக் கவிகளின் உருவங்களைத் தபால் முத்திரைகளில் வெளியிடும் விஷயம் பின்னால் கவனிக்கப்படும் என்று அதிகாரிகள் கூறியுள்ள அர்த்தமற்ற சமாதானம் ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல.

மேற்படி தவறைத் தபால் இலாகா உடனே திருத்திக் கொள்ள வேண்டியது அவசியம். சிறிது காலத்துக்குத் தள்ளி வைத்தாவது, முதல் முறையிலேயே தென்னிந்தியக் கவிகளில் சிலரின் உருவத்தையும் சேர்த்துத் தபால் முத்திரைகளை வெளியிடுவது தான் நியாயமாகும்.



(கல்கி, ஜூலை 27, 1952)

கடமே சரணம்!

கம்பன் வீட்டுக் கட்டுத் தறி கவி பாடும். கடம் வாசிக்குமா?

'தமிழ்த் தாத்தா' உ.வே. சாமிநாதய்யரின் கொள்ளுப் பேத்தி சிறந்த கடம் வாசிக்கும் கலைஞராகப் பரிமளித்துக் கொண்டிருக்கிறார். இந்தியாவிலேயே கடம் வாசிக்கும் முதல் (ஒரே?) பெண்மணி சுகன்யா ராம்கோபால்.

"பானை பிடித்தவர் பாக்கியசாலி"யாக இருப்பதுண்டு. மற்றபடி இந்த விதத்தில் எப்படி பானையில் பாண்டித்யம் பெறலாயிற்று?

"சிறு வயதிலிருந்தே எதைப் பார்த்தாலும் தட்ட வேண்டும் என்று ஆசை உண்டாகும். வீட்டில் எல்லோருக்குமே இசை ரசனை உண்டு தான். ஆனால் முறையாக யாரும் இசை பயின்றதில்லை. சென்னை திருவல்லிக்கேணியில் வசித்த நான், நேஷனல் ஸ்கூலில் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது வயலின் கற்கத் தொடங்கினேன். கட வித்வான்





• சுகன்யா

விநாயகராமின் தம்பியிடம் தான் சிட்சை. கைகள் வயலின் வாசித்தாலும் காதுகள் எதிர்சாரியில் நடத்தப்படும் மிருதங்க வகுப்புகளிலேயே பதிந்திருக்கும். அந்த வகுப்புகளை நடத்தியவர் ஹரிஹர சர்மா. விநாயகராமின் அப்பா.

அவரிடம் ஒருநாள் என் ஆசையைத் தெரிவிக்க, "வாயேன் இன்னிக்கே, சுத்துக்க ஆரம்பிச்சுடலாம்" என்றார். நான் பார்க்கவில்லை; முதல் நாள் குரு சம்பாவனை என்று எதுவும் கொடுக்கவில்லை - நான் மிருதங்க வகுப்புகளுக்குப் போகத் தொடங்கி விட்டேன்! மூன்று வருடங்களில் ஓரளவு நனறாகப் பயிற்சி பெற்றேன். அந்த வருடம் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் "வளரும் கலைஞர்" என்று தேர்ந்தெடுத்தவர்களில் நானும் உண்டு. ஐந்தாறு கச்சேரிகளுக்கு அவர்களே ஏற்பாடு செய்தார்கள்."

வயலின் - பல்லவி. மிருதங்கம் - அனுபல்லவி. கடமே சரணம் என்று ஆனது எப்படி?

"விநாயகராமுடன் இணைந்து மிருதங்கம் வாசித்தேன். அவரது கட வாசிப்பில் கிறங்கிப் போனேன். 'நாம் ஏன் கடம் வாசிக்கக் கூடாது?' என்ற ஆசை வந்தது. பெண்கள் கடம் வாசித்ததில்லை. நாம் ஒரு விதி

அமரர் கல்கி நூற்றாண்டுப் போட்டி

இசைப் பாடல் போட்டிக்குப் பாடல்கள் அனுப்பக் கடைசித் தேதி: ஜனவரி 15,1999 ஞாபகம் உள்ளதல்லவா?

விலக்காக இருந்தாகணும் என்கிற மாதிரி எண்ணமெல்லாம் எதுவுமில்லை. கடத்தின் பால் ஈர்க்கப்பட்டேன், அவ்வளவுதான்.

"ஆனால் இந்த முறை என் ஆசை அவ்வளவு சட்டென்று நிறைவேறி விடவில்லை – 'நீ நன்றாக மிருதங்கம் வாசிக்கிறாய். பிறகெதற்கு கடம்? கை வீணாகும். தவிர மண்ணில் சத்தம் கிளப்புவது கஷ்டமான வேலை' என்றார் அவர். கஷ்டம் என்றவுடனேயே மனத்தில் ஒரு பிடிவாதம். 'ஏன் முடியாது?' என்ற கேள்வி எழுந்தது. இந்தச் சமயத்தில் ஒரு வருடத்திற்கு வினாயகராம் வெளிநாடு டூர் போகும்படி நேர்ந்தது. அவர் அப்பாவிடம் என் விருப்பத்தைச் சொன்னேன். அவர் இந்த முறையும் உற்சாகமாக 'ஓகே' என்றார். நான் மிருதங்கத்தில் கற்றுக் கொண்ட பாடங்களையெல்லாம், அவரது மேற்பார்வையில் கடத்தில் மாற்றிக் கொண்டு வாசித்தேன். ஒரு வருடம் கழித்து இந்தியா திரும்பிய வினாயகராம் நான் கடம் வாசிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். அதற்குப் பிறகு அவரே எனக்குப் பலவிதமான கட வாத்திய இசை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்."

பேச்சுக்கு நடுவே தொடக்க காலத்தில் தம் வீட்டினர் தாம் கடம் கற்றுக் கொள்வதற்கு முதலில் ஊக்கம் தரவில்லை என்றார். இயல்புதானே. பெண்கள் யாரும் இந்த வாத்தியத்தைக் கையாண்டதில்லை என்பதுடன் விரல்களுக்கு மிக சிரமத்தை அளிக்கும் வாத்தியம் இது. முந்தைய இரண்டு நாட்களிலும், ஒருநாளைக்கு இரண்டு கச்சேரிகள் என்று வாசித்திருந்த சுகன்யா, தமது விரல்களைக் காட்டிய போது அவை கன்றிப் போயிருந்ததைப் பார்க்க முடிந்தது.

"கச்சேரி முடிந்ததும் ஆயின்மெண்ட் தடவிக் கொள்வேன். கச்சேரிகளின்போது விரல்களில் ப்ளாஸ்திரி போட்டுக் கொள்வதுண்டு. அதுவும் நான் வாசிப்பது கடம் சுந்தரமய்யர் பாணி. இதில் பத்து விரல்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கும். என்ன சிரமம் இருந்தாலும், வாசிக்கும் போது ஏற்படும் லயிப்பில் அவையெல்லாம் மறைந்து விடும்."

சுகன்யாவுக்குச் சில குறைகள்:

"மேடையில் வயலின், மிருதங்கம் இவற்றுக்குப் பிறகுதான் கடத்துக்கான 'இட ஒதுக்கீடு.' அந்த வித்வான்களுக்குப் பிறகே கடக் கலைஞருக்கு மரியாதை என்ற சட்டத்தை யார் உருவாக்கியது? மைக் வைப்பதில் கூட பாரபட்சம் ஏன்? கச்சேரியின் வெற்றி, குழு முயற்சியில்தான் என்பது கடக் கலைஞர்களுக்கு மட்டும் தெரியாதா? வெளிநாட்டுக் கச்சேரிகளுக்கு மிருதங்கம், வயலின் இவற்றிற்கு மட்டும் தான் ஸ்பான்ஸர்கள் அருள முன்வருவார்களா?" என்று குமுறுகிறார்.

திருமணமாகி பெங்களூரில் செட்டிலாகி விட்ட சுகன்யா முதல் பிரசவம் (ராதா) ஆன ஒரு வருடம், இரண்டாவது பிரசவம் (நாராயணப்ரபு) ஆன நான்கு மாதங்கள் ஆகிய காலகட்டங்களில் மட்டுமே கடம் வாசிக்காமல் இருந்திருக்கிறார்.

கடம் வாசிப்பது ஒரு பெண்மணி என்றதும், "கடம் வேண்டாம்; மிருதங்கமே போதும்" என்று கருத்துத் தெரிவித்த பல சீனியர்கள் உண்டாம்.

"ஆண் வித்வான்களுக்கு அப்படி ஒரு ஈகோவா?" என்று கேட்டதற்கு "ஈகோவில் ஆணென்ன பெண்ணென்ன? எல்லாம் ஓரினம்தான்" என்ற அழுத்தமான பதில் கிடைத்தது.

புதுமைகளில் ஆர்வம் கொண்ட சுகன்யாவின் "லயராக சங்கமம்" என்ற செயல்முறை விளக்கம், மியூசிக் அகாடமியின் விருதைப் பெற்றுத் தந்திருக்கிறது. இதில் வெவ்வேறு ஸ்ருதியைக் கொண்ட ஆறு கடங்களை வாசித்திருக்கிறார். பெண்கள் மட்டுமே இடம்பெறும் "ஸ்த்ரீ சக்தி" என்ற இசைக் குழுவின் அமைப்பாளரும் இவரே. ட்ரம்ஸ் வாசிக்கும் பெண் கலைஞரைத் தேடிக் கொண்டிருக்கிறாராம். ●

— குல்லூ

படங்கள் : ஸ்ரீஹரி

இனிப்பு மலைகள்!

நீல்கிரீஸ் நிறுவனம் நடத்திய கேக் திருவிழாவில் கோவையே இனித்தது, சமீபத்தில்! பல்லாயிரக்கணக்கான கேக் விரும்பிகள் நாவில் நீர் சுரக்க, கண்களில் பிரமிப்பு நீங்காமல், குழந்தைகளாய் மாறி கண்காட்சியைக் கண்டு சிலிர்த்துப் போய் நின்றதைக் கண்களால் சுவைக்கக் கொடுத்து வைத்தது நமக்கு!

கற்களில் சிலை வடிக்கும் கைதேர்ந்த சிற்பிகளைப் போல் இனிப்பில் நகாசு வேலைப்பாடுகளுடன் அசலைப் போலவே, உருவங்களை உருவாக்க எத்தனை பாடுபட்டிருப்பார்கள் இந்த 'கேக்-சிற்பிகள்' என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

கண்காட்சியில்,



கண்ணையும் கருத்தையும் கவர்ந்த சில ஹை லைட்கள்:

● ஒரு டன் சர்க்கரையைப் பயன்படுத்தி இருபது அடி நீளமும் ஏழடி உயரமும் கொண்ட, ஒட்டுமொத்த உலகைத் தன்பால் ஈர்த்த காதல் கவிதைக் கப்பல் – "டைடானிக்"

● நாலரை டன் சர்க்கரையை விழுங்கி இருபத்திரண்டு அடி உயரத்திற்கு கம்பீரமாக எழுந்து நிற்கும் ஐ.நா. சபைக் கட்டடம்!

● ஹைதராபாத் நிஜாம் பெயரை இன்றளவும் சொல்லிக் கொண்டிருக்கும் சார்மினார் கட்டடம் – பத்தடி உயரத்தில்...!

● இன்னும் சைக்கிள் முதல், ஹெலிகாப்டர் வரை. ஆலயங்கள், திருமணக் கூடங்கள், சரித்திரகாலக் கட்டடங்கள்... பல உருவங்கள் – அத்தனையும் 'மெகாசைஸில்' வடிக்கப்பட்ட இனிப்பு மலைகள்! வாவ்... அசத்தி விட்டார்கள்!

கண்காட்சியைக் கண்டுகளிக்க கூட்டம் மிக நீ... நீ... நீண்ட வரிசைகளில் அலைமோதியது.

'நீல்கிரீஸ்' இயக்குநர்களான செல்லையா – சுரேஷ் நம்மிடம் சொன்ன சில தகவல்கள் :


● நாட்டிலேயே இத்தகைய கண்காட்சி நடத்துவது நீல்கிரீஸ் ஒன்றுதான்.

● கேக்குகளை வடிவமைக்கும் கலைஞர்கள், கண்காட்சி ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே தங்கள் பணிகளைத் தொடங்கி விடுவார்கள்!

● பத்து நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சி, முடிவடைந்தவுடன், இடம்பெற்றிருக்கும் இராட்சஸ சைஸ் கேக்குகள், ஆதரவற்றோர் நல சமூக மையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

● உலகில் மிகப் பெரிய கேக்குகள் செய்யப்பட்டாலும் வெறும் சர்க்கரையைக் கொண்டு இவ்வளவு பெரிய உருவங்களை உருவாக்குவது இங்கு மட்டும்தான்!

● சர்க்கரையுடன் ஜெல்லி, சாக்லேட் போன்ற சில சங்கதிகளைச் சேர்த்துக் கலந்து பட்டைகளாக தட்டை வடிவத்தில் செய்து, அதைக் கொண்டு சரியான விகிதங்களுக்கேற்ற அளவில் உருவங்களை வடிவமைக்கிறார்கள். நகாசு வேலைகளுக்கு இருக்கவே இருக்கிறது, பல வண்ண 'கிரீம்கள்'!



சர்க்கரை தொடர்பான செய்திகள் இன்னமும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறாததால் இந்த 'அசுர சாதனை' இதுவரை இடம் பெறவில்லை. எப்படியும் கின்னஸில் இடம்பெறுவது என்னும் தீர்மானத்தில் விடாமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்கள். ○

தகவலும் படங்களும் : **கண்ணன்**


குளத்துப் பக்கம் சபேசன் கடை பரப்பியிருந்தான். சுலோகப் புத்தகங்கள். சந்தியாவந்தனம். திருப்பாவை. திருவெம்பாவை. வேதவாரியாய்அமாவாஸ்யை தர்ப்பணம். சனிப் பெயர்ச்சி. குரு பெயர்ச்சி. வாஸ்து. கனவுகளுக்குப் பலன். நியூமராலஜி.

புத்தகம் வாங்குகிறவர்களை விட, வேடிக்கை பார்க்கிற கூட்டமே அதிகம். ஒருவன் வந்து 'வைரமுத்துவோட இதுவரை நான் இருக்கா?' என்று கேட்டான். 'நீங்க சொன்னீங்கன்னா வாங்கிண்டு வந்து தருவேன்' என்றான் சபேசன். கண்ணதாசன் புத்தகம் நிறையப் பேர் கேட்பார்கள். அர்த்தமுள்ள இந்துமதம் அவனே நிறைய விற்றிருக்கிறான்.


பாட்டுப் புத்தகங்கள் பக்கம் நோட்டம் பார்த்தபடியே ஒருவன் வேட்டி கட்டிக் கொண்டபோது அவனது பர்ஸ் இடுப்பு முடியிலிருந்து நழுவி சபேசனின் பக்கமாய் விழுந்தது. டிஎம்மெஸ்., ஏசுதாஸ், சீர்காழி என்று பக்திப் பாடல்கள் வரிசையாய்ப் பார்த்துக் கொண்டே வந்தவன், எதையும் எடுக்காமல் திரும்பிப் போக ஆரம்பித்தான்.

'அண்ணா!' என்று புன்னகையுடன் கூப்பிட்டான் சபேசன். 'இந்தாங்கோ. வேஷ்டி கட்டிக்கறேன் பேர்வழின்னு பர்சைப் போட்டுட்டுப் போறேன்ங்காணும்'.

'அடடா, அப்படியா' என்று திரும்பி வந்து அவன் வாங்கிக் கொண்டு, பர்ஸைத் திறந்து பார்த்தான். அதில் ஐந்நூறு, நூறு, ஐம்பது என்று நிறைய நோட்டுக்கள் இருந்தன. இத்தனை பணமா என்று சபேசனுக்குத் திகைப்பாய் இருந்தது. 'நான் மட்டும் பாத்திருக்காட்டி?...' என்று கேட்டான்.



"இன்னிக்கு நான் முழிச்ச முழி நல்ல முழி. அதான் பணம் தப்பிச்சது. உங்கள மாதிரி நாலு நல்ல மனு சங்க இருக்கறதுனாலதான் சாமி நாட்ல



மழையே பெய்யுது. சாமி செஞ்சது பெரிய உபகாரம். இந்தாங்க" என்று ஒரு ஐம்பது ரூபாயை எடுத்து நீட்டினான் அவன்.

"என்னது?– ஐயோ வேணாண்ணா. உங்க அன்பே போதும்."

"இந்தக் காலத்துல காசு ஆசை இல்லாத இப்படியொரு மனுசரா" என்று அவன் ஆச்சரியப்பட்டான். "சாமி காசா வாங்க மாட்டிங்க... அப்ப சரி, வாங்க நல்ல காப்பியா ஒரு காப்பி சாப்பிடுவோம்."

இப்படி வருந்தி அவனை யாரும் அழைத்ததில்லை. அவனுக்கு சந்தோஷமாய் இருந்தது. பக்கத்தில் கல் ராசி மோதிரம் கடை போட்டிருந்த சீனுவிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு சபேசன் தெருவிறங்கி வந்தான்.

"சாமி நாமதேயம் என்னவோ?"

"சபேசன். நீங்க?"

"ரங்கசாமி."

சபேசன் தலையாட்டிவிட்டு மெல்ல ஏதோ பாடியபடியே கூட வந்தான். "நல்லாப் பாடறீங்களே. பாடம் உண்டோ?" என்று கேட்டான் ரங்கசாமி. சபேசனுக்கு லேசான வெட்கம். "ஐய, கேள்வி ஞானம் தான்."

"சாமி ஒரு நிமிஷம்" என்று நின்றான் ரங்கசாமி. அது ஒரு லாட்டரிச் சீட்டுக்கடை. "இன்னிக்கு நல்ல நாளு. நான் சாமிய அறிமுகம் பண்ணிக்கிட்ட நாளு இல்லியா? சாமி கையால ஒரு லாட்டரிச் சீட்டு எடுத்துக் குடுங்க. அதிர்ஷ்டம் எப்படி இருக்குன்னு பார்ப்போமே..."

என்ன இவன், என்மேல் இத்தனை மதிப்பும் மரியாதையும் காட்டுகிறான், என்று ஒரு கணம் திகைப்பாய் இருந்தது. அதிர்ஷ்டத்துக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? இது வரை சபேசன் தன் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்த்ததில்லை. இப்போது எதிர் பாராமல் ஒரு வாய்ப்பு. அட அதையும்தான் பார்த்துட்டாப் போச்சு.

சட்டென்று அந்தக் கட்டிலிருந்து ஒரு சீட்டை உருவி நீட்டினான். ரங்கசாமி அதன் எண்ணைக் கூட்டிப் பார்த்தான். 'ஒத்தப் படை!' என்றான் மகிழ்ச்சியாய். "பாப்பம். நாளை மறுநாள் குலுக்கல்."

"ஹா ஹா, ப்ரைஸ் விழுந்தா நம்மள மறந்துறாதிங்க."

"மறக்கறதா? என்ன சாமி பேசறீங்க. அப்படியாப்பட்ட ஆள் இல்ல நான். எனக்கு அதிர்ஷ்டம்னு வந்தா அது உங்க ரூபத்துலதான் வரணும்... ஏறக்குறைய வந்தாச்சின்னு வெய்ங்க. எனக்கு நம்பிக்கை இருக்கு. பரிசு கிடைச்சா ஆளுக்குப் பாதி!"

"எல்லாரும் அப்படிச் சொல்றதுதான். ஆனா ப்ரைஸ் அடிச்சிட்டா ஆளே காணாமப் போயிருவாங்க."

"என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாதில்லையா. போகப் போகப் புரிஞ்சுக்குவீங்கன்னு வெய்ங்க. அடுத்தவன் காசுக்கு ஆசைப் படறது, நம்பினவனுக்கு துரோகம் பண்றது, இதெல்லாம் நமக்குப் பிடிக்காது... அப்படி நான் யோக்கியமா வாழறதுனால தான், இன்னிக்கு சாமியப் பாத்திருக்கேன். என் பர்சும் திரும்பக் கிடைச்சது. இல்லிங்களா?"

"அது சரி" என்று ஒத்துக் கொண்டான் சபேசன்.

ஹோட்டலில் ஏ/சி அறைக்குள் நுழைந்தான் ரங்கசாமி. வெள்ளையும் சொள்ளையுமாய் அவன் போவது நன்றாய்த்தான் இருந்தது. அவனுடன் அழுக்கு வேஷ்டி, அழுக்கு சிலாக் என்று தானும் போவது என்னமோ போலிருந்தது. "பரவால்ல வாங்க. உடையா முக்கியம். மனசுதான் முக்கியம்" என்று அழைத்துப் போனான் ரங்கசாமி. "என்ன சாப்பிடறீங்க?"

"ஐய காபி போதும். அதேகூட, நீங்க வற்புறுத்தறதுனால..."

"ஆங், நல்லவேளை ஞாபகம் வந்தது. சாமி நாரத கான சபாவுல ஏசுதாஸ் கச்சேரி நாளைக்கு. ஆயிர ரூபாய் டிக்கெட் ஒண்ணு இருக்கு. நான் போனாலும் போகாட்டியும் டிக்கெட் வாங்கியாவணும். நீங்களாவது அனுபவியுங்களேன்" என்று பர்சிலிருந்து டிக்கெட்டை நீட்டினான் ரங்கசாமி.


சபேசனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ஆயிர ரூபாய் முன் வரிசை, அதுவும் ஏசுதாஸ்! "இல்ல பரவால்லங்க, வேற யாருக்காவது கொடுங்களேன்" என்றான் தயக்கமாய். "ஐய நீங்க போவலன்னா இது வீணாப் போகும். போய்ப் பாத்திட்டு வாங்க" என்று கையில் தந்தான் ரங்கசாமி.

பக்க வாத்தியத்தின் விரல் அசைவுகூட துல்லியமாய்த் தெரியும் அருகாமை. ஆகா, இதுக்குப் பேர்தான் அதிர்ஷ்டம் என்பது.

"கட்சியிலிருந்து விலகப் போறீங்களா... ஏன்?"

"இருபது வருஷமா கட்சியிலிருக்கேன்; என்னை நம்பிக் கூட்டத்தில் குலுக்க ஒரு உண்டியல் கூடத் தர மாட்டேங்கிறாரே தலைவர்!"

– ஞா. ஞானமுத்து



'ரொம்ப தேங்ஸ்' என்று வாங்கிக் கொண்டான். மயில்கண் வேஷ்டி, மஸ்லின் ஜிப்பா என்று ஜோராய்க் கிளம்ப வேண்டியதுதான்.

இரண்டு நாளில் ரங்கசாமி பரபரப்புடன் சபேசனை வீட்டில் வந்து சந்தித்தான்.

"சாமி, நான் சொல்லல, நான் உங்க முகத்துல முழிச்ச நேரம் நல்ல நேரம்."

திடீரென்று அவன் தன்னை வீட்டிலேயே வந்து பார்ப்பான் என்று சபேசன் எதிர்பார்க்கவில்லை. அசட்டுச் சிரிப்புடன் அவனை உள்ளே விடாத பாணியில் வீட்டு வாசலை மறைத்து நின்றபடி 'என்னாச் சின்னா?' என்று சிரித்தான்.

"ஒரு நல்ல சேதி. உள்ள கூப்பிட மாட்டீங்களா?" என்று சிரித்தான் அவன்.

"சரி வாங்க" என்று இவன் வழி விட்டான்.

"நீங்க வாங்கிக் கொடுத்தீங்கல்ல... லாட்டரிச் சீட்டு. அதுக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு விழுந்திருக்கு!"

அவனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. நமக்கா இத்தனை அதிர்ஷ்டக் கை. இவன் நினைப்பது உண்மைதானோ? 'அடேடே, ரொம்ப சந்தோஷம்' என்றான் சபேசன்.

"இந்தாங்க."

"என்னது?"

"நான் பேசினபடி, இதோ 250."

"ஐய இருக்கட்டும். நான் சும்மா ஒரு பேச்சுக்கு..." என்று இழுத்தான் சபேசன். அவனது செயல் சபேசனைத் திக்குமுக்காட வைத்தது.

"நான் மனசார நினைச்சதுதான் சாமி இது. உங்களுக்குத் தந்தா இனி மேலும் மேலும் எனக்குப் பெருகும், அந்த ஈஸ்வரன் அள்ளி அள்ளிக் குடுப்பார். தயவு செய்ஞ்சு வாங்கிக்கணும் நீங்க" என்று அழுத்தினான்.

'இருங்க காப்பி சாப்பிடலாம்... கீதா?' என்று உள்ளே பார்த்துக் கூப்பிட்டான் சபேசன்.

"தோ கொண்டு வரேம்ப்பா."

"என்ன சாமி, வீட்டைச் சுத்தியும் இப்படிப் பூச்சி பொட்டு அடைய விட்டிருக்கீங்களே? நாளைக்கு ஒரு ஆளை அனுப்பறேன், துப்புரவு பண்ணித் தருவான்."

"ஐய அதெல்லாம் ஒண்ணும் வேணாம். பரவால்ல இருக்கட்டும்."

"நல்லாச் சொன்னீங்க போங்க. சின்னப் பிள்ளைங்க இருக்கற வீடுல்ல. தோ பெரியம்மா வேற இருக்கு. இப்பிடிப் புதர் மண்டக் கூடாது. நீங்க பேசாம இருங்க. காலைல ஆள் அனுப்பறேன். காபி ஏ ஒன். பாப்பா கை மணம்!"

'நான் போடல, பாட்டி!' என்றாள் கீதா.

அவன் புறப்பட்டுப் போனதும், பாட்டி வந்து சபேசனிடம் யார் என்ன என்று விசாரித்தாள். 'பாத்தியா?' என்று 250 ரூபாயைக் காட்டினான் சபேசன்.

"உனக்காவது, பரிசு விழுறதாவது..." என்றாள் பாட்டி.

"அப்ப இதென்ன?" என்றான் ஆவேசமாய்.

"அதென்னமோப்பா. அவன் பார்வை அத்தனை நல்லா இல்லை. பாத்துக்க" என்றாள் பாட்டி.

"என்னை ஒருத்தன் மதிச்சா உங்களுக்கெல்லாம் ஆகாதே... எனக்கு ஏசுதாஸ் கச்சேரிக்கு டிக்கெட் ஒருத்தன் குடுத்தான்னேனே... அது இவன்தான் தெரியுமா?"

"இவன்கிட்ட ஜாக்கிரதையா இருடாப்பா. அவ்வளவுதான். அவன் இங்க வர்றது எனக்குப் பிடிக்கலை. தெரிஞ்சுதா?"

பாட்டி பூஜைக்கு என்று கனகாம்பரத்தை மாத்திரம் விட்டு விட்டு தோட்டக்காரன் வந்து வீட்டைச் சுற்றியும் நிலத்தைத் துப்புரவு செய்து கொடுத்தான். சும்மா ஒரு பேச்சுக்கு எவ்வளவு காசு தரவேண்டும் என்று கேட்டான் சபேசன். 'அதெல்லாம் ஐயா வாங்கக் கூடாதுன்னிட்டாரு' என்று அவன் போய்விட்டான்.

ரங்கசாமியைப் பார்த்தால் அவனுக்கு எதுவும் தப்பாகப் படவில்லை. இவன் நம்மை என்ன ஏமாற்றப் போகிறான், என்றிருந்தது. பாட்டியும், இவளும் சேர்ந்து கொண்டால், என்னைப் பைத்தியம் என்று பட்டம் கட்டுவதே வேலையாய்ப் போச்சு. அன்னிக்கு நான் அவன் பர்சைக் காப்பாற்றிக் கொடுத்தேன். காபி வாங்கித் தந்தான் அவன் செலவில். லாட்டரியில் 500 விழுந்ததற்கும், அவனாகவே வந்து பாதி தந்தான். இப்போது எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், அன்பின், மரியாதையின் அடிப்படையில் தோட்ட வேலை செய்து தந்திருக்கிறான்...

என்னால் அவனுக்கு அதிர்ஷ்டம், என்கிறான். ஹா! அவனால் எனக்குத்தான் அதிர்ஷ்டம்!

ஒரு வெள்ளிக்கிழமை மாலை. பாட்டியும், பாக்கியலெட்சுமியும் கோவிலுக்குப் போயிருந்தார்கள். ரமணியும், கீதாவும் கூட வீட்டில் இல்லை. ரங்கசாமி திடுதிப்பென்று வந்தான். யாரும் இல்லை வீட்டில், என்பதே முதல் கட்டமாக சபேசனுக்கு ஆசுவாசமாய் இருந்தது. எத்தனை நல்ல மனிதன், இவனைப் போய் சந்தேகப்படுகிறார்களே, என்றிருந்தது.

"சாமி வீடு இப்ப நல்ல பார்வையா இருக்கு பாருங்க. ஒரு கோட்டிங் வெள்ளையடிச்சிட்டிங்கன்னா போதும். அம்சமா ஆயிரும்."

'பாப்போம்' என்று புன்னகைத்தான் சபேசன்.

"சாமி வெள்ளிக் கிழமையும் அதுவுமா, இந்தாங்க. கைல பிடிங்க" என்றான் ரங்கசாமி.

"என்னது?"

"பிடிங்க சொல்றேன்."

'சொல்லுங்க' என்று சபேசன் சிரித்தான். அவன் பணம் தரப் போகிறான் என்று புரிந்தது. எதற்கு எனக்கு என்று தெரியாவிட்டாலும், அவனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

"புதுசா ஒரு பிசினெஸ்! நான் தொடங்கப் போற வேலைல அமோகமா முன்னுக்கு வரணும்னு ஆசிர்வாதம் பண்ணனும் நீங்க. இந்தாங்க இதை வெச்சிக்கோங்க."

'பேஷா!' என்று கைநீட்டி அந்தப் பணத்தை சபேசன் வாங்கிக் கொண்டான்.

"பிரிச்சிப் பாருங்களேன்?"

சபேசன் பிரித்துப் பார்த்தான். நூறும், ஐம்பதுமாய்க் கட்டுக் கட்டாய், கட்டுக் கட்டாய்ப் பணம். அவனுக்கு லேசாய் நடுங்கியது. 'இதுல எவ்வளவு இருக்கு?'

"ஒரு லட்சம்!"

"லட்சமா?" என்று கிட்டத்தட்ட சபேசன் வாயைப் பிளந்தான். அத்தனை பணத்தை ஒருசேர அவன் பார்த்ததே இல்லை.

"சாமி வெள்ளிக் கிழமை பணத்தை வாங்கலாம். கொடுக்கக் கூடாது... நான் சாமிக்குத் தர்றதப் பத்தி இல்ல. நீங்க தர வேண்டாம். வெச்சிருங்க. நாளைக்கு சனிக் கிழமை தாங்க. சரிதானா?"

"ஐயோ இவ்வளவு பணத்தை எப்படி நான் தனியா வீட்டுல வைக்கிறது?" என்று சபேசன் பதறினான்.

"பரவால்ல சாமி, நான் உங்களை நம்பறேன். பணம் உங்ககிட்டியே இருக்கட்டும்.' ரங்கசாமி கிளம்பிப் போய்விட்டான்.

வீட்டில் யாரும் இல்லை. அவனும் தனியாக அவனிடம் ஒரு லட்ச ரூபாயும்! அவனால் நடந்ததெல்லாம் நம்பவே முடியவில்லை. நான் யார், என்ன இவன், என்னை நம்பி இத்தனை பணத்தை இவன் கொடுத்து விட்டுப் போகிறான். அந்தத் தகுதி எனக்கு இருக்கிறதா?

ஐயோ, இது இவளுக்கும், பாட்டிக்கும் தெரிந்தால்? என்னாவது அச்சு பிச்சு என்று உளறுவார்கள். எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறான் என்மேல்? இந்தக் காலத்தில் இப்படியும் ஆட்கள். என் பணம் அவனிடம் இல்லை– அவன் பணத்தை என்னிடம் நம்பித் தந்து விட்டுப் போகிறான்! இதில் நம்ம ரிஸ்க் என்ன இருக்கிறது? இந்தப் பணம் ஒருநாள் என்னிடம் இருந்தால் வியாபாரம் அமோகமாய்ப் பெருகும் என்பது அவன் நம்பிக்கை. (என்ன வியாபாரம்? ஏதோ ஒரு வியாபாரம். அதைப் பற்றி நமக்கென்ன?)

வீட்டில் மற்றவர்கள் வருவதற்குள், யாரும் பார்த்து விடாமல் பணத்தை எடுத்து வைக்க வேண்டும். பெட்டிக்குள் மயில்க்கண் வேஷ்டி பாச்சா உருண்டை மணத்துக் கொண்டு கிடந்தது. அதனுள் பணத்தை வைத்து மூடினான்.

வாசலில் சத்தம் கேட்டது. சட்டென்று பெட்டியை மூடி எடுத்து வைத்தான். மனைவியும் பாட்டியும் கோவிலுக்குப் போய்விட்டு வந்தார்கள். அவன் உள்ளூரப் பரபரப்பாய் இருந்தான். காட்டிக் கொள்ளக் கூடாது என்று பயமாய் இருந்தது.

பேச்சு வரவில்லை. இராத்திரிச் சாப்பிடக் கூப்பிட்டபோது பசியில்லை என்று மாடியில் படுத்துக் கொண்டான். பக்கத்தில் ரேடியோ. என்னவோ பாடல். எதுவும் மனத்தில் பதியவில்லை. கண்ணை மூடினால் தூங்க முடியவில்லை.

திரும்பக் கீழே போய் அவ்வளவு பணத்தையும் பார்க்க வேண்டும் போலிருந்தது. அடக்கிக் கொண்டான். திடுதிப்பென்று யாராவது கீழே பெட்டியைத் திறந்து பார்த்து விடுவார்களோ என்று கூட யோசனை ஓடியது. இங்க வந்து பாருங்களேன்?– என்று ஆச்சரியக் குரல் கூட வரலாம் என்று எதிர்பார்த்தான்.

மறுநாள் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள ரங்கசாமி வரவில்லை.

(தொடரும்)

உன்னிக்கு அண்ணனின் அன்புக் கடிதம்!



லக்ஷ்மி கடாக்ஷமும் சரஸ்வதி கடாக்ஷமும் அமோகமாக அமையப் பெற்ற தம்பி உன்னிகிருஷ்ணனுக்கு,

அண்ணன் தும்புரு அன்போடு எழுதுவது....

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் ஆதரவில் நடந்த உன் கச்சேரிக்கு வந்தேன். (28.12.98) சாலையைக் கடந்து சபாவுக்குள் நுழையவே ஐந்து நிமிடம் காத்திருக்க வேண்டியிருந்தது. அவ்வளவு கூட்டம்!

டிக்கெட் கொடுத்துக் கொண்டிருந்த தாத்தா, ஒரு ஆனந்தக் கிறுகிறுப்பிலிருந்தார். முப்பது ரூபாய் டிக்கெட் கேட்டபோது இருபது ரூபாய் டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்தார். 'இல்லை, முப்பது' என்றதும் பத்து ரூபாயைத் திருப்பித் தந்தார்! ஒரு வழியாய்ப் புரிய வைத்து டிக்கெட் வாங்குவதற்குள்....

“நூறு ரூபாய் டிக்கெட் கொடுங்க....”

“ஆர்கெஸ்ட்ரா பிட்டுலதான் இடமிருக்கு...”

“பரவாயில்லை, சீக்கிரமா கொடுங்க...”

– போன்ற உரையாடல்கள் காதில் விழுந்தன!

மணி ஆறு ஐந்துதான் ஆகியிருந்தது. ஆனால், ஆறு மணிக்குக் கச்சேரி ஆரம்பித்த நீ, அதற்குள் மசால் தோசையை நட்ட நடுவில் கிழங்கோடு சேர்த்து விள்ளுவது போல 'கொலுவமரெகத' முடித்து சுவரம் பாடிக் கொண்டிருந்தாய்.

மாவுக் கட்டுப் பிரிக்காத, முறிந்த காலுடன் ஒரு மாமி, 'டயாபர்' சுற்றிய கைக் குழந்தையுடன் இளம் அம்மாக்கள், ராத்திரி ரயில் ஏற வேண்டியிருந்தும் கச்சேரி கேட்க வந்த கோவை அபிமானி, 'கச்சேரியாச்சே' என்று கஷ்டப்பட்டு புடைவை கட்டிக் கொண்டு வந்த காலேஜ் பெண்கள், கண்களில் இன்னும் காதல் மாறாத புதுமண ஜோடி... என்று சாதாரணமாகக் கச்சேரிகளில் காணக் கிடைக்காத கூட்டத்தை அன்று கண்டேன்.

அத்தனை பேரும், நீ மூச்சு விட்டால் கை தட்டவும் தும்மினால் ஆசிர்வதிக்கவும், இருமினால் கண்ணீர் விடவும் தயாராயிருந்தார்கள்.

லக்ஷ்மி, சரஸ்வதி கடாக்ஷங்களுடன் உனக்கு வாய்த்திருக்கும் மூன்றாவது சம்பத்து இந்த ரசிகர் கடாக்ஷம்.

ஆனால், அன்றைய கச்சேரியில் நீ சரஸ்வதிக்குப் புறமுதுகு காண்பித்து பித்தளை ஜரிகை போர்த்திய ஒரு பிளாஸ்டிக் பொம்மையை ஆராதித்தது மகா கொடுமை! அந்த அதிர்ச்சியிலிருந்து மீள எனக்கு ரொம்ப நாள் ஆகும், போ! ஏனென்றால், நீ பாவமும் நிதானமும் சேரப் பாடக் கேட்டவன் நான் – சில வருஷங்களுக்கு முன்...

'கொலுவமரெகத'வில் தொடங்கிய ஓட்டம் ராகம்-தானம்-பல்லவி முடியும் வரை

நிற்கவில்லை. அதற்கு மேல் உட்கார்ந்திருக்க என்னால் முடியவில்லை...

'நீயிரங்காயெனில் புகல் ஏது...?' - ராகம் அடாணாவானாலும் திருமகளின் கடைக்கண் பார்வை கோரும் கெஞ்சல்... அதற்குரிய உருக்கம் கொஞ்சமேனும் வேண்டாமோ? ம்ருதங்கத்தில் வேலூர் ராமபத்திரன் கொடுத்த உணர்ச்சி மாற்றம் கூட உன் பாட்டில் இல்லையே!

அது வகுளாபரணமாகட்டும், கன்னடவாகட்டும், தேவகாந்தாரியாகட்டும், சிம்மேந்திரமத்யமமாகட்டும், காம்போதியாகட்டும்... எல்லாமே ஒரே மாதிரியான சாவி கொடுத்த வேகம்.

ஆலாபனை, நிரவல், ஸ்வரம் என்று ஒரே ராகத்தில் கையாளும் போது மூன்றிலும் வெவ்வேறு கற்பனைகள் வரவேண்டாமோ? அடுக்கடுக்காக செங்கல் போன்ற ஒரே பிரயோகங்களால் அடுக்கிக் கொண்டே போனால் என்ன அர்த்தம்?

அப்புறம், சினிமாவில் பாடும் போது கொடுக்கும் modulation-க்கு இங்கே இடமில்லை என்று தீர்மானித்து விட்டாயா...? உனக்கிருக்கிற சர்க்கரைக் கரைசல் குரலுக்கு, தேவையான இடங்களில் ஒலியளவைக் கூட்டி, குறைத்து, அடக்கி, பெருக்கிப் பாடினால் என்ன மாதிரி தேவகானமாயிருக்கும்!

விட்டில் சாதகம் பண்ணுவது போல் எல்லா பிரயோகங்களையும் ஆலாபனையில் கொட்டிக் கிளறி மூடலாமா...? குறைச்சலான, ஆனால் வளமான பிரயோகங்களால் அமைந்தால்தான் ஆலாபனைக்கு அழகு.

போதாக்குறைக்கு, பல்லவி - அனுபல்லவி - சரணம் என்று பாடலின் ஒவ்வொரு பகுதி முடிவிலும் எதற்காக அப்படியொரு மினி ஆலாபனையைச் சுழற்றுகிறாய்...? ரொம்ப ரொம்ப பொறுமையை சோதிக்கிறதப்பா!

'அப்படியானால் அலைமோதும் கூட்டமும் செவி நிறைக்கும் கை தட்டலும் ஏன்...?' என்று கேட்பாய். நியாயமான கேள்விதான். ஒன்று நீ கவனித்தாயா...? நீ ஆலாபனை முடித்ததும் ஏதோ இன்டர்வெல் விட்டது போல் கூட்டம் 'கஜ கஜ'வென்று பேச ஆரம்பித்து விட்டது. வயலின் சுந்தரேசனுக்குக் காது கொடுக்க யாரும் தயாராயில்லை... அப்படியானால் என்ன அர்த்தம்? வருகிற கூட்டம் உண்ணிகிருஷ்ணனுக்காகத்தானே தவிர, சங்கீதத்துக்காக அல்ல... இதே காரணத்தால்தான் நீ ஆலாபனை முடிக்க மந்தர ஸ்தாயிக்கு இறங்கும்போதே அவசரமாகத் தப்பான இடத்தில் கை தட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். ஸ்வரம் பாடுகையில் ஒரு சாதாரண தீர்மானம் வைத்து முடிப்பதற்குள் கை தட்டத் தவிக்கிறார்கள்.

ஒரு விஷயத்தை நீ நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கூட்டமும் அதன் இரக்கமும் உண்ணிகிருஷ்ணனுக்குப் பிறந்த நல்ல காலம்... அதையே கர்னாடக சங்கீதத்தின் நல்ல காலமாக மாற்றும் பொறுப்பு உனக்கு இருக்கிறது. இசைப் பேரொளி பட்டம் வாங்கிய போது ஏற்புரையில், உன் பொறுப்பு அதிகமாகி விட்ட


• உண்ணி கிருஷ்ணன்

தாகப் பேசினாயல்லவா... அதை ஞாபகப் படுத்துகிறேன்.

'இப்படித் திரும்பிப் பார்த்து சரஸ்வதியை நோக்கி உட்காரு...' என்று சொன்னால் ஏதோ தத்துவப் புதிராக இருக்கும். உடைத்துச் சொல்கிறேன்....

ஸ்வரங்களையும் குரல் இனிமையையும் கடந்த நிஜமான சங்கீதத்தைத் தேடிப் போ... அதுதான் சாச்வதமானது. ஸ்வரம் என்பது ஃபிரேம். – எலும்புக் கூடு மாதிரி... அதை உயிரோட்டத்தால் போர்த்தாமல் ஷோகேஸில் வைத்தால் கொஞ்ச நாள் வேடிக்கை பார்ப்பார்கள். குரல் வெறும் கருவிதான். அதை, மனமும் கிளர்ந்தெழும் உணர்வும் அல்லவா இயக்க வேண்டும்!

ஜீவனைப் புகுத்திப் பாடு – நீயே அறியாமல் இன்னமும் அது உனக்குள் நீறு பூத்த கங்காக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது என்பது அந்த தேவகாந்தாரியின் ஒரு இலேசான இழுப்பில் தெரிந்தது; காம்போதி நிரவலின் போது ஒரே ஒரு ஆவர்த்தனத்தில் உணர முடிந்தது. அந்த இடங்களில் உன் கை பிடித்து நிறுத்தி, 'இதுதான்பா! இங்கேயே சற்று நில்' என்று சொல்லத் தோன்றியது. கச்சேரியில் முடியாதல்லவா, அதனால் கடிதமாய் எழுதி விட்டேன்.

சொன்ன பேச்சைக் கேளு... ஒரு வருஷம் – ஒரே ஒரு வருஷம் பல்லைக் கடித்துக் கொண்டு கச்சேரிகளுக்கு விடுமுறை கொடு... சினிமா ஒலிப்பதிவுகள் உன் பெயரை மறக்க விடாமல் ஜனங்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும். அந்த ஒரு வருட இடைவெளியில் உத்தம காயிகர்களின் சங்கீதத்தை தினம் தினம் கேள் – வேண்டிய அளவு ஒலிப்பதிவுகள் இருக்கின்றன.

செம்மங்குடி எப்படி வாயைத் திறந்து, தொண்டையை விட்டுப் பாடுகிறார்; ஒரே ராகத்தில் நிரவல் – ஸ்வரம் பாடும் போது புதுப் புதுக் கற்பனைகள் எப்படி தனித் தனியாகத் தெரிகின்றன?

எம்.எஸ். எப்படி சாஹித்தியத்தில் கரைந்து போகிறார்; அவர் கார்வைகளில் எப்படி ராகத்தின் உயிரொளி வீசுகிறது...?

டி.கே.பி. 'சிவகாம சுந்தரி' பாடியிருப்பதை நூற்றியெட்டாவது முறையாகக் கேட்டாலும் ஏன் நெக்குருகுகிறது...?

கே.வி.என். எப்படி சுத்த ஸ்வரங்களில் நடுங்காமல் நிற்கிறார்; அந்த எளிமையில் எத்தனை அழகு..!

டி.கே. ஜெயராமன் எப்படி கீர்த்தனைகளைக் கச்சிதப்படுத்தி அர்த்தமுள்ள சங்கதிகளால் அழகு சேர்த்திருக்கிறார்; ஒவ்வொரு கீர்த்தனையையும் எப்படி நிறுத்துவார்....

மதுரை மணி ஆவர்த்தனம் ஆவர்த்தனமாக ஸ்வரம் பாடிக் கொண்டே போனாலும் ஒவ்வொன்றிலும் எப்படி வேறுபாடு காண்பித்தார்!

– எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து மனத்தில் வாங்கிக் கொண்டு, ஆற அமர யோசித்து ஓர் உயர்ந்த பாணியை உருவாக்கிக் கொள். உன்நோக்கிப் போய்ப் பார்.

இப்போது நீ பாடுவது வெறும் வித்தை. புதியவர்களுக்கு பிரமிப்பு ஏற்படுத்தும் சாதாரண வித்தை... பிரமிக்க வைப்பது கலையின் ஒரே ஒரு அங்கம்தான். அதை அளவாக உள்ளடக்கி, அதைக் கடந்து போ... கர்னாடக சங்கீதத்தின் ஆதாரப் பண்புகளைத்தேடு... தேடல் இல்லாமல் கலை நிறைவடையாது. தேடுவதற்கான நேரத்தை உருவாக்கிக் கொள். உன்னால் முடியும் உண்ணிகிருஷ்ணா!

தானாத ஆதங்கத்துடன்,
அன்பு அண்ணன் தும்புரு.


பி.கு : இக் கடிதத்தின் பல பகுதிகள் உன்னொத்த வேறு பல இளம் பாடகர்களுக்கும் பாடகிகளுக்கும் கூடப் பொருந்தும் என்பதால் விரும்புவோருடன் இதை நீ பகிர்ந்து கொள்ளலாம்.

அட்டை வண்ணப்படம்: **பிரவீன்குமார்**

விடையாற்றி!

அன்பு வாசகர்களே,

தும்புருவை உங்களுக்குப் பிடித்ததோ இல்லையோ... இசையுலகில் பலருக்குப் பிடிக்கவில்லை. பகைமையையும் வெறுப்பையும் தூண்டவோ, பரபரப்புக்காக மட்டுமோ நான் எழுதவில்லை. மோசமான கச்சேரிகளில் கூட கடைசி வரை உட்கார்ந்திருந்தது, பாராட்ட ஏதேனும் அகப்படாதா என்ற எதிர்பார்ப்பில் தான். பாணி, குரல், தனிநபர் ஆளுமை போன்ற சராசரி அம்சங்களைக் கடந்து சங்கீதத்துக்கே உரிய உயர் மதிப்பீடுகள் உண்டல்லவா...? மனத்தைத் தொட வேண்டும்; கனிவும் அமைதியும் சுரக்க வேண்டும்; அழகுணர்ச்சிக்கு விருந்தாக வேண்டும் என்று... இவற்றை முக்கியமாகக் கருதி விமர்சனங்களை அமைத்தேன். இவை பாடகரால் அடியோடும், திட்டமிட்டும் புறக்கணிக்கப்படும்போது எழும் தார்மீகக் கோபத்தை வடிகட்டாமல் வெளியிட்டேன். இப்போது விடைபெற்றாலும் அவ்வப்போது தலை காட்டுவேன்... வரட்டுமா...?



டைரி யாருக்கு?

'உங்களுக்கு ஒரு எக்ஸாம்! பரிசும் உண்டு!' என்று அறிவித்திருந்தோமல்லவா? ஆயிரக்கணக்கான வாசகர்கள் சிரத்தையுடன் கூப்பனை நிரப்பி அனுப்பியிருந்தார்கள்.

மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு டைரக்டர் டி. ராஜேந்தரிடம் சென்றோம். டைரி பரிசு பெறும் ஐம்பது அதிர்ஷ்ட சாலிகளைத் தேர்ந் தெடுத்துத் தரச் சொல்லிக் கேட்டதும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு, பொறுமை யாக ஐம்பது பேரைக் குலுக்கலில் தேர்ந் தெடுத்தார். அந்த ஐம்பது பேருக்கும் டைரிகள் தபால் மூலம் அனுப்பி வைக் கப்படும்.

கல்கி பற்றி ஒரு வரி விமர்சனம் எழுதச் சொன்னோமல்லவா? வாசகர்களின் அற்புதமான விமர்சனங்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். தேர்வானோர் விவரம் விரைவில்!

குலுக்கலில் தேர்வாகி 'டைரி' பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் ஐம்பது பேர்:

1. ம. ச. காமாட்சி சுந்தரி, 25/3099, ஜீவன் பீமா நகர், அண்ணாநகர் மேற்கு, சென்னை -101, 2. ஆர். சாலமோன், 2ஏ/2 அண்ணாநகர், ஆலங்குளம், திருநெல்வேலி மாவட்டம், 3. கோ. சகுந்தலா, க/பெ. ஆர். கோபால்சாமி, எண். 46, தெற்கு வீதி, கீழ்வேளூர்(அஞ்சல்) நாகப்பட்டினம் மாவட்டம், 4. பொன். இராமுபிள்ளை, 47.ஏ, லாலா தோப்புத் தெரு, திருக்கோவிலூர்-605 757, 5. ஸ்ரீமதி கிரிஜா ராமன், 309, காமராஜர் சாலை, ராமகிருஷ்ண நகர், ஆழ்வார்திருநகர், சென்னை-87, 6. அ. மௌன குருசாமி, கொண்டவநாயக்கன் வளவு, கொத்தாயம் போஸ்ட், ஒட்டன்சத்திரம் தாலுக்கா 7, எஸ். சுவாமிநாதன், 5. மோஸஸ் சாலை, ஐயப்பா நகர், பம்மல், சென்னை - 75. 8. என். அசோகன், எம். 79, ஹவுசிங் போர்டு, பச்சயன்குப்பம், கடலூர் ஓல்டு டவுன், கடலூர்-3, 9. எம்.எஸ்.பி. காசி விஸ்வநாதன், லக்ஷ்மி நிவாஸ், 275, அம்பேத்கர் ரோடு, கோவை-25, 10. இரா. கல்யாணசுந்தரம், 7. நடுத் தெரு, அனுப்பானடி, மதுரை-9, 11. ஈ.ஆர். குணநாதன், 553, என்.வி.என். லேஅவுட், கிராஸ்கட் ரோடு, கோயம்புத்தூர்- 12, 12. ச.ஆ. கேசவன் ஆசிரியர், 39-பி, பைபாஸ் சாலை, இனாம் மணியாச்சி, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.13. வி.ஜி. ஏழுமலை மகி, 28கே/4, கணபதி நகர், கொரநாடு அஞ்சல், மயிலாடுதுறை, 14. எஸ். சோமசுந்தரம், சுகாதார ஆய்வாளர், 5/49.



''ஏன் சார், நீங்க கதையைத்தான் காப்பியடிச்சு எழுதறீங்க; உங்க சுயசரிதையைக்கூடவா காப்பி அடிச்சு எழுதணும்? இது நேருவுடைய சுயசரிதை சார்...!''

— மலர் சூர்யா



''இந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷன்ல கேடி கபாலிக்கு ரொம்ப செல்வாக்கு...!''

''எப்படி சொல்ற...?''

''நூறாவது முறையாக மாமியார் வீட்டுக்கு வருகை தரும் கேடித் திலகமே வருக, வருக'ன்னு பேனர் கட்டியிருக்காங்களே...!''

— சித்தோடு கே. சதீஷ்குமார்

வ.உ.சி. ரோடு,மன்னார்குடி-1, 15. வி.எஸ். கிருஷ்ணசாமி ராவ் 3/ஏ. வடக்கு வேணுகோபாலபுரம், மஞ்சகுப்பம், கடலூர்-1, 16. எஸ். நாராயணன், அக்ரகார தெரு, எஸ். குளத்தூர், சங்கராபுரம் தாலுகா, 17. நித்யா குருஸ்வாமி, பி.92, சிவசக்தி நகர், சிதம்பரம்-1, 18. சி. நெல்சன், 145, திருச்சி மெயின் ரோடு, சிறுகையூர், லால்குடி, 19. ச. விஜயலெட்சுமி, த/பெ. ந. சண்முகம், 27. வடக்கு திரௌபதி அம்மன் கோவில் தெரு, புத்தூர், திருச்சி-17, 20. கே. என். ராமநாதன், 'அம்பிகா' 49. 2வது ஸ்டேஜ், விஸ்வேஸ்வரா நகர், மைசூர்-8, 21. கே. கணேசன், ஸ்ரீ கணேஷ் வித்யாலயா, 183-W ஆலமரத்தான்பட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம், 22. வே. மயில்சாமி, த/பெ. ப. வேலயகவுண்டர், 27, ராம் நகர் இரயில்வே கூட்ஷெட் அருகில், பொள்ளாச்சி - 1, 23. பி. செங்கோட்டையன், மோர்க்காளிபாளையம், மோளியப்பள்ளி போஸ்ட், திருச்செங்கோடு தாலுகா-637201, 24. ப. சத்தியப்பிரியா, 3/சி-1, பெரியார் தெரு, அல்லிநகர், போளூர் - 606 803, 25. பி. ராஜா, 19. திரு.வி.க. ரோடு, முனிசிபல் காலனி வீதி, ஈரோடு - 4, 26. எம். ஒய். காசிம், 21/1. காபாடியா நகர், சி.எஸ்.டி ரோடு, குர்லா மேற்கு, மும்பை-70, 27. பி. சுப்பிரமணியன், 1/14, கீழ வீதி, பூண்டி-2. 28. கிரீட்டாபாலு, சம்பத் இல்லம், மணல்மேடு, திட்டக்குடி-606 106, 29. ஜி. ஹேமலதா, 1/433, ரோஜா தெரு, ப்ரேம் நகர், பொழிச்சலூர், சென்னை -74, 30. எஸ். சுப்பிரமணியன், பிளாட் எண்.10, சக்கரா நகர், வீரணாம்பாளையம் ரோடு, வேங்கைமேடு, வேலூர், நாமக்கல்-638 182, 31.சாந்தி நடராஜன், 32.பி, முத்துநாயக்கன்தோட்டம், ஆலடிக்குமுளை அஞ்சல், பட்டுக்கோட்டை - 614 615, 32. எச். ஷேக்தாவுத், 32. ரயில்வே குடியிருப்பு, ஸ்ரீரங்கம், திருச்சி-6, 33. பி. பாலசுப்ரமணியன், தெப்பம்பட்டி போஸ்ட், ஆண்டிபட்டி.(வழி) தேனி மாவட்டம் -625 512, 34. சரஸ்வதி சபாபதி, எண்.2, 4-வது குறுக்குத்தெரு, சீத்தாபதி நகர், வேளச்சேரி, சென்னை - 42, 35. ஏ. ஜெய்குமார், 31/2, கும்பாளம்மன் கோவில் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை - 81, 36. டாக்டர் மா.பா.குருசாமி, 117 சன்னதி தெரு, திருச்செந்தூர்-628 215, 37.வி.சி. விஜயேந்திரன், 4.டி.என்.ஜி.ஓ காலனி, இரண்டாவது தெரு, நங்கநல்லூர், சென்னை -61, 38 நா. செந்தில்நாதன், 357. ஜவஹர் பஜார், கரூர் 39. ஏ. பகவதி, 6/6எச் ஹைகிரவுண்டு, கன்னியா குமரி-629 702, 40. எம்.டி. ஆனந்தன், மேலராமநல்லூர், அழகிய மணவாளம் போஸ்ட், திருமானூர் வழி, பெரம்பலூர்-621 715, 41. எஸ்.ஆர். சீதாலக்ஷ்மி, எண். 277-ஏ, அழகேசன் ரோடு, சாயிபாபா மிஷன் போஸ்ட், கோவை - 11, 42. ப. திருவேங்கடம், அஞ்சலக எழுத்தர், சேலம் -636 001, 43. கமலா கோபால்சாமி, 33.பிங்கல சுப்பிரமணிய ரோடு, சென்னை-17, 43. ஆர். சரோஜா ராஜகோபாலன், 2/177. ராமநாதன் நகர், சென்னை-74, 44. ப. ராமகிருஷ்ணன், 3-19சி, காயக்காடு, ஆவணத்தாங்கோட்டை, அறந்தாங்கி-614 624, 45. டி.ஆர். மகாதேவன், 16ஏ/1. மன்னார் தெரு, சென்னை - 17, 46. ஜி. தங்கமணி, 588, கேஎம்கே காட்டேஜ், சுபாஷ் நகர், 7வது கிராஸ் எக்டென்ஷன், ராபர்ட்சன்பேட், கேஜிஎப்- 563 122, 47. வி. ஆசைத்தம்பி, 16, ஏழாவது கிராஸ், அருளானந்தநகர், தஞ்சாவூர்-7, 48. கே.எஸ். கண்ணன், 11. பாரதிதாசன் தெரு, பழம்பேட்டை, சேத்துப்பட்டு-606 801, 49. ஜெ. உமாதேவி, க/பெ. என். ஜயகர், 12. வேம்பூர் நாடார் தெரு, பட்டிவீரன்பட்டி, 50. பி. பன்னீர் செல்வம், பி.28/2. அனல்மின் நிலைய குடியிருப்பு, சதுரங்காடி அருகில், மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.



நண்ணி, நண்ணி, நண்ணி..

• அமைச்சரிடம் பரிசும் விருதும்....

'வண்ண மால் வரையே குடையாக....
மாரி காத்தவனே...'

என்று ஹம்சாநந்தியில் ஆரம்பித்தபோது, கரு மேகங்கள் சூழ்ந்து மனத்திரையில் மழையைப் பொழிந்தன. சாரலைக் கூட முகத்தில் உணர முடிந்தது...

கண்ணனே கரி கோள் விடுத்தானே... என்று பாடகர் விருத்தத்தைத் தொடர, அந்த முகில் வண்ணன் விச்வரூபியாகி மனக் கண்ணை நிறைத்தான்.

'எண்ணுவார் இடரைக் களைவானே...' என்று பெரியாழ்வார் திருமொழியின் அடுத்த அடியில் 'காபி' ராகத்துக்கு மாற, மனம் குழைந்து உருகியது.

நண்ணி நான் உன்னை நாள்தோறும் ஏத்தும்
நன்மையே அருள்செய் எம்பிரானே...!

என்ற அடியில், பாடகர் ரொம்பத்தான் உரிமை எடுத்துக் கொண்டார். பெரியாழ்வாரின் நண்ணியை மூன்றால் பெருக்கிப் பாடினார் பாருங்கள்... கண்கள் கட்டுக்கடங்காமல் பனித்து, பிரவகிக்க ஆரம்பித்து விட்டன.

'விரும்பி, விரும்பி, விரும்பி உன்னை நாள்தோறும் ஏத்தும் நன்மையே அருள் செய்' என்ற வேண்டுதலில்தான் எத்தனை எளிமை, எத்தனை உயர்வு!

அன்று டீ.வி. சங்கரநாராயணன் பாடிய கச்சேரி முழுவதுமே நினைத்து நினைத்து நினைத்து மகிழும்படிதான் இருந்தது என்றாலும் இங்கே விவரித்த விருத்தம் தமிழும் இசையும் சேரும்போது கிடைக்கிற அலாதியான அனுபவத்துக்குச் சிகரமான சான்று.

அன்று டீ.வி.எஸ்.ஸுக்கு மற்றுமொரு முடிசூட்டு விழா - தமிழிசை வேந்தராக! கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸின் தமிழிசை விழா துவக்க தினம் அமரர் கல்கி நூற்றாண்டுக் கொண்டாட்டமாகவும் மலர, தமிழபிமானியும் கல்கி அபிமானியுமான டீ.வி.எஸ்ஸின் கச்சேரியில் அவர் மன நிறைவும் நன்றியுணர்வும் இசையோடு உற்சாகப் பெருக்கெடுத்தன. பாபனாசம் சிவன், கோபாலகிருஷ்ண பாரதி சாஹித்யங்களுடன் அன்று அமரர் கல்கியின் 'வண்டாடும் சோலை'யும் ஆலாபனை, நிரவல், சுவரத்துடன் இடம் பெற்றது. வயலின் வாசித்த மைசூர் மஞ்சுநாத்தும் கஞ்சிராவில் ராமாச்சாரும் அந்த உற்சாகத்தில் சம அளவில் பங்கேற்றனர் எனில், மிருதங்கத்தில் திருச்சி சங்கரன் ஒரு படி மேலேயே போய் விட்டார்! எண்ணி எண்ணி எண்ணி X 2 மகிழ, ரசிக்க, வியக்க வைக்கும் வாசிப்பு!

முன்னதாக அமுதசுரபி விக்கிரமன் வரவேற்க, எம்.ஏ.எம். ராமசாமி தலைமை தாங்க, அமைச்சர் அன்பழகன், அமரர் கல்கி படம் திறந்து வைத்து, டீ.வி.எஸ்ஸுக்கு விருதும் பரிசும் அளித்து சிறப்புரை ஆற்ற, கி. வேங்கடசுப்ரமண்யம், வ.வே.சு. வாழ்த்த, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அரங்கு நிறையக் கூட்டம் அமர்ந்து கேட்டது.

அன்பழகன் அழகாக ஒன்று சொன்னார். 'தமிழிசை விழா என்றும் இயக்கம் என்றும் தனியே ஒன்று நடத்த இன்று அவசியமில்லை. தமிழில் பாட யாரும் மறுப்பதில்லை...' என்று.

பின் ஒன்றுக்கு இரண்டாக சென்னையில் தமிழிசை விழாக்கள் எதற்கு...?

தமிழிசை இயக்கம் என்பதாக ஒன்று நடந்ததை நினைத்து, நினைத்து, நினைத்துப் பெருமைப்படத்தான் போலும்!

— அலமேலு கணேசன்

படம் : உத்ரா

தொடரும் வெடிச்சத்தம்;

உடைந்து உருக்குலைந்து போன சென்னைத் தமிழைக் கேட்டு நொந்து போன நமக்கு இலங்கை யாழ்ப்பாணத் தமிழைக் காது குளிரக் கேட்பதென்பது ஒரு 'கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' அனுபவம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவரான பேராசிரியர் நா. சுப்பிரமணியன் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். அவரது 'ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம்'; துணைவியாரோடு சேர்ந்தெழுதிய 'இந்தியச் சிந்தனை மரபு' ஆகிய நூல்கள் தமிழகத்திலும், ஈழத்திலும் மிகுந்த வரவேற்புப் பெற்றவை. இரண்டு மணி நேரத்துக்கும் மேல் அவருடன் இலங்கையின் இன்றைய நிலை பற்றிக் கதைத்தோம். அதிலிருந்து சில பகுதிகள்:

ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவதில் நூறு சதவீதம் நியாயம் இருக்கிறது. ஒரு சிறுபான்மை இனம், பெரும்பான்மையோரால் ஒடுக்கப்படும்போது உரிமைப் போராட்டம் வெடிக்கிறது. தமிழர் பகுதியில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றுவது, அரசுப் பணிகளில் சிங்கள மொழியைத் திட்டமிட்டுத் திணிப்பது, மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தது, தமிழர்களை 'வந்தேறிகள்' என்று பழிப்பது ஆகியவையே தமிழர்களைப் போராடத் தூண்டின. இவற்றுக்கு முன்னோடியாக 1972ல் புதிய அரசியல் சட்டம் வந்தபோது அதுவரை குறைந்த பட்சம் ஏட்டளவில் இருந்த சிறுபான்மைத் தமிழர்களின் உரிமையும் பறிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கி முன்னுக்கு வருவது கண்களை உறுத்தவே, 'தரப்படுத்துதல்' என்ற ஆயுதத்தின் மூலம் தமிழர்களுக்குக் கல்வியைப் பெறுவதற்குக் கூடத் தடைக்கற்கள் போடப்பட்டன!

யாழ்ப்பாணம் மாவட்டம், இயற்கை வளங்களோ அல்லது பெரிய தொழிற்சாலைகளோ கொண்ட பகுதி அல்ல. சிறுபயிர் விவசாயமும், மீன்பிடி தொழிலும் தான் அங்கு அடித்தள மக்களின் தொழில்கள்.

'கல்வி' என்ற மூலதனத்தைப் பெற்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்வார்கள் தமிழர்கள். வெளிநாட்டிலிருந்து தமிழர்கள் தங்கள் குடும்பத்துக்குப் பணம் அனுப்பியதன் மூலம் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்கள் தங்கள் தேவைகளை கவனித்துக் கொண்டன. இதை 'மணியார்டர் பொருளாதாரம்' என்போம். அப்படித் தங்கள் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை ஈடுகட்டும் கல்வியைப் பெறுவதற்குத் தடை போடும் எந்த அதிகாரத்தையும் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதன் காரணமாகத்தான் போராட்டங்கள்! ஆனால், வெடிச் சத்தங்களுக்கிடையில், துவக்கப் பள்ளியிலிருந்து பல்கலைகழகம் வரை கல்விப் பணி மட்டும் எந்தவித தங்கு தடையுமில்லாமல் நடக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கு உயிரோட்டமாக இருப்பது வெள்ளிவிழா கொண்டாடப் போகும் அதன் பல்கலைக்கழகம். ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள். கலை, அறிவியல், மருத்துவம், விவசாயம் என்ற பிரிவுகள். இருநூறுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள். ராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நடந்தபோது "பல்கலைக் கழகத்தைத் தொடர்ந்து நடத்த முடியுமா" என்ற வினா எழுந்தது. ஆனால் 'எப்படிப்பட்ட சங்கடங்கள், இடையூறுகள் வந்தாலும் எதிர்கொண்டு பல்கலைக் கழகத்தைத் தொடர்ந்து நடத்துவோம்' என்று கூறி, பல சிரமங்களுக்கு இடையில் எந்தவித தங்கு தடையின்றி பல்கலைக்கழகத்தை நடத்தி வருகிறார் எங்கள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.னா. பால சுந்தரம் பிள்ளை. யாழ்ப்பாணத்தில் எங்கள் வீடு இருக்கும் பகுதி உட்படப் பல பகுதிகள் ராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. ஜெனரேட்டர் மூலம்தான் குறிப்பிட்ட நேரம் மட்டும் மின்சாரம். எல்லா அத்தியாவசியப் பொருட்களும் கொழும்பிலிருந்து கப்பலிலோ அல்லது விமானத்திலோ வந்தாக வேண்டும்! பல நேரங்களில் மோதல்கள் காரணமாகக் கப்பல், விமான சர்வீஸ் நின்று விடும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் பொருள்களின் விலை ஏகத்துக்கு ஏறி விடும்!



தொய்வில்லாத கல்வி!

பதினைந்து லட்சமாக இருந்த யாழ்ப்பாணத்தின் மக்கள் தொகை இன்று ஆறு லட்சம்தான். இன்றைக்கும் கொழும்பிலிருந்து சாலை மார்க்கமாகவோ அல்லது ரயில் மூலமாகவோ யாழ் வளைகுடாவுக்கு வர முடியாது! கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே ஒருவரை யாழ்ப்பாணத்துக்குச் செல்ல அனுமதிக்கிறது அரசு. கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி விமான தளத்துக்கு வந்து யாழ்ப்பாணம் வரலாம்; அல்லது கொழும்பிலிருந்து ரயில் மூலமாக, திரிகோணமலை வந்தால், அங்கிருந்து சூழ்நிலைகளைப் பொறுத்து யாழ் குடாவுக்குக் கப்பல்கள் விடுவார்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கிளிநொச்சியிலிருந்து ஆனையிரவு வரை இருபது கிமீ தூரத்துக்குப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதன் காரணமாகத்தான் கப்பல், விமானப் பயணம். சில சமயங்களில் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முடியாத வகையில் கொழும்பில் பல நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்படும். இப்போதும் அதே நிலைதான்!

ஒவ்வொரு முறையும் பெரிய போராட்டங்கள், மோதல்கள் வெடிக்கும்போது, பேச்சு வார்த்தை, 'பேக்கேஜ்' என்றெல்லாம் சொல்லப்படும். ஆனால் ஒன்றும் நடக்காது. ஸ்ரீலங்காவில் ஆளும் கட்சிகளைத் திரைமறைவிலிருந்து ஆட்டி வைப்பது பௌத்த மதவாதிகள்தான். தமிழர்களை அடிமையாக்க நினைக்கும் பௌத்த – சிங்களப் பேரினவாதமாக இது உருப்பெற்றுள்ளது. இடதுசாரித் தலைவர்கள் தவிர, வேறு எந்த ஒரு சிங்கள அரசியல் கட்சித் தலைவருக்கும் தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்கும் மனச்சுத்தம் இருக்கிறதா என்பது சந்தேகமே! அரசியல் ரீதியாகப் பாராளுமன்றத்தில் மூன்றுக்கு இரண்டு பங்கு இடம் பெற்ற கட்சிகள்தான் அரசியல் சட்டத்தைத் திருத்தி, ஏதாவது செய்ய முடியும். ஆனால் விகிதசார பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் நடைபெறுவதால் ஒரு கட்சி, இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவது சாத்தியமில்லாத ஒன்று. இப்படிப்பட்ட யதார்த்த நிலைகள் காரணமாக, தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைப்பது தாமதமாகிறது.

"படித்த, திறமையானவர்கள் பலர் அமைதியற்ற சூழல் காரணமாக வெளிநாடுகளுக்குப் போய் விட்டார்கள். நீங்கள் தொடர்ந்து அந்தப் பூமியிலே இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று பலர் என்னைக் கேட்கிறார்கள்.


"சொந்த பூமியை விட்டு, சொத்து சுகங்களை விட்டுச் செல்வது என்பது எவ்வளவு கொடுமையானது என்பது அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் பெற்ற கல்வி என் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற வெறியில் தான் எல்லாச் சிரமங்களையும் தாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்தில் இருக்கிறேன். என்னைப் போலவே என்னுடன் பணி புரியும் நூற்றுக்கணக்கானவர்களும் அதே உணர்வோடுதான் இருக்கிறார்கள். ●

சந்திப்பு: ஸ்ரீநிவாசன்
படம்: 'க்ளிக்' ரவி

காதில் விழுந்தவை:

டாக்டருக்கே தடுப்பூசி!

● தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞர் அணித் தலைவராக டாக்டர் செல்லக்குமாரை நியமித்தது குறித்து த.மா.கா. வட்டாரத்தில் வியப்புத் தெரிவிக்கிறார்கள். சட்டமன்றத்தில் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சனம் செய்ததைத் தொடர்ந்து, த.மா.கா. தலைமையுடன் டாக்டருடைய உறவு க்ளுகோஸ் தேவைப்படும் அளவுக்குத்தான் இருந்தது. அதன் பின் 'காங்கிரஸில் சேரப் போகிறார் செல்லக்குமார்' என்ற வதந்தி வேறு வந்தது. இடையில் இரண்டு முறை மூப்பனாரைச் சந்தித்தார் செல்லக்குமார். இப்போது, இளைஞர் அணித் தலைவராகி விட்டார்! தலைவராக நியமிக்கப் பட்டவுடன், மூப்பனாரைச் சந்தித்து ஆசி பெற அவர் வீட்டுக்குச் செல்ல நினைத்தார் டாக்டர். "வேண்டாம்... அவரை சத்திய மூர்த்தி பவனுக்கு வந்துடச் சொல்லுங்க" என்று சொல்லி விட்டார் மூப்பனார்! நூற்றுக் கணக்கான ஆட்டோக்களுடன் வந்து அன்று சத்தியமூர்த்தி பவனைக் கலக்கி விட்டார் செல்லக்குமார்.





செல்லக்குமார்

செல்லக்குமாரின் அட்டகாசமான அணிவகுப்பைப் பார்த்த ஒரு சீனியர் த.மா.கா. பிரமுகர், நம்மிடம் "த.மா.காவுடன் இணைப்பு விழா நடத்தி விட்டார் செல்லக்குமார்" என்று ஜோக்கடித்தார். செல்லக்குமார் தலைவராக நியமிக்கப்பட்டாலும் நிர்வாகிகளை அவர் இஷ்டத்திற்கு நியமிக்க முடியாதாம். ஆலோசனைக் குழு தலைவர் தனுஷ்கோடி ஆதித்தனைக் கேட்டுக் கொண்டுதான் முடிவுகள் எடுக்க வேண்டுமாம். டாக்டருக்கே தடுப்பூசி!

● ஜெயலலிதா பா.ஜ.கவுடன் உள்ள தமது திரை மறைவு டீலிங்குகளை நடத்த அடிக்கடி ஹைதராபாத் சென்று விடுவதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள்! 1) மாநில அரசின் புலனாய்வுப் பிரிவின் கண்களுக்கும் காதுகளுக்கும் தெரியாமல் போயஸ் கார்டனில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியவில்லை. 2) பா.ஜ.க. பொதுச் செயலாளர் வெங்கையா நாயுடுவை சந்திக்க ஹைதராபாத் வசதியாக இருக்கிறது. 3) உடல் நலத்தைப் பேணிக் காக்க அன்றாடம் இயற்கை வைத்தியம் செய்து கொண்டு ஓய்வு எடுக்க ஆந்திரத் தலைநகரில் உள்ள அவரது வீடு வசதியாக இருக்கிறதாம்.


● முதல்வரின் செயலாளர்களில் ஒருவர் மீது ஜூனியர் அமைச்சர்கள் ஒரு கூடை புகார்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் "முதல்வர் அதைச் சொன்னார்... இதைச் சொன்னார்" என்று மிரட்டும் தொனியி

பேசி, தமக்கு வேண்டிய காரியங்களை அந்தந்த இலாகாவில் செய்து கொள்கிறாராம் அவர்! சமீபத்தில் கூட்டுறவு இலாகாவில் உள்ள இயக்குனர் பதவி ஒன்றுக்கு செய்தித் துறையிலிருந்து ஒரு நபரை நியமித்திருந்தார்கள். "வெளியிலிருந்து ஆளைப் போட வேண்டாம். எங்கள் துறையிலேயே தகுதியான ஆள் இருக்கிறார்கள்" என்று யூனியன் தலைவர்கள் ஓங்கிக் குரல் கொடுத்ததன் விளைவாக, அந்த போஸ்டிங்கை நிறுத்தி வைத்தனர் இலாகா அதிகாரிகள். ஆனால் அந்தச் செயலாளர், "செய்தித் துறை ஆளைத்தான் போட்டாக வேண்டும்" என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறாராம். அதே போல், தமிழ்தாசனான அந்த அமைச்சர் கொடுத்த விவரங்களை முதல்வரிடம் தெரிவிக்காத காரணத்தால் 'டோஸ்' வாங்கினாராம் செயலர். "எல்லா பத்திரிகைகளையும் படிக்கும் முதல்வர், எல்லோராலும் சுலபமாக அணுகக் கூடியவராகவும் உள்ள போதே அதிகாரிகள் ஆட்டம் போடுகிறார்களே. ஜெயலலிதா ஆட்சியில் என்ன நடந்திருக்கும், யோசித்துப் பாருங்கள்!" என்றார் ஓர் அமைச்சரின் உதவியாளர்.

● 1996ல் கிறிஸ்துவர்கள் ஒட்டுமொத்தமாக அ.இ.அ.தி.மு.க.வுக்கு எதிராகச் சட்டமன்றத் தேர்தலில் வோட்டுப் போட்டார்கள். ஜெயலலிதா மீது அவர்களுக்குக் கசப்பு ஏற்படக் காரணம் கன்னிமேரியாக அவரைப் போஸ்டர் போட்டதுதான். இன்னமும் ஜெ. மீது கிறிஸ்துவர்களுக்கு அதிருப்தி உண்டு. இந்த நிலையில் குஜராத்தில் கிறிஸ்துவ ஆலயங்கள் மீதும், கிறிஸ்துவர்கள் மீதும் நடந்த தாக்குதல்களைக் கண்டித்து ஒரு கடுமையான அறிக்கை ஜெ.யிடமிருந்து வர இருக்கிறதாம். "பா.ஜ.க. அரசு இது போன்ற தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தத் தவறினால் ஆதரவு வாபஸ் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை" என்ற அளவுக்கு அறிக்கையின் தொனி இருக்குமாம். இது போன்ற அறிக்கையின் மூலம் மீண்டும் கிறிஸ்துவர்களின் நம்பிக்கையை அடுத்தத் தேர்தலில் பெற முடியும் என்று ஜெ. நினைக்கிறாராம். "முஸ்லிம் தீவிரவாதிகள் விவகாரத்தில் கலைஞர் அரசு கடும் நடவடிக்கை எடுத்தபோது 'அப்பாவி முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்' என்று அறிக்கை விட்டு முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றார் தலைவி. இப்போது கிறிஸ்துவர்களின் விவகாரத்திலும் இது போன்ற அறிக்கை விட்டு அவர்களது ஆதரவைப் பெற்று விடுவார்" என்று சொல்கிறார் அ.தி.மு.க. தலைமை நிலையப் பிரமுகர் ஒருவர்! ●


— தில்லப்பா

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

வார முன் பகுதியில் ரொம்பவே குஷியா இருப்பீங்க.. உல்லாசம், கேளிக்கைனு ஒரே உற்சாக மயம்தான்! பிரச்னைகள் வந்தாலும் ப்பூன்னு ஊதித் தள்ளிடுவீங்க. வர்ற சந்தர்ப்பங்களும் உங்களுக்குச் சாதகமாத்தான் இருக்கும். வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் வளர்ச்சி தெரியும். ஆனா, வாரத்தின் பின் பகுதியில் அலைச்சல் அதிகரிக்கும். வீண் செலவுகளுக்கும் பஞ்சமிருக்காது. பணப் பிரச்னை அவ்வளவா இருக்காதுன்னாலும் சிக்கனமா இருக்கறது அவசியம். பயணத்தைத் தவிர்க்கறது நல்லது. வெளிநாட்டுத் தொடர்பால ஆதாயம் கிடைக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வீண் அலைச்சல், உடல் அசதி, மனச்சோர்வெல்லாம் இந்த வாரம் தவிர்க்க முடியாத விஷயங்களா இருக்கும். ஆனாலும் எல்லாவற்றையும் சுலபமாவே சமாளிப்பீங்க. உங்க ஆரோக்கியத்தில் மட்டுமில்லாமல், குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரோட ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டணும். இயந்திரத் தொடர்புடைய வேலை செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கணும். எலக்ட்ரானிக் துறை சம்பந்தப் பட்டவங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும்னாலும் எல்லோருமே, கொடுக்கல் - வாங்கல், வீடு, மனை, ரியல் எஸ்டேட் விஷயங்களில் எச்சரிக்கையா இருக்கணும். இரவுப் பயணம் வேணாம். பிக்பாக்கெட்டர்களிடம் உஷாரா இருங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

கிரகங்கள் மக்கர் பண்ணினா என்னங்க? தெய்வம் உங்க பக்கம் இருக்கே! அதனால ஏத்தனை குறுக்கீடுகள் வந்தாலும் எதிர்பார்க்காத இடங்கள்லேர்ந்து உதவிகள் வந்து உங்களுக்குத் தோள் கொடுக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வோ, பதவியுயர்வோ, அல்லது இரண்டுமோ கூட கிடைக்கற சான்ஸ் இருக்கு. வெளிநாட்டுலேர்ந்து வர்ற சேதி உற்சாகமானதாவும் ஆதாயம் தரக் கூடியதாவும் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் எல்லோருக்குமே முன்னேற்றமான வாரம்தான். ஆனாலும் உடல் நலத்துல அக்கறை வேணும். பயணத்தால் நன்மைதான் என்றாலும் எச்சரிக்கை அவசியம்.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

சின்னச் சின்னத் தடைகளும் தொல்லைகளும் வரத்தான் செய்யும்னாலும் பொதுவாப் பார்த்தா எதிரிங்களெல்லாம் ஓடி ஒளியற வாரம் இது. போட்டி - பந்தயம், வழக்கு விஷயங்களில் உங்களுக்கே சாதகமான பலன்கள் கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் விஷயங்களில் விழிப்போடு இருப்பது அவசியம். இல்லேன்னா நஷ்டம் தான். பண விஷயம் ஏற்ற இறக்கமாத்தான் இருக்கும்கிறதால சிக்கனம் தேவை. உடல் நலனில் அதிக கவனம் தேவை. இந்த வாரம் பதற்றம் கூடாது; உணர்ச்சிவசப்படுதல் கூடவே கூடாது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


மத்தவங்களோட உதவி உங்களுக்கு ஓகோன்னு கிடைக்கற நிலைல, காரியங்கள் நடக்கறதில என்ன தடை இருந்திட முடியும்? சிலருக்குப் புதுப் பொருட்கள் வாங்கற அதிர்ஷ்டம் இருக்கு. பயணத்தால சில நன்மைகள் கிடைக்கும்னாலும் எச்சரிக்கையோட போய் வர வேண்டியது அவசியம். வியாபாரிகளுக்கு இது ஓகோ வாரம். கலைத் துறையில் உள்ளவங்களுக்குப் புதிய ஒப்பந்தங்களும் அதனால ஆதாயங்களும் கிடைக்கும். இருந்தாலும் எல்லோருக்குமே செலவு அதிகமா இருக்கும். எல்லார்கிட்டயும் இன் சொல் பேசிப் பழகுவது அவசியம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

கிரக சஞ்சாரங்கள் உங்களுக்குச் சாதகமா இல்லாததால விசேஷமா எதையும் சொல்ல முடியலீங்க. ரெகுலர் வொர்க் மாத்திரம் ரொட்டீனா நடந்துக்கிட்டிருக்கும் அவ்வளவுதான்! புது முயற்சிகள் எதுவும் இந்த வாரம் வேண்டவே வேண்டாம். தவிர்க்க முடியாம எதையாவது செய்ய வேண்டியிருந்தா பெரியவங்ககிட்ட ஆலோசனை கேட்டுச் செய்யுங்க. சிலருக்குக் கட்டுக்கடங்காம செலவு வரும். அதால பண நெருக்கடியும் வரும். சிலர் கைப் பொருள் இழக்கவும் சான்ஸ் இருக்கு. ஆபீஸ்ல அதிகாரிங்ககிட்ட ஜாக்கிரதையா நடந்துக்கங்க.

இல்லேன்னா தண்ணியில்லாக் காட்டுக்குத் தூக்கியடிச்சுடுவாங்க!



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

துணிச்சலும் தன்னம்பிக்கையும் கொண்ட நீங்கள், நிர்வாகத்தில் சாதனைகள் புரியற சான்ஸ் நிறையவே இருக்கு. பண விஷயம் திருப்தியா இருக்கும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் விஷயங்களிலும் ஆதாயம் பார்க்கலாம். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பியபடி ஊதிய உயர்வும் இட மாற்றமும் கிடைக்கற சான்ஸ் இருக்கு. பக்கத்து சீட்காரன் உங்களைப் பத்தி போட்டுக் குடுத்தாலும் அதையெல்லாம் தாண்டி கம்பீரமா நிப்பீங்க. வெளிநாட்டுச் சேதி உற்சாகம் தர்றதா இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்களுக்குப் பிள்ளையார் சுழி போடுவீங்க. ஆனாலும் உடன் பிறப்புகள்கிட்ட உஷாரா இருங்க. பிரச்னைகள் வரலாம்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

கத்தியிருக்கறவங்களெல்லாம் அண்ணாந்து பார்க்கும் படியான காரியங்களைச் செஞ்சு உசந்து நிப்பீங்க. போட்டி, லாட்டரி, வழக்கு விஷயங்களெல்லாம் உங்களுக்கு ஆதாயமாத்தான் இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கறதுக்கான அறிகுறிகள் தெரியும். கூடப் பிறந்தவங்களாலும் அனுகூலம் கிடைக்கும். பெண்கள் நினைச்சதைச் சாதிக்கற வாரம். சிலருக்குப் பயணத்தினாலும் பலன் கிடைக்கும். ஆனாலும் பேச்சில் நிதானம் காட்டுங்க. வீண் அலைச்சலும் வீண் செலவும் தேடி வந்து கதவைத் தட்டும்; உஷாரா இருங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

கிரக சஞ்சாரங்கள் உங்களுக்கு அனுகூலமாவே இருக்கறதால உங்களுக்குச் சாதகமான பலனையே எதிர்பாருங்கள். பொறியியல் துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு லாபம் உறுதி. எதிரிங்களெல்லாம் ஓடி ஒளிஞ்சுக்குவாங்க. உத்தியோகஸ்தர்களுக்கு முன்னேற்றமான பாதை தென்படும். வீடு, மனை, ரியல் எஸ்டேட் விஷயங்களில் ஆதாயம் காணலாம். புதுப் பொருள்களை வாங்குவீங்க. கலைத்துறையில் உள்ளவங்க வெற்றி நடைபோடுவாங்க. வியாபாரிங்க புது முதலீடு செய்யாம இருக்கணும். புதுத் துறைகளைத் தேர்ந்தெடுக்கறதுக்கும் இது சரியான வாரம் அல்ல.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

சாதுர்யமாகப் பேசியே பல காரியங்களைச் சாதிச்சிடுவீங்க. பத்திரிகை - சிந்தனையாளர்களுக்குப் பெயரும் புகழும் உறுதி. பொதுவாப் பார்த்தா எல்லோருக்குமே பண விஷயங்களில் அபிவிருத்தி தெரியும். ஸ்பெகுலேஷனில் அளவோடு லாபம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கலுக்கு இது நேரமில்லை. சுப காரியங்கள் நடப்பதற்கான அறிகுறிகள் புலப்படும். அரசுப் பணியாளர்களின் வளர்ச்சியில் குறுக்கீடுகள் வரும். குடும்பத்திலும் சிறு சிறு பிரச்னைகள் தலை தூக்கும். புது ஆளுங்கிட்ட எச்சரிக்கையா இருக்கணும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

நினைச்சது நடக்கற வாரம் உங்களுக்கு. தொழிலதிபர்களுக்கும் அபார வளர்ச்சி தெரியும். தொழிலாளர்களுக்கும் கேட்ட சம்பளம் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கும் ஏறுமுகம் தான். வியாபாரிகளுக்கும் லாபம் கூடும். சிந்தனையாளர்களுக்கும் ஆதாயம் இருக்கு. கலைத் துறையினருக்கும் வெற்றிகரமான வாரம் தான் இது. ஆனாலும் பயணத்திலும் போலீஸ் விவகாரங்களிலும் எச்சரிக்கையா இருங்க. மின்சாரம், நெருப்பு தொடர்பான வேலை செய்யறவங்க உஷாரா இருக்கறது ரொம்பவே அவசியம்.




மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எந்த விஷயமானாலும் கவனமா செயல்படணும். எதுவானாலும் அவசரம் கூடாது. பேச்சிலும் செயலிலும் நிதானம் அவசியம். புது ஆளுங்கிட்ட ஜாக்கிரதையாப் பழகணும். பண விஷயம் ஒரே சீரா இருக்காதுன்னா, செலவுகளும் கட்டுக்கடங்காம வந்து சேரும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் எதுவும் இந்த வாரம் வேண்டாம். பிரண்ட்ஸுங்ககிட்ட மனஸ்தாபம் ஏற்படறதுக்கும் சான்ஸ் இருக்கு. கணவன் - மனைவிக்குள்ளும் கூடப் பிறந்தவங்களோடும் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படலாம். விட்டுக் கொடுத்துப் போறது தான் நல்லது.



துலாம் ராசிக்காரரான எழுத்தாளர் ஜ.ரா. சுந்தரேசனுக்கு (பாக்கியம் ராமசாமி) வெளிநாட்டுச் சேதி உற்சாகம் தர்றதா இருக்குமாம்.



அழியாத நினைவுகள்!

✉ அட்டையில் பொன்மனச் செம்மலின் புன்னகை மாறா முகம் கண்டதும், உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது. அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும், அவரது நினைவுகள் அழியாமல் என்றும் மக்கள் மனத்தில் நிற்கும் என்பதற்குத் தங்களின் கட்டுரையே சாட்சி!

திருச்சி-18, அம்மனூர் என். சாம்பமூர்த்தி.

✉ 'எம்.ஜி.ஆர் இன்று இருந்தால்...' கல்கியின் கேள்விக்கு நாவலர் அளித்த பதிலில் சிறப்பு நீதிமன்றத்தில் அவர் மீதுள்ள வழக்கின் வெறுப்பைக் கொட்டியுள்ளார். ஆர்.எம். வீரப்பன், எம்.ஜி.ஆருக்குப் பிறகு, தாம் கண்ட கனவுகள் கலைந்து போனதை அப்பட்டமாக ஒப்புக் கொண்டுள்ளார். பண்ருட்டி ராமச்சந்திரனின் பதில்தான் திருப்திகரமாகவும், யதார்த்தமாகவும் நம்பும்படியாகவும் இருந்தது.

பெங்களூர் - 16, அ. சங்கரன்.

✉ "அ.இ.மு.க.வின் எதிர்காலம் எப்படியிருக்கும்?" என்ற கேள்விக்கு, பத்திரிகையாளர் இ. கஸ்தூரி ரங்கன் அளித்துள்ள பதில் ஏற்புடையதாக இல்லை. ஜெயலலிதாவின் செல்வாக்கு சரியவில்லை என்பது உண்மையாயிருந்தாலும், "இந்தியாவில் எந்த அரசியல்வாதி, ஊழலுக்காக தண்டனை பெற்றுள்ளார்?" என கேள்வி எழுப்பியுள்ளது அதிர்ச்சியான விஷயம். நாட்டின் நீதி - சட்ட அமைப்புகளின் மீது, சாதாரண மக்களுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் எழுத வேண்டிய, பொறுப்பான பத்திரிகைத் துறையில் இருப்பவர் இத்தகைய கருத்தைத் தெரிவித்திருப்பது வருந்தத் தக்கது.

கன்னிப்பாடி, கே. ஸ்டாலின்.

✉ இவ்வாரத் தலையங்கம் (பி.ஜே.பி.யின் பல்டி) மிகவும் அருமை. பல வகைகளிலும் நன்கு அலசி ஆராய்ந்து எழுதப்பட்டது. பி.ஜே.பி. அரசு ஜெ.க்குத் துணை நின்ற கோழைத்தனமான சமரசத்தை கேவலமோ கேவலம் என நன்றாகச் சுட்டியிருக்கிறீர்கள்.

விபீஷணபுரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ இரத்தம், பலி என்கிற பழைய ஃபார்முலாவாக இருந்தாலும் - பச்சைப் பசேல் என்ற அடர்ந்த காடுகளில் பயணிக்கச் செய்து, பரவசப்பட வைத்தது கதை. ஹேமா இராஜு"க்குப் பாராட்டு!

ஈரோடு - 10, ரஞ்சனிப்ரியன்

✉ 'சாந்துப் பொட்டு' சிறுகதை கதாநாயகியின் உள்ளத்து உணர்ச்சியை அழகாகப் படம் பிடித்து காட்டியது. பணத்தினால் தான் கறுப்பை வெளுப்பாக்க முடியும் என்று தவறாக எண்ணுபவர்களுக்குப் படிப்பினை சொல்லும் சிறுகதை!

திருச்சி-17, உஷா முத்துராமன்

✉ ரொம்ப அருமை! இந்த வார கல்கியில் பொன்னின் செல்வன் தொடர்கதைக்கு கறுப்பு வெள்ளை வண்ணத்தில் ஓவியர் பத்மவாசன் வரைந்திருக்கும் மந்திராலோசனை மண்டபப் படம். அந்த கல் தூண்கள், மரங்கள், ஆட்கள் அமர்ந்திருக்கும் பாங்கு, ஒளிந்து நின்று ஒருத்தி கவனித்தல்... முன்பு சில்பி, திருக்கோயில்களைத் தத்ரூபமாக வரைவார். அதே தரத்தில் இந்தப் படமும்! வாழ்த்துகள் பத்மவாசன்!

சென்னை- 91, பாலகல்கி.

✉ "சலசலக்கும் சமத்துவபுரம்" என்று 'கல்கி' கட்டுரை வெளியிட்ட பிறகு, அரசு நிர்வாகம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டு 'கல்கி'யிடமே 'சலசலக்கும் சமத்துவபுரத்தில் சுறுசுறுப்பான நடவடிக்கைகள்' என்று பாராட்டு வாங்கி விட்டதே! இதே மாதிரி 'மக்களுக்கு எதிரான தமிழக அரசு' கட்டுரையைப் பார்த்துவிட்டு, விளம்பரப் பலகைகள் சம்பந்தமாக நியாயமான நடவடிக்கை மேற்கொண்டு பாராட்டுப் பெறுமென நம்புகிறேன்.


அந்தியூர், மு. தவசியப்பன்.

✉ 'பாசிலிகாவுக்கும் சர்ச்சுக்கும் என்ன வித்தியாசம்?' என்ற வினாவை ஜெயஸ்ரீ ராஜ் எழுப்பியுள்ளார். வெப்ஸ்டர் அகராதி தரும் விளக்கம் இது: பண்டைய ரோமில் நீதிமன்றங்கள் நீண்ட சதுர வடிவிலும் நீதிபதிகள் அமரும் இடம் ஒருமுனையில் அரை வட்ட வடிவமாகவும் இருக்கும். இதுவே அன்றைய பாசிலிகா. பின்னர் இது பொதுக்கூட்டங்கள் நடைபெறும் கூடமாயிற்று. அதை யடுத்து மாதா கோவில்கள் இவ்வடிவத்தில் அமைக்கப்பட்டன. இன்றைய நிலையில் பாசிலிகா என்றால் மிகப் புராதன மாதா கோவில். மற்றவை சர்ச்கள்.

சிட்லபாக்கம், அ. ஷண்முகசுந்தரம்.

✉ஜெயேந்திரர் சொல்கிறார் என்பதால்கூட ஒரு தவறான கருத்துக்கு மதிப்பு ஏற்படாது என்ற துணிச்சலான பதிலும், பொறுப்பற்ற விமர்சனங்கள் பொறுப்பான இடங்களிலிருந்து வரக் கூடாது என்ற ஆலோசனையும் மிக அருமை!

சென்னை-84, ஜோ. பன்னீர்செல்வம்.



புதைகுழியில் புதைத்ததற்கா பாரத ரத்னா விருது?

“மதச் சார்பின்மையில் நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்கிற கட்சிகள், அப்படி வாழ்வதற்கான மனநிலையை மக்களிடம் உருவாக்குகிற எந்தவொரு முயற்சியிலும் ஈடுபடவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், சில கட்சிகள் பதவியை அனுபவிப்பதற்காக, மதரீதியான கட்சிகளுடனும் ஜாதி ரீதியான கட்சிகளுடனும் கூட்டணி வைத்துக் கொள்கின்றன. இது போன்ற செயல்களால் மதமும் ஜாதியும் மக்களிடம் பரவுவதற்கே அந்தக் கட்சிகள் உதவிக் கொண்டிருக்கின்றன.

“இந்தியா, பல மதங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாடு. ஒவ்வொரு மதமும் தனித்தனி தன்மை கொண்ட மதவாதமுடையதுதான். இவை எல்லாமே இந்திய தேசியத்துக்குக் கேடுவிளைவிக்கக் கூடியதுதான். என்றாலும் இந்து மதவாதம் என்பது மற்ற மதவாதங்களை விடவும் பெருங்கேடு விளைவிக்கிற ஒன்று. இந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பதால், இந்து மதவாதம் தவிர, மற்றவையெல்லாம் இந்திய தேசியத்துக்கு எதிரானவை – மற்றவர்களெல்லாம் தேச விரோதிகள் – என்கிற மாயத் தோற்றத்தை மிகச் சுலபமாக உருவாக்கி விட முடியும். ஆர்.எஸ்.எஸ். போன்ற கட்சிகள் இதைத்தான் வெளிப்படையாகவே செய்து கொண்டிருக்கின்றன!”

– 1968-ல் நடந்த மதச் சார்புக்கு எதிரான இரண்டாவது தேசியக் கருத்தரங்கில் ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆற்றிய தலைமையுரையின் ஒரு பகுதிதான் இது. வெறும் கருத்தா இது? தீர்க்க தரிசனம்!

இது போன்ற எத்தனையோ தலைவர்களின் தீர்க்க தரிசனக் கருத்துகளை ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டன நமது அரசியல் கட்சிகள்.

புதைத்த சுவடு யாருக்கும் தெரிந்து விடக் கூடாதல்லவா! அதற்காகவே ஜெயப்பிரகாஷ் நராயணுக்கும் ‘பாரத ரத்னா’ விருதைக் கொடுத்து விட்டார்கள் போலும்!

— இளங்கோவன்

காதல் கவிதை

பாத்திரங்களைச் செதுக்கி, சிற்பம் போல் துலங்கச் செய்கிற அகத்தியன், ஏன் கதையில் ஒரு புதுமை வேண்டும் என்பது பற்றி யோசிக்காமல் 'கட்டிய கோட்டை'யையே வேறு கற்களை வைத்து மீண்டும் கட்டியிருக்கிறார்? படம் எழுப்பும் பலமான கேள்வி இது தான்.

சம்பவக் கோர்வையின் நேர்த்தியில் கிறங்கி, உயரே உயரே போகிற ரசிகன், கிளைமேக்ஸில் தலைகுப்புற விழுவது போல் உணர்வதும் இதனால்தான்.

அந்தக் கோட்டையில் காணாமலே காதலித்தார்கள். இங்கு ஒருவருக்கொருவர் கண்டபோது காதல் வராமல், நடுவே கொஞ்ச நாள் காணாமல் இருக்கும்போது காதல் வந்து பிறகு சில வழக்கமான சிக்கலுக்குப் பின் சுபமாகிறது.

புதுமை இல்லாத கதையைப் புறக்கணித்து விட்டாலும் படத்தில் ரசிக்கப் பல விஷயங்கள் இருக்கவே செய்கின்றன. ஓர் இடைவெளிக்குப் பின் வந்திருக்கும் அம்பிகாவின் வியப்பூட்டும் ஹிஸ்டிரிக் நடிப்பு, சொல்புரியாமல் பேசி மாயும் மணிவண்ணன் இதில் தந்திருக்கும் உன்னதமான குணச்சித்திரத் தோற்றம், சற்றும் எதிர்பார்க்க இயலாத கவித்துவ வசனங்கள் - இன்னும் பல சொல்லலாம்.

கதாநாயக/நாயகியை விடவும் மனத்தில் நிற்பவர்கள் அவர்களது பெற்றோர். மணவாழ்வில் இனிக்க இனிக்கக் காதலிக்கும் ஸ்ரீவித்யா - ராஜீவ் ஜோடி ஒருபுறம்; புரிதல் அற்றுப் போனதாலேயே வாழ்க்கை பூதமாகி அவதிப்படும் மணிவண்ணன் - அம்பிகா மறுபுறம். இந்த கான்ட்ராஸ்ட் தம்பதியின் உறவுப் பிணைப்பை மிக நுணுக்கமாகச் சித்திரித்திருக்கிறார் இயக்குநர்.

அம்பிகாவின் ஓயாத கூச்சல், புலம்பல் சட்டென்று வடிந்து போக மணிவண்ணன் கையாளும் உத்தியில் இயக்குநரின் மனவியல் ஆய்வுத் திறனை இனம்காண முடிகிறது.

இந்த இரு ஜோடிகளைத் தவிரவும் வேறொரு ஜோடியின் வாழ்வை (லண்டனில் பிரசாந்த் சந்திக்கும் 'தலைவாசல்' விஜய் - வெள்ளைக்காரி ஜோடி) முற்றிலும் வேறொரு தளத்தில் அறிமுகப்படுத்துகிறார் இயக்குநர்.

"இந்தியக் குழந்தைகள் பெற்றோர் மேல் பாசப் பிணைப்புடன் இருக்கும். ஓர் இந்தியக் குழந்தை வேண்டுமென்பதாலேயே இவரை மணந்தேன்" என்கிறார் அந்த ஒரே காட்சியில் வரும் ரோஸ்.

தாயின் கூச்சல் பொறுக்காமல் லண்டன் வரை ஓடும் பிரசாந்துக்கு, இந்த வசனம் ஏற்படுத்தியிருக்கக் கூடிய பாதிப்பில் அவர் முகம் எத்தனையோ அற்புதமான பாவங்களை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் புத்தர் மாதிரி அமைதி காக்கிறார்.



அப்புறம் காதல் கோட்டை ஹீரா இடத்தில், இங்கொரு கஸ்தூரி. நேற்று வரை காப்பாற்றி வந்த பண்பாட்டையெல்லாம் கவனமாகக் கழற்றி வைத்துவிட்டு, அந்தக்கால ஜோதிலட்சுமி, ஜெயமாலினி வரிசையில் சேர்ந்திருக்கிறார். கொஞ்சம் நடித்துமிருக்கலாம்.

பழகிய கதை என்பதாலேயே முன்குறிப்பிட்ட சிறந்த அம்சங்கள் ஒருவேளை ரசிகர்களின் கவனத்தைக் கவராமல் போகக் கூடும். கதை ஒரு பொருட்டல்ல என்று நீங்கள் நினைத்தால், பொருட்படுத்த வேண்டிய வேறு பல அம்சங்கள் இப்படத்தில் உள்ளன.

— ஆர்.பி.ஆர்.

தங்களது 27.12.98 தேதியிட்ட 'கல்கி' இதழில் உணவு அமைச்சர் மாண்புமிகு நேரு அவர்களின் பேட்டியைக் கண்ணுற்றேன்.

அதில், 'கடந்த நான்கைந்து மாதங்களாக வெளி மார்க்கெட்டில் அரிசி விலை ஏறியதை நான் மறுக்கவில்லை. ஆனால் தற்போது விலை குறைந்து வருகிறது' எனக் கூறியுள்ளார்.

அரிசி விலை ஏற்றத்திற்கு அரசு கூறும் காரணங்கள் எந்த அளவு சரியானது? என்பதை ஆராய வேண்டும்.

அரிசி விலை ஏற்றத்திற்கு சரியான காரணங்களைக் கூறியிருப்பதாக அரசு கருதுவது மட்டுமே பிரச்னைக்குத் தீர்வாகாது. விலை ஏற்றத்தைத் தவிர்ப்பதும், வெளிமார்க்கெட்டில் அரிசி தாராளமாகக் கிடைக்க வழி வகை செய்வதும் அரசின் கடமையாகும்.

உதாரணமாக, சென்ற சம்பா பருவத்தில் (ஜனவரி, 98) வரலாறு காணாத விளைச்சல் தமிழகத்தில் நிகழ்ந்தது.

வானம் பார்த்த பூமிகளில் கூட சீரான மழையின் காரணமாக மிக அதிக விளைச்சல் ஏற்பட்டது. விவசாயிகள் சாலை ஓரங்களில் அம்பாரம், அம்பாரமாய் நெல் மூட்டைகளைக் குவித்து வைத்திருந்தனர்.

அரசும் தனது முழு சக்தியைப் பயன்படுத்தி கொள்முதல் செய்தது; பெருமளவில் இருப்பும் வைத்திருந்தது. 'இதுவரை எந்த அரசும் இந்த அளவு கொள்முதல் செய்ததில்லை' என உணவு அமைச்சர் சட்டப் பேரவையிலேயே பேசினார்.

அப்படி இருந்தும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் அரிசி விலை தாறுமாறாக ஏறுவதன் காரணம் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

சாதாரணமாக குறுவை அறுவடையின் போது அரசு நான்கு அல்லது ஐந்து லட்சம் டன் நெல் கொள்முதல் செய்வது வழக்கமாகும்.

ஆனால் இந்த ஆண்டு 50 ஆயிரம் டன்னுக்கும் குறைவாகவே அரசு கொள்முதல் செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

வழக்கமாகச் செய்ய வேண்டிய கொள்முதலை அரசு ஏன் செய்யவில்லை என்பது ஒரு கேள்வி.

குறுவை நெல் தற்போது விவசாயிகளிடம் கையிருப்பு இல்லை. 'தங்களிடமிருந்த எல்லா நெல்லையும் விற்று விட்டனர்' என அமைச்சரே தமது பேட்டியிலும் ஒப்புக் கொண்டுள்ளார்.

அதன்படி விவசாயிகளிடமிருந்து வாங்கப்பட்ட நெல் வெளி மார்க்கெட்டில் புழக்கத்தில் இருந்தால் அரிசி விலை ஏறுவதற்கு வாய்ப்பே கிடையாது.

சம்பாவிலும் நல்ல விளைச்சல். குறுவையிலும் நல்ல விளைச்சல். குறுவை நெல் அரசிடமோ, விவசாயிகளிடமோ கையிருப்பிலும் இல்லை. விளைந்த நெல் முழுவதும் வெளிமார்க்கெட்டுக்கு வந்தும் கூட அரிசி விலை குறையவில்லை. இதற்குக் காரணம் என்ன?

வெளிமார்க்கெட்டில் விற்கப்

• அழகிரி



அரிசி விலை ஏற கடத்தலே காரணம்!

— த.மா.கா. எம்.எல்.ஏ. எழுதுகிறார்

பட்ட நெல் பெருமளவில் கேரளாவிற்குக் கடத்தப்பட்டது என்பதுதான்.

இது உண்மையல்ல என அரசு கூறுமே யானால், அரசாங்கத்திற்குத் தெரிந்த உண்மையையாவது நமக்குக் கூறட்டும்.

தற்போது ஆந்திராவில் இருந்து மூன்று லட்சம் டன் அரிசி வாங்க டெண்டர் கோரப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறுகிறார்.

நம்மூர் விவசாயிகளிடமே மேலும் 10 ரூபாய் கொடுத்து குறுவை நெல்லைக் கொள்முதல் செய்திருந்தால் தமிழக விவசாயிகளாவது மகிழ்ந்திருப்பார்கள். ஆந்திராவிலிருந்து அரிசி வாங்குவதை விட இதில் அரசுக்குச் செலவும் குறைவு.

'ரேஷனில் கொடுக்கப்படும் அரிசி சில சமயங்களில் மிகவும் புழுத்துப் போய் நாற்ற மடிக்கிறதே!' என்ற 'கல்கி'யின் கேள்வி சரியான கேள்விதான்.

'ஈரப்பதத்தோடு நெல்லைக் கொள்முதல் செய்வதுதான் அதற்குக் காரணம்' என அமைச்சர் கூறியுள்ளார். அது உண்மைதான். குறுவைப் பருவத்தில் மட்டும்தான் ஈர நெல் சில சமயங்களில் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் சம்பா நெல் ஈர நெல்லாக வருவதில்லை. ஆனாலும் அந்தப் பருவத்திலும் ரேஷனில் தரமான அரிசி கிடைப்பதில்லை. காரணம் என்ன?

நமது உணவுக் கழகங்கள் தங்களுடைய சொந்த மற்றும் தனியாருடைய ஆலைகளில் நெல்லை அரிசியாக மாற்றும்போது எவ்வளவு தரமில்லாமல் உற்பத்தி செய்கிறார்கள் என்பது வேதனையான விஷயம்.

தரமான நெல்லிலிருந்து தரமற்ற அரிசியை உற்பத்தி செய்யும் கலையை நாம் நன்றாகவே கற்று வைத்துள்ளோம்.

அதனால்தான ரேஷனில் தரப்படும் அரிசி எப்போதுமே தரக்குறைவாகக் கிடைக்கிறது; நாறுகிறது; சில சமயங்களில் புழுத்தும் போய் விடுகிறது.

அரசு கவனம் செலுத்தினால் தரமான அரிசியை ரேஷனில் தர இயலும்.

உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடையவில்லை என்பதை அரிசி விலை அதிகமாகிற காலங்களில்தான் அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது.

இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவைக் கொண்டு வருவது மிக மிக அவசியம். அரசின் செயல் திட்டத்தில் முதன்மை இடம்பெற வேண்டிய திட்டமும் இதுவேயாகும்.

ஒரு அமைச்சர் மட்டுமே கடுமையாகச் செயல்படுவதால் பிரச்னைகளைத் தீர்த்து விட முடியாது. அவரின் கீழ் உள்ள துறை அதிகாரிகளும் முழு மூச்சுடன் செயல்பட வேண்டும்.

கவனக் குறைவு, காலதாமதம், லஞ்சம், ஊழல் ஆகியவை ஒடுக்கப்பட வேண்டும்; கடத்தல் வியாபாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இவை நிகழ்ந்திருந்தால் வெளிமார்க்கெட்டில் இந்தப் பருவத்தில் அரிசி விலை உயர்ந்திருக்காது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ○

— கே. எஸ். அழகிரி
எம்.எல்.ஏ. (சிதம்பரம் தொகுதி)

பசு. தனபாலன்

சீமை ஓடு வேய்ந்த அந்த வீடு ஒரு சந்தோஷ மாலை நேரத்தின் எதிர்பார்ப்பில் இருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்த பழங்கால மின்விசிறி, சாம்பல் கலரில் தெரிந்து கொண்டிருந்த பிளாக் அண்ட் ஒயிட் டீ.வி. என்று வீடெங்கும் நடுத்தர வர்க்கத்து முத்திரைகள். ஹாலில் அமர்ந்து எட்டாம் வகுப்புப் பாடத்தை உருப்போட்டுக் கொண்டிருந்த புவனாவுக்குப் பதிமூன்று வயதிருக்கலாம். அழகான முகத்துடன் பாவாடை சட்டை அணிந்து களையாக இருந்தாள்.

சீனிவாசன் கையில் டிபன்கேரியர் அடங்கிய ஆபீஸ் பேகுடன், உற்சாகமாக உள்ளே பிரவேசித்தான்.

புவனா முகம் மலர எழுந்து குரல் கொடுத்தாள். "அம்மா... அப்பா வந்துட்டார்..."

சீனிவாசன் பேகைத் திறந்து ஒரு ஸ்வீட் பாக்கெட்டை எடுத்து மகளிடம் நீட்டியதும் அவள் ஆச்சரியப்பட்டாள். "என்னப்பா மாசக் கடைசியிலே ஸ்வீட்...?"

சமையல் கட்டிலிருந்து புடைவைத் தலைப்பால் கைகளைத் துடைத்துக் கொண்டே வந்த சகுந்தலா சற்றே ஆர்வத்துடன் கேட்டாள். "ஏங்க, லோன் பணம் வந்துடுச்சா?"

"உம்... வந்துடுச்சு..." என்ற சீனிவாசன் கையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான். "பீரோவிலே வை."

அவன் லுங்கி மாற்றிக் கொண்டு, முகம் கழுவிக் கொண்டு வந்து சேரில் அமர்ந்த போது டேபிள் மீதிருந்த காதணி விழா அழைப்பிதழைப் பார்த்தான். "என்ன இது?"

"உங்க சிநேகிதர் சுந்தரேசன் வந்திருந்தார். அவர் பையனுக்கு வர்ற புதன்கிழமை காதுகுத்திக் கல்யாணமாம். அவசியம் வரணும்னு சொல்லிட்டுப் போனார்."

சீனிவாசன் சலிப்புடன் சொன்னான்: "காது குத்தலை எல்லாம் சிம்பிளா வச்சுக்கக் கூடாதா? இப்ப அவனுக்கு ஏழெட்டாயிரம் செலவு. நம்மை மாதிரி போறவங்களுக்கு நூறு







"லோன் பணம் எவ்வளவுங்க இருக்கு?"

"எட்டாயிரம் ரூபா இருக்கு."

"லோன் பத்தாயிரத்து சொச்சம்னு சொன்னீங்க?"


"ஆமா, பியூன் தங்கராஜுகிட்டே வாங்கின ரெண்டாயிரம் ரூபாயை வட்டியோட திருப்பிக் கொடுத்துட்டேன். அப்புறம் டிரஷரிக்குக் கொஞ்சம் செலவு."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது புவனா குறுக்கிட்டாள்.

"அப்பா, இந்த தடவையாவது டூர் போகலாம்ப்பா."

"டூரா?"

"ஆமாப்பா. கோடி வீட்டு ராஜலட்சுமி மாமி மத்தியானம் வந்திருந்தாங்க. அவங்க ப்ரைவேட்டா ஒரு வேன் வச்சுகிட்டு மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரின்னு நாலு நாள் டூர் போறாங்களாம். நம்மையும் வாங்கன்னு கூப்பிட்டாங்க."



இருநூறுன்னு மொய் வைக்கிற செலவு."

"என்னங்க செய்யறது? இந்த மாதிரி விசேஷத்தை விமரிசையா செய்யலைன்னா நாலுபேர் கேவலமா பேசுவாங்களேன்னு பயந்துகிட்டு செலவு செய்ய வேண்டியிருக்கு" என்ற சகுந்தலா சமையலறைக்குப் போய் காப்பி கலக்கி எடுத்து வந்தாள்.

சீனிவாசன் காபி குடித்துக் கொண்டிருந்த போது சகுந்தலா பேச்சை ஆரம்பித்தாள்.

சை

சீனிவாசன், "டூரெல்லாம் வேணாம். பேசாம இரு" என்று அதட்டியபடி காலியான தம்ளரை கீழே வைத்தான்.

புவனா விடவில்லை. "அப்பா... அப்பா... நான் இன்னும் மதுரை, திருச்செந்தூரெல்லாம் பார்த்ததேயில்லைப்பா. டூர் போகலாம்ப்பா."

சீனிவாசன் அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான். "நான் கைமாத்து வாங்கினதையெல்லாம் திருப்பிக் கொடுத்துட்டா இந்தப் பணத்திலே வெறும் ஐயாயிரம் ரூபாய்கூட மிஞ்சாதும்மா."

"அதுவே போதும்ப்பா. மாமிகூட அப்படித்தான் சொன்னாங்க."



"உன் காதலன் வாழ்க்கைக்கு சரிப்பட்டு வரமாட்டான்மா!"

"ஏம்பா அப்படி சொல்றீங்க?"

"நா எப்ப கடன் கேட்டாலும் மறுபேச்சு பேசாம உடனே குடுத்துடறான்!"

– அம்பை தேவா

"அப்பா! இனிமேல் என்னைக் கழுதைன்னு திட்டாதீர்கள்!"

"ஏன்?"

"அடுத்த வீட்டு மாமா அவர் பையனைக் 'குட்டிச்சுவர்'ன்னு திட்டுறார்."

– தாரமங்கலம்
அ. மூத்துசாமி



"நீ சும்மா இருடி. அவ்வளவு பணம் செலவழிச்சு டூர் போற நிலைமையிலா நாம இருக்கோம்?" என்று அவளை அதட்டிய சகுந்தலா, "ஒரு மிக்ஸி வாங்கினா எனக்கு சட்னி அரைக்க எவ்வளவு ஈஸியா இருக்கும்?" என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டாள்.

சீனிவாசன் கேலியாய்ப் புன்னகைத்தான். "அதானே பார்த்தேன்? உனக்கு மிக்ஸி வேணும்?"

"அப்படி இல்லீங்க. வேணும்னா உங்களுக்கு ஆபீஸ் போயிட்டு வர ஒரு சைக்கிள் வாங்கிக்கங்க. நான் சொல்றது காசு கரியாகக் கூடாது. வீட்டுக்கு உபயோகப்படற மாதிரி ஒரு பொருள் வாங்கி வச்சுடணும்."

சீனிவாசன் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி பேசினான். "இத பாரு சகுந்தலா. நான மொத்தமா லோன் போட்டு கொண்டு வர்ற பணத்தை இப்படி செலவு பண்ணிட வேண்டியது. அப்புறம் மாசா மாசம் சம்பளம் பத்தாம சில்லறையா கடன் வாங்க வேண்டியது. சக்கரம் சுத்தறமாதிரி திரும்பத் திரும்ப இப்படித்தான் நடக்குது."

"அதுக்கு என்ன பண்ணணும்கிறீங்க?"

"இப்ப புது அரிசி வரும். விலையும் குறைச்சல். மூணு மூட்டை வாங்கிப் போட்டுட்டோம்னா ஆறேழு மாசத்துக்கு அரிசி வாங்கற செலவு குறையுமில்லே?"

"போங்கப்பா. என்னை ஒரு தடவையாவது வெளியூர் கூட்டிட்டு போயிருக்கீங்களா?"- புவனா சிணுங்கியபடி எழுந்து உள்ளே போனாள்.

சீனிவாசன் ஒரு நிமிஷ யோசனைக்குப் பிறகு, புன்னகையுடன் மேஜை டிராயரிலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்து, மூன்று துண்டுகளாக்கி ஒவ்வொன்றாய் எழுதினான். மிக்ஸி-சுற்றுலா-அரிசி.

அவன் அருகே வந்து நின்று பார்த்த சகுந்தலா "என்னங்க செய்யறீங்க?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"நாம மூணு பேரும் மூணுவிதமாய் சொல்றோம். அதனாலேதான் இந்தக் குலுக்கல் ஐடியா. இந்த மூணு சீட்டையும் சுருட்டி குலுக்கிப் போட்டு ஒண்ணை மட்டும் எடுப்போம். எந்தச் சீட்டு வருதோ அதன் பிரகாரம் செய்வோம்."

"நல்ல விளையாட்டு போங்க!"

சீனிவாசன் மூன்று சீட்டுகளையும் குலுக்கிப் போட்டான். "புவனாவே வந்து எடுக்கட்டும். எங்கே அவ?"

புவனா கூடத்தில் இல்லை. பின்கட்டிலிருந்த பாத்ரூமிலிருந்து அவள் அழைக்கும் சப்தம் கேட்டது. "அம்மா... இங்கே வாயேன்..."

சகுந்தலா எழுந்து உள்ளே போனாள். சில நிமிஷங்கள் கழித்து திரும்பி வரும் போது அவளிடம் சந்தோஷம் கலந்த பரபரப்பு ஒட்டியிருந்தது.

சீனிவாசன் பெருமூச்செறிந்தவாறு மூன்று சீட்டுகளையும் கசக்கிக் குப்பையில் போட்டான்.

யூலிப்

யூனிட் லிங்க்ட் இன்ஷ்யூரன்ஸ் பிளான்



இந்த 4-இன்-1 வரி சேமிப்புத் திட்டம் எங்களுக்கு மிகவும் உகந்தது. உங்களுக்கு ?

ஆம்! யூலிப் வழங்கும் ஆதாயங்களில் வரி சேமிப்பு ஒன்றாகும். நீங்கள் பெறுவதனைத் தையும் சற்று நோக்குங்கள்.

முதன் முதலாக, வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 88 ன் கீழ் நீங்கள் வரிச் சேமிப்பைப் பெறுகிறீர்கள். நீங்கள் மனைவி / கணவன் பெயரில் மற்றும் 12 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளின் பெயரில் செய்த முதலீட்டின் மேலும் வரி தள்ளுபடியைப் பெறலாம்.

இதிலிருந்து பெறப்படும் ஆதாயங்களும் மிக சிலாக்கியமானவை. யூலிப் கடந்த 6 ஆண்டுகளாக ஒரு சீரான டிவிடெண்டான 16.5% ஐ வழங்கி வருகிறது. 10/15 வருடத் திட்டக் காலவரையை பூர்த்தி செய்தால் ஒரு 5% / 7.5% முதிர்வுறும் போனஸும் உங்களுக்கு.

இதற்கெல்லாம் மேலாக, ரூ. 75,000 வரையிலான ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் காப்பீடு அதுவும் ஒரு வித மருத்துவ சோதனையும் இல்லாமல்! மற்றும் ரூ. 30,000 வரையிலான ஒரு தனிப்பட்ட விபத்து காப்பீடும்!

அண்மையில் இலக்குத் தொகை அதிகரிக்கப் பட்டுள்ளதால், நீங்கள் ரூ.6,000த்திலிருந்து ரூ.75,000 வரை இரண்டு காலவரைகளுக்காக — 10 ஆண்டுகள் அல்லது 15 ஆண்டுகள் — முதலீடு செய்யலாம். நீங்கள் செலுத்த வேண்டிய இலக்குத் தொகையை நிர்ணயித்த பின், நீங்கள் இலக்குத் தொகையின் 1/10 பாகத்தை அல்லது 1/15 பாகத்தை ஒவ்வொரு வருடமும் செலுத்தலாம்.

ஆகையால், 17 லட்சம் முதலீட்டாளர்கள் இன்று யூலிப் அனுகூலத்தை அனுபவிக்கின்றனர் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

இன்றே உங்கள் யூடிஐ முகவரை அணுகவும் மற்றும் வெறும் சேமிப்பை விட மேலானதைப் பெறுங்கள்.

- வரி சேமிப்பு
- கவர்ச்சிகரமான ஆதாயங்கள்
- ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்
- விபத்து காப்பீடு

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

சில அபாயங்கள் : எல்லா மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு கட்டுப்பட்டவையாகும் மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டைப் பாதிக்கும் அம்சங்கள் மற்றும் சக்திகளைப் பொறுத்து திட்டங்களின் NAV ஏறிடவும் இறங்கிடவும் செய்யும். கடந்தகால சாதனை வருங்கால முடிவுகளைச் சுட்டிக்காட்டுவதாகாது. யூலிப் திட்டத்தின் பெயர் மட்டுமே தவிர, இது எவ்விதத்திலும் திட்டத்தின் தரத்தை, அதன் வருங்கால வளர்ச்சியை அல்லது வருமானத்தை சுட்டிக்காட்டுவதாகாது. திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதியளிக்க முடியாது. முதலீடு செய்யுமுன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

மண்டல அலுவலகம் : 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன் : 517101.
கிளை அலுவலகங்கள் : • கோயம்புத்தூர் போன் : 214973 • சென்னை போன் : 517101, 517190
• மதுரை போன் : 38186 • திருச்சி போன் : 760060

184/98 C TAM B

ஓட்டத்தை நீக்கும் வாடிகன் நகரம்!

சிற(ரி)ப்புப் பரிசைத் தொடர்ந்து, மறுநாள் சிறப்புப் பயணம் - 'வாடிகன் ஸிடி'க்கு. அது நகரம் என்று அழைக்கப்பட்டாலும் தனிநாடு. உலகின் மிகச் சிறிய ஆனால் சீரிய நாடு; உலகின் மிகப் பெரிய கதீட்ரலான ''செயிண்ட் பீட்டர்ஸ் பாஸிலிகா''வைத் தன்னுள் அடக்கியுள்ள மகத்துவம் பெற்றது.

நூறு ஏக்கர் நிலப்பரப்பில் எழும்பி நிற்கும் இச் சின்னஞ்சிறு நாட்டின் முடிசூடா மன்னர் போப்பாண்டவர்! ஒரு காலத்தில் கிறிஸ்துவ சர்ச்சின் ஆதிக்கம், ஐரோப்பிய நாடுகள் மீது விரவியிருந்தபோது, போப் கோலோச்சினார்; மன்னராட்சி கவிழ்ந்து மக்களாட்சி வந்த பிறகு, இந்த ஆதிக்கம் பெயரளவில் மட்டுமே! ஆனால் 'மதகுரு' என்ற மதிப்பும் மரியாதையும் இன்றளவும் 'போப்'புக்கு உண்டு.



• செயிண்ட் பீட்டரின் சிலை

செயிண்ட் பீட்டரின் தியாகத்தைப் பிரதிபலிக்கக் கதீட்ரல் எழுந்தது; நிர்மாணப் பணிகளில் பெரும் பங்கு, தன்னிகரற்ற சிற்பி மைக்கேல் ஏஞ்சலோவினுடையது.

வாயிலில் உள்ள மேடை போன்ற அமைப்பில், விசேஷ தினங்களில் மட்டுமே போப் எழுந்தருளுவாராம்! சுற்றிலும் பல நூறு அடிகளுக்குச் சிறப்பு விருந்தினர்களுக்கான இருக்கைகள் அப்போது போடப்படுமாம்! அதன்பிறகு, பொதுமக்கள் நிற்பதற்குரிய, சதுரமான கற்கள் பதிக்கப்பட்ட பெரிய மைதானம் போன்ற வெட்ட வெளி!

ஜெயஸ்ரீ ராஜ்

மற்ற சமயங்களில், வலப்புறமிருக்கும் போப் மாளிகையில், இரண்டாவது



• பாஸிலிகாவினுள்ளே...


மாடியிலுள்ள ஒரு ஜன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு, அங்கேதான் 'போப்' காட்சியளிப்பாராம். பொதுமக்களுக்கு அவர் அங்கிருந்தே ஆசி கூற, ஜனசமுத்திரம் கீழே' வெட்டவெளியில், வெயில், மழை, குளிர்பாராது காத்து நிற்குமாம்.

பாஸிலிகாவின் இடப்புறம், "guard of Honour" ஆடாது, அசையாது, சிலை போல, ஒரு காவற்காரர், அந்தக் காலத்து ரோமாபுரி சிப்பாய் உடையில் நிற்கிறார். அவரது பணி முடிந்தபின், மற்றொருவரை அவரிடத்திற்கு ஒரு 'குரு' அழைத்து வர, முதலாமவர், தலைப்பாகையை அளித்து, வீரநடை பயின்று, பணி முடிந்து செல்லு

வது ஒரு 'மினி மகுடோற்சவம்' போலிருக்கிறது! இதைக் காணும் ஆவலில் ஒரு கும்பல்.

உள்ளே நுழைந்ததும், கதீட்ரலின் பிரம்மாண்டம் அசத்துகிறது. சலவைக் கல்லால் இழை இழை என்று இழைத்திருக்கிறார்கள். சுவரில் நாலா புறமும் 'கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறை உணர்த்தும் வண்ணச் சித்திரங்கள்; 'மார்பிள் சிப்ஸ்' எனப்படும் கலர் கலரான சில்லுகளால் இந்த ஓவியங்கள் அலங்கரிக்கப்பட்டிருப்பது பேரதிசயம்.

அன்னை மேரி, தன் மடியில் இயேசு கிறிஸ்துவை ஏந்தியிருக்கும், உலகப் புகழ் பெற்ற கலைப் பொக்கிஷமான "Pieta" சிலை, காண்பவரைக் கட்டிப் போடுகிறது. அன்னை



• வாடிகன் மியூசிய ஓவியம்...



• செயின்ட் பீட்டர்ஸ் பாஸிலிகா...

யின் விழிகளில், சோகமயமான காருண்யம், ஸ்தம்பிக்க வைக்கிறது. இந்த ஒரு சிற்பத்தில் மட்டுமே மைக்கேல் ஏஞ்சலோ தம் பெயரைப் பொறித்திருக்கிறார். ஹாலின் மத்தியில் ஏராளமான மெழுகு வர்த்திகள் தீப ஒளியைப் பரப்ப, செம்பு, வெண்கலக் கலவையால் உண்டான பிரதான மண்டபம். மேலே அமைதிப் பறவை; கீழே ஏசுவை ஏந்தியவாறு அருள் பாலிக்கும் அன்னை; சுற்றிலும் தேவதைகள்.

அருகிலேயே செயிண்ட் பீட்டரின் பெரிய உருவச் சிலை. எல்லோரும் நீண்ட க்யூவில் நின்று, சிலையின் காலைத் தொட்டுக் கும்பிட்ட பின்னரே முன்னேறுகின்றனர். கீழ்த்தளத்தில் ஏனைய ஸெயின்டுகளின் ஏராளமான சமாதிகள்.

சுற்றிலும் பல மொழிகளில், தனித் தனியான 'பாவ மன்னிப்பு'க் கூண்டுகள்! ஒவ்வொன்றின் உள்ளேயும் மங்கிய விளக்கொளியில் ஒரு 'ஃபாதர்' அமர்ந்திருக்கிறார்! ஆங்காங்கே சின்னச் சின்ன 'சாப்பல்'கள்! ஒன்றில், நாலைந்து குழந்

தைகளுக்கு 'ஞானஸ்நானம்' நடந்து கொண்டிருந்தது. சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமே உள்ளே அனுமதி. ஆனால் நடப்பவற்றை எல்லாம் நாம் வெளியே நின்று பார்க்கலாம்!


அருகிலேயே வாடிகன் ம்யூசியம். இதை ஆர அமரப் பார்க்க, ஒரு வாரமாகலாம். அத்தனை ஓவியங்கள்... கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்துதான். ஒரு லோக்கல் கைட், ம்யூசியத்தைச் சுற்றிக் காட்டினார். பெரும்பாலும் கிறிஸ்துவின் கதைகள்தான். சித்திரங்களில் சித்திரிக்கப்பட்டிருந்த உருவங்கள் எல்லாம், பெண்கள் உட்பட, மிகுந்த தேக ஆரோக்கியத்துடன் காணப்பட்டனர்.

போப், ஏசு, மேரி படங்கள் பொறித்த டாலர்கள், மோதிரம், புத்தகங்கள் திருப்பதியை நினைவு படுத்த, இங்கே கொகறாக போஸ்ட் கார்டுகள், வீடியோ கேசட்டுகள், மெழுகுவர்த்தி ஸ்டாண்டுகள்... ஆங்கிலம், ஃபிரெஞ்சு, இத்தாலி மற்றும் சீன, ஜப்பானிய மொழிகளிலும் காசெட்டுகள் கிடைக்கின்றன.

ரோமாபுரியே கட்டடக் கலைக்கும், சிலை சிற்பங்களுக்கும் பெயர் பெற்றதென்றாலும், வாடிகன் நகரின் கம்பீர எழில், காண்போரைத் தன் வசப்படுத்தி, அவர்கள் கால்களைக் கட்டிப்போட்டுவிடுகிறது. சுற்றுலாப் பயணிகள் இலேசில் அகலுவதில்லை. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான், கொரியா நாட்டவர்களின் படையெடுப்புதான் அதிகம். டூரிஸ்ட் பஸ்களில் பாதிக்குப் பாதி மங்கோலிய இனத்தவர் நிரம்பி வழிந்தனர்!

இங்கேதான் ஒரு மலையாளிப் பெண்ணைச் சந்தித்தோம். (இமயத்துக்குச் சென்றாலும் அங்கே ஒரு மலையாளியைப் பார்க்கலாம் எனும்போது, இத்தாலியில் பார்ப்பதா அதிசயம்?) தியாஸஃபி படிக்க வந்துள்ளாராம்; ஸ்காலர்ஷிப் உண்டாம்; வந்த உடனேயே இத்தாலி மொழி கற்று விட்டாராம்! படிப்பு இத்தாலியில் தானாம். கேரளாவைப் பற்றி விசாரித்து விட்டு, இங்கே சுகமாக இருப்பதாகத் தெரிவித்துவிட்டு, விடை பெற்றார்.

மாலையில், போப்பின் "Summer palace" ஆன, மலைகளின் மத்தியிலிருக்கும் "Castle gondalfa"வுக்குப் போவதாக ஏற்பாடு. எல்லோரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டு பத்து நிமிடம்கூடப் பயணித்திருக்க மாட்டோம். தடாலென்று பஸ் நின்று விட்டது. ஹூம்... பஸ்ஸின் ஆரோக்யத்திற்கு ஒன்றும் கேடில்லை!



சம்மர் பேலஸுக்குச் செல்லும் வழியில்...

வழிக்குத்தான் வந்துவிட்டது வினை! எந்தப் பக்கமுமே பஸ்ஸை எடுக்க முடியாதபடி அப்படி ஒரு களேபரமான பார்க்கிங்! சின்னதும் பெரிசுமாக கார்கள் இப்படியும் அப்படியுமாய், ஒரு ஒழுங்கேயில்லாமல், தெருவை அடைத்துக் கொண்டு நின்றன. அதுவும் சிவப்பு நிறக் கார் ஒன்று படு டேஞ்சராக வழி மறித்தது.

அருகிலுள்ள கட்டடங்களில் எங்காவது காரின் சொந்தக்காரர் வசிக்கிறாரோ? அல்லது சும்மா அங்கே நிறுத்தி விட்டு வேறெங்காவது போய் விட்டாரோ? ஹார்ன் அடித்தடித்து ஓய்ந்தோம். ஒருமணி நேரம் சல்லடை போட்டும், காரின் சொந்தக்காரர் அகப்படாமல், கடைசியில் போலீசுக்கு ஃபோன் செய்தோம். ஐந்தாவது நிமிடம் போலீசும் வந்து எங்கள் தேடலில் கலந்து கொண்டது. கடைசியில், 81ஆவது நிமிடத்தில், நிதானமாக ஒரு மனிதர் வந்து, அந்தக்

காரில் அமர்ந்து ஸ்டியரிங்கைப் பிடித்த போது... போப்பாண்டவரையே தரிசித்தது போன்ற நிம்மதி! போலீசார் விதித்த கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் ஃபைனை (அது ரொம்ப சொற்பமாம்...) அலட்டிக் கொள்ளாமல் கட்டிவிட்டு அந்த மனிதன் ஒரு 'ஸாரி' கூடச் சொல்லாமல், போய்க் கொண்டேயிருந்தான்!

ஒருவழியாகிவிட்ட எங்களை உற்சாகப்படுத்துவதற்கென்று மரியா, அந்த ஊரில் வழங்கும் 'போப் கதைகள்' ஒன்றில், 'இது உண்மைக் கதை' என்று ஒன்றை எடுத்து விட்டார். ஓவியேட்டா என்ற ஊரிலிருந்து 'போப்' ஒருவருக்கு, ரோம் சென்று, பிரதான போப்பைச் சந்திக்க வேண்டியிருந்ததாம். அந்தக் காலத்தில் அது நெடும் பயணம்.



• வாடிகன் நுழைவாயில்... (புனிதக் கதவு)

மதுப்பிரியரான இந்தப் போப், தமக்கு முன் ஒரு வேலையாளை ஏவி, 'நீ எதிர்ப்படும் இடங்களிலெல்லாம் எங்கே மிகச் சிறந்த மதுவகை கிடைக்கிறதோ, அதன் வாயிலில் ஒரு குறிப்பெழுதி வை' என்றாராம். அவனும் சந்தோஷமாய், எல்லா கிராமங்கள்– நகரங்களிலுமிருந்த உணவகங்களை சல்லடையாகச் சலித்து, குடித்து, மிகச் சிறப்பானவற்றில் மட்டும் குறிப்பெழுதினானாம். அவன் மான்டியாகோ வந்தபோது, ஒரே இடத்தில் அமைந்த மூன்று ஹோட்டல்களிலும் மதுவகை சூப்பராக இருக்க, மூன்றின் மீதும் "EST..." "EST..." "EST" என எழுதி வைத்தானாம். இலத்தீன் மொழியில் "EST என்றால் "Best". போப் ஒவ்வொரு இடமாகச் சென்று, 'குறிப்' பறிந்து, மதுவருந்தி திளைத்து, கடைசியில் இங்கே வந்து மூன்று இடங்களிலும் முட்ட முட்டக் குடித்து, மோட்சத்தையே அடைந்து விட்டாராம்! திரும்பி வந்த வேலையாள், தன் எசமானருக்கு நிகழ்ந்த முடிவால் வருந்தி, அங்கே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பி, அதில் அவர் மரித்ததற்குக் காரணம் "EST...EST...EST" என எழுதி வைத்தானாம். அன்றிலிருந்து அந்த வகை மது இதே பெயரால் வழங்கப்படுகிறதாம்.


"அதை ருசிக்கும் வாய்ப்பு இன்றிரவு உங்களுக்கு ஃப்ரெஸ்காட்டியில் கிடைக்கப் போகிறது!" என முடித்து, சோர்ந்திருந்த உள்ளங்களில் புதுத் தெம்பைப் புகுத்தினார்.

கதை முடியும் தருவாயில், மலை உச்சியில் இருந்த போப்பின் 'ஸம்மர் பேலஸ்' வந்து விட்டது. பிரச்னைக் காலங்களில், ஸ்விஸ் கார்டுகளின் துணையுடன், மத குருமார்கள் இங்கே வந்து தங்கி விடுவார்களாம். இங்கே, 'ஸாண்டா மாஸா' என்ற அழகிய சின்ன சர்ச், ஒரு ஆப்ஸர்வேட்டரி, மீடியராலஜிகல் டிபார்ட்மெண்ட் எல்லாம் இருந்தன. கடைகளில் ஸ்கார்ஃப்தான் பிரதான விற்பனைப் பொருள். மாலைப் பொழுதின் இருள் மயக்கத்தில் மலை உச்சியிலிருந்த, கீழே சின்ன ஒளி விளக்குகளாய்ப் பனிச்சிட்ட கட்டடங்களைக் காண்பது பரவசமாயிருந்தது.

அங்கே சிறிது தூரம் பஸ்ஸில் பயணித்து, இன்னும் கொஞ்ச தூரம், கிராமிய மணம் கமழும் அந்தச் சிறிய ஊரில் காலார நடந்து, 'ஃப்ரெஸ்காடி'யில் அந்த உணவகத்தை அடைந்தோம். ஆண்களெல்லாம் சிறப்புப் பரிசுக் கனவுகளில் மிதந்த வண்ணமே நுழைந்தனர்.

(தொடரும்)

வித்வான் லுட்விக்




• லுட்விக்

‘பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தானிடமா சொல்வது?’ என்பார்கள். என்றாலும் சுகமாகத்தான் இருந்தது. ஜெர்மானியர் ஒருவர் நம் கர்நாடக சங்கீதத்தின் அருமை பெருமைகளைப் பட்டியலிடும்போதும், ‘நாத யோகம், சாஹித்யபாவம், தாளலயம்’ போன்ற சொற்றொடர்களை அனாயாசமாகப் பயன்படுத்தும்போதும்.

அதுவும் அவர் புல்லாங்குழலிசையில் பன்னிரண்டு வருடம் குருகுலம் பயின்றவர்! சமீபத்தில் கர்நாடக சங்கீதம் பற்றிய பெரியதொரு நூலை (Illustrated Companion of South Indian classical Music) எழுதியிருக்கிறார் என்பது மேலும் சுகமான ஆச்சர்யம்.

“இது மூன்று வருட உழைப்பின் பலன். கர்நாடக இசை எனும் நுட்பமான இசையை நேரிடையாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஏதாவது புத்தகம் இருக்கிறதா? என்று ஜெர்மனியில் பலர் என்னைக் கேட்டதுண்டு. ‘ஏன் நாமே அப்படி ஒரு நூலை எழுதக் கூடாது?’ என்று தோன்றியது. அதன் விளைவுதான் இந்த நூல். ‘சரியான காரியம் செய்திருக்கிறீர்கள்’ என்று அகாடமிக்காரர்கள் பாராட்டியபோது சந்தோஷமாக இருந்தது” என்றார் லுட்விக் பெஷ்.

இருபத்தியிரண்டு வயது வரை ‘ஹைடெல்பர் (தென் ஜெர்மனி) சர்ச் மியூசிக்’ என்றழைக்கப்படும் இசை வடிவத்தில் வல்லுனராகத் திகழ்ந்த இவரது இசைத்திறமையை அறிந்து, பல்வேறு நாடுகளின் இசைமுறைகளைப் பயில இவருக்கு ஜெர்மனி அரசு உதவித் தொகை அளித்தது. இத்தாலி,



ஆப்ரிக்கா, எகிப்து ஆகிய பல பகுதிகளின் இசையை ஓரளவு அறிந்துகொண்டு இந்தியா வந்தார். கர்நாடக இசையில் மயங்கி, ஸ்ரீராமச் சந்திர சாஸ்திரியிடம் புல்லாங்குழல் இசைப் பயிற்சி. பிறகு கலாட்சேத்ராவில் தொடர்ந்தது.

"இந்தியாவில் இசை என்பது தனியாக நிற்காமல் வாழ்க்கை முறையோடு ஒட்டி இருப்பது என்னை பிரமிக்க வைத்தது. சமீபத்தில் ஜெர்மனியில் மனநலம் பாதிக்கப்பட்ட நாற்பது சிறுவர்களுக்கிடையே சிறு கச்சேரி ஒன்று செய்தேன். "இந்தகனானந்தமேமி" என்ற பிலஹரி ராகத்தில் அமைந்த தியாகையர் கிருதியை நான் இசைத்தபோது, நடுவில் ஓரிடத்தில் அத்தனை சிறுவர்களும் எழுந்து மற்றவர்களுடன் கை கோத்துக்கொண்டு தேவதைகள் போல் நடனமாடத் தொடங்கினார்கள்! எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. காரணம் அந்தக் குறிப்பிட்ட வரியின் பொருள் இதுதான்: ''கடவுளின் புகழைப் பாடி ஆடுவதைவிட அதிக மகிழ்ச்சி தருவது எது?". நான் பலப்பல ஆண்டுகளாக இந்த இசையின் மீது கொண்ட நம்பிக்கைக்கு அன்று அழிக்க முடியாத சாட்சியாக அமைந்தது அந்த நிகழ்ச்சி."

குருகுலம் முடிந்து, குருவும் மறைந்துவிட, ஜெர்மனியில் வாசம்; அவ்வப்போது சென்னைக்கு விஜயம் என்றிருக்கிறார். அங்கிருக்கும்போது வாரக் கடைசிகளில் பெற்றோரைப் பார்த்து வருகிறாராம். கல்யாணம்?


"ஜெர்மனியில் அந்த வார்த்தைக்கு நடைமுறையில் பொருளில்லை. சட்டச் சிக்கல் எதற்கு என்று ஓர் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு சேர்ந்து வாழ்வதே நடைமுறையாக இருக்கிறது" என்று சின்ன விளக்கமளித்தவர், தான் அப்படி இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பிடித்த இசைக்கருவி?

"புல்லாங்குழல் என்ற பதில்தான் இயல்பு இல்லையா? ஆனாலும் தம்புராவைத்தான் என் விருப்பக் கருவி என்பேன். மனதை ஒருமைப் படுத்தும் அற்புதமல்லவா அது? சுருதி சேரும்போது ஒரு பிரவாகம் திடீரென்று பொங்கி, கண்ணிமைக்கும் நேரத்தில் வானவில் ஒன்று தோன்றுமே! ஆஹா, இதைத்தான் தியாகையர் நாதம் என்றார்." என்று அந்த ஜெர்மானியர் பேசப் பேச, நம் மனதுக்குள் தம்புராவின் சுருதி! ●

— ஜி.எஸ்.எஸ்.

இது என்ன பப்ளிசிடி ஸ்டன்ட்?



ஆழ்வார்பேட்டை, சி.பி. ஆர்ட் சென்டரில் இதற்கு முன்பு நடந்த கண்காட்சி எதற்காவது இத்தனை கூட்டம் வந்திருக்குமா என்பது சந்தேகம்தான். வயது வித்தியாசமின்றி கும்பல். (இளையதலைமுறையினர் எண்ணிக்கை சற்றே அதிகம்) ஹாலின் நடுவில் கராத்தே வீரர் ஹுசைனியை மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஹுசைனி, பாஸ்போர்ட் மோசடி வழக்கில் டெல்லியில் கைதாகி, சில நாள் திகார் ஜெயிலில் கழிக்கும்படியானது. அப்போது, ஜெயிலுக்குள் சந்தித்தவர்களையும், ஜெயில் காட்சிகளையும் சித்திரங்களாக்கி விட்டார். மொத்தம் வரைந்த முன்னூற்றுச் சொச்சம் படங்களில், நூற்றி முப்பத்திரெண்டை சி.பி.ஆர்ட் சென்டரில் கண்காட்சியாக வைத்திருந்தார்.

"கமல் வந்து கண்காட்சியைத் துவக்கி வைப்பார் என்று ஊர் முழுக்க போஸ்டர் ஒட்டினீர்கள். கமல் வரவில்லையே ஏன்?"

"திடீரென்று மும்பையில் கமலின் மனைவி சரிகாவுக்கு ஆபரேஷன். கமல் மும்பை செல்ல வேண்டியதாகி விட்டது. எனவே அவரை வைத்து துவக்க முடியவில்லை. எனவே, என் அம்மாவே துவக்கி வைத்து விட்டார்."

"ஏன் ஒரே ஒருநாள் மட்டும் இந்தக் கண்காட்சி நடக்கிறது?"

"ஒருநாளைக்கு மட்டுமே இந்த ஹால் கிடைத்தது. சூட்டோடு சூடாக நடத்தி விட வேண்டும் என்பதால், ஒரே ஒரு நாளானாலும் பரவாயில்லை என்று நடத்தினேன்."

"கைதாகி, ஜெயிலுக்குப் போவது என்பது ஒரு மனிதன் சந்தோஷப்படக்கூடிய விஷயமில்லை. ஆனால் கைதாகி, ஜெயிலில் நீங்கள் இருந்த போது, அங்கேயே படங்கள் வரைந்து, அதை வைத்துக் கண்காட்சி நடத்துவது பப்ளிசிடி ஸ்டன்ட்தானே?"

"ஒரு மனிதனின் வாழ்க்கையில் மேடு, பள்ளங்கள் சகஜம். கீழே விழுந்தவன், அப்படியே ஒடுங்கிப் போய் விடக் கூடாது. முன்னை விட அதிக வேகத்துடன், சக்தியுடன் எழுந்து நிற்க வேண்டாமா? புன்னகை மன்னன் படத்தில் இலங்கைத் தீவிரவாதியாக நடித்தேன் என்பதற்காக, என்னைத் தீவிரவாதியாகவே பார்ப்பது எப்படிச் சரியாகும்? அநியாயமாக என்னைக் கைது செய்து சிறைவைத்தார்கள். உலக அளவிலான கராத்தே போட்டியில் பங்கேற்க வேண்டிய தினத்தில் நான் திகார் ஜெயிலில்! அங்கே குப்பை அள்ளிக் கொட்ட நேர்ந்ததை விதி என்பதா? ஆனாலும், நான் மனம் ஒடிந்து போய் விடவில்லை. என் ஓவியத் திறமைக்கு நான் வேலை கொடுத்தேன். அதைத்தான் இங்கே அனைவரும் பார்க்கிறார்கள்."

"முன்னூறுக்கும் அதிகமான படம் வரைந்தீர்கள். ஏன் நூற்று முப்பது மட்டும் இங்கே உள்ளது?"

"மற்றவற்றை எல்லாம், சம்பந்தப்பட்டவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். பலருக்கு, கண்காட்சி முடிந்ததும், படங்களை ஜெராக்ஸ் எடுத்து அனுப்பி வைப்பதாய்ச் சொல்லி விட்டு வாங்கி வந்திருக்கிறேன்."

"ஜெயிலில் பார்த்த மறக்க முடியாத கேரக்டர்?"

"ஏராளம். ஒன்றை மட்டும் சொல்ல வேண்டுமானால், டெல்லியைச் சேர்ந்த ஓர் இளைஞன். தன் சகோதரி திருமணத்துக்காக, மூணு வருஷம் கடுமையாய் உழைத்து, சிறுகச் சிறுக சேமித்து வந்தான். மொத்த சேமிப்பான ஒன்பதாயிரம் ரூபாயை யாரோ திருடிக் கொண்டு போய் விட, சகோதரி திருமணம் தடைப்பட்டது. மனம் வெறுத்துப் போய், தன் கைகளைத் தன் கழுத்தில் வைத்து அழுத்தி, தற்கொலை செய்து கொள்ள முயன்றான். கைதாகி, தற்கொலை முயற்சி என்று ஜெயில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அவன் கதையைக் கேட்ட போது, என் மனம் வேதனைப்பட்டது. 'விடுதலையானதும், நேரே என்னிடம் வா! ஒன்பதாயிரம் நான் தருகிறேன்' என்று சொன்னேன் அவனிடம்."



"கண்காட்சியைப் பார்த்தவர்கள் சொன்ன மறக்க முடியாத கமெண்ட்?"

"உங்களை இன்னும் கொஞ்ச நாள் திகாரில் வைத்திருந்திருக்கலாம், இன்னும் நிறைய படங்கள் கிடைத்திருக்கும் என்று ஒருவர் எழுதி வைத்த கமெண்ட்தான்."

"ஹுசைனி! ஒரு சவால்! இந்தக் கண்காட்சியில் ஆன் தி ஸ்பாட் ஒரு காட்சியை வரையுங்களேன் பார்ப்போம்."

"ஓ! எஸ்!"

கறுப்பு ஸ்கெட்ச் பேனாவால், வெள்ளைத் தாளில் வரைய ஆரம்பித்தார். கண்காட்சிக்கு வந்திருந்த பார்வையாளர்கள், ஹுசைனியைச் சூழ்ந்து கொண்டு அவர் வரைவதையே பார்த்துக் கொண்டு நின்றனர். ஐந்து நிமிடம் நாற்பத்தி இரண்டு விநாடிகளில் ஒரு படம் வரைந்து முடித்தார். அந்தப் படம் - அருகில். ○

— மௌலி



''நீங்க ஏன் அதிகமா எழுதறதில்லை?''

''நான் எப்பவும்போலத்தான் எழுதிக்கிட்டிருக்கேன். பத்திரிகைக் காரங்கதான் என் எழுத்தைப் போடறதை நிறுத்திட்டாங்க!''

— ஞா. ஞானமுத்து



தப்பியோடும்

என்னருமை மனைவியின்
பிறந்த நாள் நினைவில்லை
உண்மையாகவே

பிரியமான பெரியவனின்
பிறந்தநாளும் கூடத்தான்
ஞாபகமில்லை

செல்லமான
சின்னவனின் பிறந்தநாளுக்காக
ஒருமுறை திருப்பதி கூட்டிக்
கொண்டு போய்
வந்திருந்தாலும் ஓர்மையில்லை
அதுவும்

அப்பா
பிறந்தநாளுக்கு
முன் கூட்டியே கோடி வேஷ்டி
சட்டை
வாங்கி வைத்துக் கொண்டாடுவது
வழக்கம்

அம்மா
அதிசயமானவள்
அவள் பிறந்தநாள்
அவளுக்கே தெரியாது
இவள்
பிறந்தநாளுக்கு
அடக்கமாகக் கோயிலுக்குப்
போய்விட்டு வந்து
பையவே பேசுவது ஒரு தனி
விசேஷம்

என் பிறந்த நாளே
எனக்கு எப்பொழுதாவதுதான்
ஞாபகத்துக்கு வருமென்றால்
யாராவது நம்புவார்களா
ஊரில்
இருந்தாலும் இல்லாவிட்டாலும்
இவள்தான்
சுவாமிக்கு அர்ச்சனை செய்துவிட்டு
வருவாள்
சின்ன வயதில்
குறுக்குத்துறை முருகன்
கோயிலுக்கு
அப்பா கூட்டிக் கொண்டு போனதும்
சர்க்கரைப் பொங்கல் போடச்
சொன்னதும் நினைவுகள்
அக்கா பிறந்த நாளோ
தம்பிகள் பிறந்த நாளோ
எதுவும்
எனக்கு நினைவில் இல்லை
கூடவே இருந்தும்
உன் மகன் பிறந்த நாளுக்கு
வாழ்த்துச் சொல்லவில்லையென்று
நள்ளிரவில் குற்றம்சாட்டுகிறாய்
நண்பா
சம்பிரதாயமாய்
வாழ்த்துச் சொல்ல முடியாதவன்
நான்
சாதுர்யமாய்
பேசித் தப்பிக்க முடியாதவனும் கூட
வேட்டையாடப்படுவதிலிருந்து
தப்பி ஓடிக் கொண்டிருக்கும் கவரி
மானுக்கு
விருந்துதான் பெரிதா
விநயம்தான் விஷயமா?

— விக்கிரமாதித்யன்

கவரிமான்



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications
Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka